REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜுன் 23 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 147 | Friday 23, June, 2023 | 20 பக்கங்கள் | 50/-


சீன வெளிநாட்டமைச்சரின் அழைப்பு;

## அமைச்சர் அலி சப்ரி சீனா பயணமாகிறார்



வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு சீனாவிற்கு செல்லவுள்ளார்.

சீன அரசவை உறுப்பினரும் வெளியுறவு அமைச்சருமான குயின் கேங்கின் அழைப்பின் பேரில், வெளிவிவகார அமைச்சர் 08

## ஜாமிஆ நளீமிய்யா கலாபீட பொன்விழா நிகழ்வுகள்

### BMICHஇல்; முக்கிய பிரமுகர்கள் பங்கேற்பு

### சுமார் 240 மாணவர்களுக்கு பட்டமளிப்பு

Golden Jubilee Since 1973
JAMIAH NALEEMIAH
50 Years of Excellence in Islamic Studies & Human Sciences

*அஜ்வாத் பாஸி*



பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் ஐம்பதாவது வருட பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொன்விழா நிகழ்வும் பட்டமளிப்பும் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் நளீமிய்யா கலாபீடத்தில் 7வருட கற்கை நெறியை பூர்த்தி செய்த சுமார் 240 மாணவர்கள் 'நளீமி' பட்டம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். 08

கனடா முன். பிரதமருடன் ஜனாதிபதி நேர்காணல்;

## கடன் நெருக்கடியை தீர்க்க விரிவான மூலோபாய திட்டம்




### நல்லிணக்க முயற்சிகள் தொடரும்

இலங்கையின் கடன் நெருக்கடியை தீர்க்கும் வகையில் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையை செப்டெம்பர் மாதத்துடன் முடிவுக்கு கொண்டுவருவதற்கு திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 08

## நல்லிணக்கம், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த இலங்கை நடவடிக்கை

### ஐ.நா பேரவையில் ஜெனீவா பிரதிநிதி ஹிமாலி சுட்டிக்காட்டு



நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதை இலக்காகக்கொண்டு நாட்டின் அரசியலமைப்புக்கு அமைவாக அரசாங்கத்தினால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் இலங்கை சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான நிலையில், நேற்று முன்தினம் புதன்கிழமை கூடிய மூன்றாம் நாள் அமர்வில் 08

பாதாள குழுக்களின் கோஷ்டி மோதலால் வன்முறைச் சம்பவங்கள்;

# அதிகரிக்கும் குற்றச்செயல்களை தடுக்க அதிரடி நடவடிக்கை

### IGP மற்றும் உயரதிகாரிகளுக்கு அமைச்சர் டிரான் அலஸ் உத்தரவு

**அங்கீகரிக்கப்படாத மற்றும் உரிமம் பெறாத துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களை வைத்திருப்போர் அதனை ஜூலை 31க்குள் ஒப்படைக்கவும் கால அவகாசம்**



தெற்கு மற்றும் மேல் மாகாணங்களில் நடைபெறும் வன்முறைக் குற்றங்களுக்கு எதிராக உடனடி மற்றும் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்கியுள்ளார்.

அதேபோல், அங்கீகரிக்கப்படாத அல்லது உரிமம் பெறாத துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களை வைத்திருப்போர் அவற்றை கையளிக்க ஜூலை 31 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக துப்பாக்கி சூட்டு சம்பவங்களும் குற்றச்செயல்களும் அதிகரித்துள்ள நிலையில் பாதாள உலக குழுக்கள் மத்தியில் மோதல்களை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் இரகசிய நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

கடந்த இருபத்து நான்கு மணித்தியாலங்களில் மூன்றிற்கும் மேற்பட்ட நபர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஹோமாகம, கொஸ்கம, கொட்டாவ பகுதிகளில் இந்த கொலைகள் இடம்பெற்றுள்ளன. எனினும் தற்போதைய நிலையை கட்டுப்படுத்த பொலிஸாரின் நடவடிக்கைகளை அதிகரிக்கவேண்டும் எனவும் 08




தேசிய தொழில் தினத்தை முன்னிட்டு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 'Industry 2023' நேற்று பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தேசிய தொழில் தினத்தை முன்னிட்டு தபால் திணைக்களம் தபால் முத்திரையையும் வெளியிட்டு வைத்தது. இந்நிகழ்வில் கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன, ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (படம்: மாலன் கருணாதிலக)



விசா காலத்தை மீறும் வெளிநாட்டவர்;

**அபராத தொகையினை அதிகரித்து புதிய வர்த்தமானி** 03

## ஜனாதிபதி ரணிலின் தலைமையில் இலங்கையில் சிறப்பான திட்டங்கள்

### ஆளுநர் செந்திலிடம் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் பாராட்டு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்கள் சிறப்பாக உள்ளதாகவும் ஐ.எம்.எப். நிதி வசதியை பெற்றுக்கொள்வதற்கும், கடன் மறுசீரமைப்புத் திட்டங்களின் போதும் இலங்கை ஜனாதிபதியின் வழிகாட்டலின் பேரில் அர்ப்பணிப்புடன் இலங்கை நாட்டின் அதிகாரிகள் பணியாற்றியதாகவும் ஷுன்சுகே டேக்கி ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் 08

நாடளாவிய ரீதியில் நிலவும் மருந்து தட்டுப்பாடு:

## மருந்து கொள்வனவு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு வழங்க எதிர்க்கட்சி தயார்

### சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

*லோரன்ஸ் செல்வநாயகம்*



நாட்டிலுள்ள பெரும்பாலான வைத்தியசாலைகளில் பாரிய மருந்து தட்டுப்பாடு நிலவுவதாகவும் மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதில் தமது கட்சியும் ஒத்துழைப்பை வழங்க தயாராகவுள்ளதாகவும் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று, நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாடு 08

## உருளைக்கிழங்கு கொள்கலனில் 16 Kg ஹெரோயின் கண்டுபிடிப்பு

### கராச்சியிலிருந்து வந்த கப்பலிலிருந்து சுங்கத்தினரால் மீட்பு



பாகிஸ்தானின் கராச்சியிலிருந்து வந்த கப்பலொன்றில் இருந்து சுமார் 65 கோடி ரூபா பெறுமதியான 16,193 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை இலங்கை சுங்கப் பிரிவினர் கைப்பற்றியதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது. துறைமுக சுங்கக் கட்டுப்பாட்டுப் பிரிவினருக்குக் கிடைத்த 08

ஜப்பானிய தொழில்சந்தை இலக்கு;

## பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பு முதல் ஜப்பானிய மொழி

### அமைச்சரவை அனுமதியும் கிடைத்துள்ளது – மனுஷ



*லோரன்ஸ் செல்வநாயகம்*

ஜப்பானிய தொழில் சந்தையை இலக்காகக் கொண்டு ஆரம்ப மட்டத்திலிருந்து பாடசாலை பாடத்திட்டத்தில் ஜப்பானிய மொழியை உள்ளடக்குவதற்கு விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார 08

## யாழ். புளி வாழைப்பழம் வாரம் ஒருமுறை துபாய்க்கு

### யாழ். விவசாயிகள் ஒரு இலட்சம் டொலர் சம்பாதிப்பு



யாழ் மாவட்டத்தில் பயிரிடப்படும் புளி வாழைப்பழங்களை வாரம் ஒருமுறை துபாய்க்கு ஏற்றுமதி செய்கின்றனர். இதன் மூலம் யாழ்ப்பாண விவசாயிகள் ஒரு இலட்சம் டொலர்களை சம்பாதித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வடமாகாண அதிகாரிகளுடனான விவசாயத் திட்டங்கள் 08

## பிரான்ஸ் கடற்படை கப்பல் இலங்கையில்

### ஒரு வாரம் தரித்து நிற்கும்



கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தந்துள்ள பிரான்ஸ் கடற்படை கப்பல், ஒருவாரம் வரையில் இங்கு தரித்து நிற்கவுள்ளதாக 08



**பல்கலை மாணவருக்கு உளரீதியான பிரச்சினைகள்**

உடனடியாக தீர்க்க வேண்டும் – சபையில் இம்தியாஸ் 03



**மருந்து தட்டுப்பாடு பிரச்சினைக்கு நிதியமைச்சுடன் பேசி விரைவில் தீர்வு**

தீர்வு கிடைக்காவிடின் பதவி துறக்கவும் தயார் 03



சஹ்ரானின் விரிவுரைகளில் பங்கேற்பு;

**ஆயுத பயிற்சி பெற்ற இளைஞர் CIDயினால் கைது** 03

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்;

## முன்னாள் சட்ட மா அதிபரை கைது செய்ய போவதில்லை

### நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் உறுதி



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் முன்னாள் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா தெரிவித்த கருத்துக்காக அவரைக் கைது செய்யப் போவதில்லை என சட்ட மா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளார். தம்மைக் கைது செய்வதை தடுக்குமாறு கோரி முன்னாள் 08

## இராணுவ பஸ்ஸில் மோதி மூன்று வயது சிறுமி பலி

### சிறுமியின் தாயாருக்கு படுகாயம்



இராணுவத்தினர் பயணித்த பஸ் ஒன்று மோதியதில் மூன்று வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பஸ் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் ஏற்பட்ட விபத்திலேயே சிறுமி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக பண்டாரகம பொலிஸார் தெரிவிக்கின்றனர். 08

துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள்;

## ஆறு மாத காலத்தில் 23 பேர் உயிரிழப்பு



2023ஆம் ஆண்டில் இதுவரை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 23 பேர் உயிரிழந்துள்ளதுடன் 17 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் 40 பதிவாகியுள்ளதாகவும், மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணத்தில் அதிகளவான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## மியன்மாரில் மூன்று தடவைகள் நிலநடுக்கம்

### 24 மணி நேரத்தில் தொடராக சம்பவம்



மியன்மார் நாட்டில் கடந்த 24 மணிநேரத்திற்குள் அடுத்தடுத்து 3 முறை நிலநடுக்கங்கள் உணரப்பட்டுள்ளன. நேற்று காலை 5.43 மணியளவில் யாங்கன் நகரில் சிறிய அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது 4.5 ரிச்டர் ஆக பதிவானது. இந்நிலநடுக்கம் 48 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டு இருந்தது என தேசிய 08

## டெங்கு அபாய வலயங்களாக 67 MOH பிரிவுகள் அடையாளம்

### இந்த வருடத்தில் இதுவரை 46,473 பேருக்கு டெங்கு



67 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள், டெங்கு அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதனிடையே, கொழும்பு மாவட்டத்தை மையமாகக் கொண்டு விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் சமூக வைத்திய நிபுணர் லஹிரு 08

**91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்**

# யாழ். அல்லைப்பிட்டியில் மனித எச்சங்களான மண்டையோடு, எலும்புகள், பற்கள் மீட்பு

யாழ். விசேட நிருபர்



யாழ். அல்லைப்பிட்டி பிரதேசத்தில் மனித எலும்புக்கூட்டு எச்சங்களான ஒரு மண்டையோடு, 2 எலும்புத் துண்டுகள், 27 பற்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை (21) முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப்பணியின் போது மீட்கப்பட்டுள்ளன.

அல்லைப்பிட்டி 2ஆம் வட்டாரத்தில் வீடு கட்டுவதற்காக கடந்த செவ்வாய்க்கிழமை (20) அத்திவாரம் வெட்டப்பட்ட போது, அதில் மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் வெளிப்பட்டன.

இது தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து , சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்று, அவ்விடத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலைகளை உடனடியாக நிறுத்தி, அவ்விடத்துக்கு எவரும் செல்லாதவாறு தடை விதித்தனர்.

இந்நிலையில், ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற அனுமதியுடன் அகழ்வுப்பணியை முன்னெடுக்க பொலிஸார் அனுமதி கோரியதையடுத்து, நீதவான் கஜநிதிபாலன் சம்பவ இடத்துக்குச் சென்று அகழ்வுப்பணியை முன்னெடுக்க உத்தரவிட்டு, அகழ்வுப்பணியை நேரில் கண்காணித்தார்.

இதன்போது மீட்கப்பட்ட மனித எலும்புக்கூட்டு எச்சங்களை பகுப்பாய்வுக்கு கொழும்புக்கு அனுப்பவுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், இம்மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் சுமார் 20 வருடங்கள் பழமை வாய்ந்தவையெனவும் தெரிவித்தனர்.

## வடக்கின் உதயம்

# முல்லைத்தீவின் குருந்தூர்மலைக்கு உதயகம்மன்பில எம்.பி. விஜயம்

மாங்குளம் குறூப் நிருபர்



முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர்மலைக்கு தென் பகுதியைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுடன் பாராளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில நேற்று முன்தினம் புதன்கிழமை (21) விஜயம் செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, குருந்தூர் மலை விகாரையில் பௌத்த தேரர்களுடன் மத வழிபாடுகளில் உதயகம்மன்பில எம்.பி. ஈடுபட்டதுடன், குருந்தூர்மலையிலுள்ள ஏனைய இடங்களையும் அவர் பார்வையிட்டுள்ளார்.

# யாழ். சமுர்த்தி பயனாளிகளிடம் சமூக நிகழ்வுகளுக்கு நிதி சேகரிக்க வேண்டாம்

அமைச்சர் டக்ளஸ் பணிப்புரை

கோப்பாய் குறூப் நிருபர்

யாழ். மாவட்ட சமுர்த்தி பயனாளிகளிடம் மது ஒழிப்பு, கொடிவாரத்துக்கு நிதி சேகரிப்பு செய்ய வேண்டாமென, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் பிரதேச செயலகங்களுக்கிடையில் நேற்று வியாழக்கிழமை (22) நடைபெற்ற சமுர்த்தி தொடர்பான கலந்துரையாடலின் போதே, உரிய அதிகாரிகளுக்கு அவர் இப்பணிப்புரையை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"சமுர்த்தி பயனாளிகளிடம் கொடிவாரம், மது ஒழிப்பு வாரமெனக் கூறி ஒவ்வொரு வருடமும் நிதி சேகரிப்பு இடம்பெறுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.



சமுர்த்தி பயனாளிகளிடம் இவ்விடயங்களுக்காக நிதி சேகரிக்கும் போது, அதை அவர்கள் வழங்காதுவிட்டால் சமுர்த்தி நிறுத்தப்படுமென்ற மன உணர்வு அவர்களுக்கு ஏற்படலாம். ஆகையால், இனிமேல் சமுர்த்தி பயனாளிகளிடம் சமூக மட்ட நிகழ்வுகளுக்காக நிதி சேகரிக்க வேண்டாம்" என்றார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் சமுர்த்தி பயனாளிகள் தெரிவில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும் நிலையில், அது தொடர்பாக மீளாய்வு செய்யப்பட வேண்டுமெனவும், அமைச்சர் தெரிவித்தார்.

வவுனியாவில்

# பல்வேறு திருட்டுகளுடன் தொடர்புடையவர் கைது

வவுனியா விசேட நிருபர்

பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக வவுனியா, சூசைப்பிள்ளையார்குளம் பிரதேசத்தில் 21 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக, வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

குருமன்காடு பிரதேசத்திலுள்ள 2 வீடுகளில் 9 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்கநகைகளும் வைரவபுளியங்குளம் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் தங்கநகைகளும் வவுனியா மில் வீதியிலுள்ள பிள்ளையார் கோயில் உண்டியலிலிருந்து பணம் மற்றும் ஒலிபெருக்கியும் திருட்டுப் போனதாக வவுனியா குற்றத்தடுப்புப்பிரிவு பொலிஸில் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்தனர்.

இத்திருட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்திய பொலிஸார், இச்சந்தேகநபரை கைது செய்ததுடன், இவரிடமிருந்து 10 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கு அடைவு வைக்கப்பட்ட தங்க நகைகளையும் ஒலிபெருக்கியையும் மீட்டனர்.

இச்சந்தேகநபரிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வல்லை–தொண்டமானாறு வீதியில் உருக்குலைந்த சடலம் மீட்பு

யாழ். விசேட நாகர்கோவில் விசேட நிருபர்கள்

யாழ்ப்பாணம் வல்லை தொண்டமானாறு வீதியில் உருக்குலைந்த நிலையில் ஆண் சடலமொன்று நேற்று வியாழக்கிழமை (22) காலை பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இது தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்று சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலம் அடையாளம் காண முடியாத வகையில் உருக்குலைந்து காணப்படுவதாக, வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

# தமிழக மீனவர் 22 பேர் நெடுந்தீவு கடலில் கைது

யாழ். விசேட நிருபர்

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் தமிழ்நாட்டு கடற்றொழிலாளர்கள் 22 பேர், யாழ். நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை (21) இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் தாம் ரோந்துப் பணியில் ஈடுபட்ட போதே, 3 படகுகளுடன் இவர்களை கைது செய்துள்ளதாக, கடற்படையினர் தெரிவித்தனர். இவர்கள் 22 பேரும் காங்கேசன்துறைக்கு அழைத்து வரப்பட்டு விசாரணை நடத்தப்பட்ட பின்னர், கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் துறை திணைக்கள அதிகாரிகளிடம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# யாழ். கொடிகாமத்தில் வெடிபொருட்கள் மீட்பு

சாவகச்சேரி விசேட நிருபர்



யாழ். கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விடத்தற்பளை கரம்பகம் பிரதேச வீதியோரத்தில் பையொன்றில் பொதி செய்யப்பட்ட நிலையில் வெடிபொருட்கள் சில நேற்று வியாழக்கிழமை (22) மீட்கப்பட்டன.

இந்தப் பொதியை அவதானித்த சிலர், இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். இதனைத் தொடர்ந்து, இந்த வெடிபொருட்களை மீட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர். இந்த வெடிபொருட்களை இரவு வேளையில் அவ்விடத்தில் கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கலாமெனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# அம்பன் அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஜயம்

நாகர்கோவில் விசேட நிருபர்

அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் புதன்கிழமை (21) காலை சென்று, அப்பாடசாலையிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

அதிபர் எஸ்.வாகீசன் மற்றும் ஆசிரியர்களுடன் அமைச்சர் கலந்துரையாடியுள்ளார்.

அப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்களை சேர்ந்தவர்கள் என்பதால், அம்மாணவர்களுக்கான வாழ்வாதார உதவி தொடர்பாக அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

அத்துடன், பாடசாலையிலுள்ள பழைய மலசலகூடத்தை திருத்தியமைப்பதற்கு உதவுமாறும் பாடசாலை சமூகத்தால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இவை தொடர்பாக உதவுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.



# கடவுச்சீட்டு கைவிரல் பதிவு யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

சாவகச்சேரி விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்



கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்கான கைவிரல் அடையாளத்தை பதிவு செய்யும் நடைமுறை யாழ்ப்பாணத்தில் தென்மராட்சி, பருத்தித்துறை பிரதேச செயலகங்களில் நேற்று முன்தினம் புதன்கிழமை (21) உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அவ்வப் பிரதேச செயலாளர்களின் தலைமையில் இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்கு ஒன்லைனூடாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், விண்ணப்பதாரிகளின் கையடக்கத் தொலைபேசிக்கு அனுப்பப்படும் குறுந்தகவலுக்கமைய, அவர்கள் பிரதேச செயலக ஆட்பதிவுக் கிளைக்குச் சென்று, தமது கைவிரல் அடையாளத்தை பதிவு செய்துகொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் யோகா தினம்



யாழ். விசேட நிருபர்

யாழ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சர்வதேச யோகா தின நிகழ்வும் வாராந்த ஒன்றுகூடலும் அக்கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை (22) காலை நடைபெற்றது.


இந்நிகழ்வில் ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமி கலந்து கொண்டதுடன், 'ஆன்மிக நோக்கில் கல்வி' எனும் தலைப்பில் உரையாற்றினார்.

இதன்போது, யாழ். இந்திய துணைத் தூதரகத்தால் நடத்தப்பட்ட யோகாசன பயிற்சியில் கலந்துகொண்டோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



யாழ். மாவிட்டபுரம், கீரிமலைக்கு செல்லும் பகுதியில் வசித்து வந்த 15க்கும் மேற்பட்ட பொதுமக்கள், குடிநீர் வசதியின்மையால் சில மைல் தூரம் நடந்து சென்று குடிநீர் பெற்று வந்தனர். இம்மக்களின் நிலைமையை கவனத்திற்கொண்டு, கனடா மெற்றோலான் மீடியா ஊழியர்களின் நிதியுதவியுடன் அம்மக்களுக்கு கலாநிதி நா.தனேந்திரன் குழாய்க் கிணறொன்றை அண்மையில் அமைத்துக் கொடுத்தார்.

# நடிகை பூர்விகா நடித்த "லூஸி" வெள்ளவத்தை ரொக்ஸி தியேட்டரில்



ஒரு பெண் வாழ்வில் சந்திக்கும் போராட்டங்கள், எதிர்கொள்ளும் சவால்கள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து ஒரு பெண்ணால் இயக்கப்பட்ட திரைப்படம் லூஸி. பெண்ணை மையமாக வைத்து தயாரிக்கப்பட்டதால் இத்திரைப்படத்தில் கதாநாயகிக்குத் தான் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இத்திரைப்படத்தின் கதாநாயகியாக நடிகை பூர்விகா நடித்துள்ளார்.

நடிகை பூர்விகா நடித்துள்ள இத்திரைப்படம் நாளை 24ஆம் திகதி மாலை 4.15 மணிக்கு கொழும்பு 06, வெள்ளவத்தையிலுள்ள ரொக்ஸி தியேட்டரில் திரையிடப்படவுள்ளது. நடிகை பூர்விகா அண்மையில் லேக் ஹவுஸ் நிறுவனத்தில் உள்ள தினகரன், வாரமஞ்சரி ஆசிரிய பீடத்திற்கு வருகை தந்திருந்தார்.

இங்கு இவரது பேட்டியொன்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டது. இதில் முதலாவதாக முன்வைக்கப்பட்ட கேள்வி பூர்விகாவின் பூர்விகா பற்றியாகும். இவ்வாறு அவரது வயது பற்றி கேட்கப்பட்டபோது வயதை கேட்கக்கூடாது என்று சிரித்துக் கொண்டே பதிலளித்தார். ஆனால் பின்பு அவரே வயதை கூறினார். இவ்வாறு அவரது திருமணம் பற்றியும் அவரிடம் கேட்கப்பட்டபோது மிகவும் புத்திசாதுர்யமாக பதிலளித்தார். இவர் நடித்த திரைப்படத்தை இலங்கைக் கலைஞர்களை கௌரவப்படுத்துமாறு இந்தப் படத்தில் சம்பந்தப்பட்ட அனைத்து கலைஞர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். இவரது பேட்டியை சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் துரைராசா சுரேஷ் ஒளிப்பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# அனலைதீவு வைத்தியசாலையில் அத்துமீறி நுழைந்தவர் கைது!

யாழ். விசேட நிருபர்

யாழ். அனலைதீவு பிரதேச வைத்தியசாலையினுள் இரு பொலிஸாருடன் அத்துமீறி நுழைந்து, வைத்தியர் மற்றும் தாதியர்களுடன் முரண்பட்டு, சொத்துகளுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் புலம்பெயர்வாசி ஒருவர் நேற்று முன்தினம் புதன்கிழமை (21) பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

வெளிநாட்டிலிருந்து வந்து அனலைதீவில் தங்கியிருந்த இச்சந்தேகநபர், கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரு பொலிஸாருடன் இவ்வைத்தியசாலையினுள் அத்துமீறி நுழைந்து, கடமையிலிருந்த பெண் வைத்தியர் மற்றும் பெண் தாதியர்களுடன் முரண்பட்டதுடன், வைத்தியசாலை தளபாடங்களுக்கும் சேதம் விளைவித்துவிட்டு அங்கிருந்து சென்றார். இது தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் அனலைதீவு பிரதேச வைத்தியசாலை நிர்வாகத்தினர் முறைப்பாடு செய்ததுடன், இச்சம்பவம் தொடர்பான காணொளியையும் பொலிஸாரிடம் வழங்கினர்.

அத்துடன் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, வடமாகாண சுகாதார பணிமனையிலும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில் இச்சந்தேகநபரை பொலிஸார் கைது செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை, இவருடன் சென்ற இரு பொலிஸாருக்கு எதிராக இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமை தொடர்பாக அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜுன் 23 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.33
லுஹர் - 12.14
அஸர் - 03.41
மஃரிப் - 06.29
இஷா - 07.45

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஆனி 09
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# யாழ்ப்பாணத்திற்கும் மதுரைக்கும் விரைவில் விமான சேவை

## தற்போதைய நான்கு நாள் சேவைகளை ஏழு நாட்களுக்கும் தொடர நடவடிக்கை - சபையில் அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா

**லோரன்ஸ் செல்வநாயகம்**

யாழ்ப்பாணத்திற்கும் இந்தியாவுக்குமி டையில் தற்போது நான்கு தினங்கள் இடம் பெறும் விமான சேவைகளை வாரத்தின் ஏழு நாட்களிலும் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என விமான சேவைகள் மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதே வேளை, மதுரைக்கும் பலாலிக்கும் இடையிலான விமான சேவைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்த அவர், மேலதிக விமான சேவைகளை நடத்துவதற்கு முன் வரும் நிறுவனங்களுக்கு அதற்கான அனுமதியை வழங்கத் தயாராக வுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற அண்மையில் ஜனாதிபதி ஆற்றிய உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்

நாட்டின் சுற்றுலாத்துறை முன்னேற்றத்திற்கு விமான சேவைகள் மற்றும் கப்பல் துறை மூலம் பெரும் பங்களிப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் வடக்கில் காங்கேசன் துறை துறைமுகத்தில் அரசாங்கத்தின் செலவில் 450 மில்லியன் ரூபா செலவில் முனையத்திற்கான கட்டிட நிர்மாணப் பணிகள் இடம் பெற்றுள்ளன. காங்கேசன்துறைக்கான முதலாவது கப்பல் அண்மையில் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்தது. இந்தியாவின் சுற்றுலாப் பயணிகள் சுமார் 500 பேருக்கு அதிகமானோர் அதில் வருகை தந்திருந்தனர்.

இந்த கப்பல் சேவையை வாரத்திற்கு ஒரு முறை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு இது சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது.



வடக்கு மக்களுக்கு அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிக்கிணங்க பலாலி விமான நிலையத்தை நாம் நிர்மாணித்து வழங்கியுள்ளோம். வாரத்திற்கு நான்கு தினங்கள் விமான சேவைகள் இடம் பெறுகின்றன. எதிர்வரும்

08

# இந்தியாவின் 'ஐஎன்எஸ் வாகிர்' நீர் மூழ்கி கப்பலை அமைச்சர் பார்வையிட்டார்



நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்த இந்திய கடற்படைக்குச் சொந்தமான 'ஐஎன்எஸ் வாகிர்' என்ற கப்பலை பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் பார்வையிட்டார்.

கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்ற மேற்படி நீர்மூழ்கிக் கப்பலை பார்வையிட (21) சென்ற பதில் பாதுகாப்பு அமைச்சரை, நீர் மூழ்கிக் கப்பலின் கட்டளைத் தளபதி கொமாண்டர் திவாகர் எஸ் வரவேற்றார்.

இந்த விஜயத்தின்போது பதில் பாதுகாப்பு அமைச்சர் மேற்படி நீர் மூழ்கி கப்பலில் சேவையாற்றும் அதிகாரிகளுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

இதேவேளை கப்பலின் தொழில்நுட்ப மற்றும் கடல்சார் திறன்கள் குறித்து அமைச்சருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

08

# இந்த வருடத்தில் 3 இலட்சம் பேரை வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு அனுப்புவதே இலக்கு

## அமைச்சர் மனுஷ நாணயக்கார சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மூன்று இலட்சம் இலங்கையர்களை இந்த வருடத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக அனுப்புவதே இலக்காகும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் தயாசிறி ஜயசேகர எம் பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

இதுவரை வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக 41நாடுகளில் இருந்து ஓடர்கள் கிடைத்துள்ளன.

இந்த நாடுகளில் இருந்து 12 லட்சத்து 73 ஆயிரத்து 428 பேருக்கான ஓடர்கள் கிடைத்துள்ளன. அந்த வகையில் 3 இலட்சம் பேரை இந்த வருடத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக அனுப்புவதற்கான இலக்கையே நாம் கொண்டுள்ளோம்.

அனைத்து நாடுகளுக்கும் வேலை வாய்ப்புக்காக செல்லும் போது அந்தந்த நாடுகளில் புழக்கத்தில் உள்ள மொழிகளை தெரிந்திருப்பது சிறந்ததாகும்.

ஜப்பானுக்கு செல்வோருக்கு ஜப்பான் மொழியும் கொரியாவுக்கு செல்வோருக்கு கொரிய மொழியும் தெரிந்திருப்பது அவசியமாகும். மத்திய கிழக்கு மற்றும் அரபு நாடுகளில் அரபு மொழி தெரிந்திருத்தல் அல்லது பொதுவாக ஆங்கில மொழி தெரிந்திருத்தல் அவசியமாகும்.

# எதிர்க்கட்சியில் பலர் சஜித்தோடு இல்லை; சுபநேரத்தில் அரசில் இணைந்து கொள்வர்

## அமைச்சர் கஞ்சன விஜேசேகர சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எதிர்க்கட்சியில் பலர் சுப நேரத்தில் அரசாங்கத்தோடு இணைந்து கொள்ள காத்திருக்கின்றனர் என்றும் மனோ கணேசன்,திகாம்பரம் ஆகியோர் மனதளவில் ரணில் விக்ரமசிங்கவின் பக்கமே உள்ள நிலையில் அவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடு நெருக்கடியான நிலையை எதிர்கொண்ட போது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சஜித் பிரேமதாசவிடம் அரசாங்கத்தை ஒப்படைக்காமல் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைத்தமை தொடர்பில் மகிழ்ச்சியடைய முடிகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பத்திரிகை செய்தி வாசிக்கும் ஊடகவியலாளரைப் போன்றே பாராளுமன்றத்தில் உரையாற்றுகின்றார்.

இவ்வாறு செய்தால் சிறப்பாக இருக்கும் என்ற ஊகத்தில் பேசுகின்றாரே தவிர உறுதியாக எதையும் சபையில் தெரிவிப்பதில்லை.

நெருக்கடியான சூழலில் பொறுப்புக்களை ஏற்பது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் கருத்துக்களை முன்வைக்கின்றார். எனினும், பொருளாதார நெருக்கடி

08

# மருந்து தட்டுப்பாடு பிரச்சினைக்கு நிதியமைச்சுடன் பேசி விரைவில் தீர்வு

## தீர்வு கிடைக்காவிடின் பதவி துறக்கவும் தயார்-அமைச்சர் கெஹெலிய

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துகளுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் நிதியமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானித்துள்ளதாகவும் உரிய தீர்வு கிடைக்காவிட்டால் தொடர்ந்தும் அமைச்சுப் பதவியை தொடர்வது தமது எதிர்பார்ப்பல்ல என்றும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

மருந்துப் பொருட்கள் கொள்வனவு தொடர்பாக கடந்த 9 மாதங்களாக பெறுகை கோரல் சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அது தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டு அமைச்சரவையும் அதற்கான அனுமதியை வழங்கியிருந்தது.

அதற்கிடையில் ஒருசில தரப்பினர்

08

# பல்கலை மாணவருக்கு உளரீதியான பிரச்சினைகள்

## உடனடியாக தீர்க்க வேண்டும் சபையில் இம்தியாஸ்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பல்கலைக்கழக மாணவர்கள் உளரீதியாக பாதிக்கப்பட்டு தற்கொலை முயற்சிகளிலும் ஈடுபடும் நிலையில் அந்த சிக்கல்களுக்குத் தீர்வு காண கல்வியமைச்சு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த ஐந்தரை மாத காலப்பகுதியில் பேராதனை பல்கலைக்கழக மாணவர்களில் ஐவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதை சுட்டிக்காட்டிய அவர், மாணவர்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த பிரச்சனைக்கு உடனடி தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் கேள்வியொன்றை எழுப்பிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர்களுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டேன். பல்கலைக்கழக மாணவர்கள் நடைமுறையில் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில்பாராளுமன்றம் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினார்கள்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் பெரும்பாலானோர் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

08

## விசா காலத்தை மீறும் வெளிநாட்டவர்

# அபராத தொகையினை அதிகரித்து புதிய வர்த்தமானி



விசா காலத்தை மீறி இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களின் அபராதத் தொகையை திருத்தியமைத்து புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி பொது பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது. 14 நாட்கள் வரை தங்கியதற்கான அபராதம் 250 டொலர்களாகவும், 14 நாட்களுக்கு மேல் அபராதம் 500 டொலர்களாகவும் திருத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அசல் விசாவின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்த நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் இலங்கையை விட்டு வெளியேறுபவர்கள், புதிய

08

## சஹ்ரானின் விரிவுரைகளில் பங்கேற்பு

# ஆயுத பயிற்சி பெற்ற இளைஞர் CIDயினால் கைது

சஹ்ரானின் தீவிரவாத விரிவுரை மற்றும் ஆயுதப் பயிற்சிகளில் கலந்து கொண்ட இளைஞர் ஒருவர் நான்கு வருடங்களின் பின் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதலுக்கு முன்னாயத்தமாக, ஹம்பாந்தோட்டை செட்டிகுளம் பகுதியில் மொஹமட் சஹ்ரான் நடத்திய தீவிரவாத விரிவுரை மற்றும் ஆயுதப் பயிற்சி முகாமில் பங்கேற்றதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த 23 வயது இளைஞரை சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்கும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாவல திறந்த பல்கலைக்கழகத்தில் கணனி பாடநெறியில் கல்வி கற்கும் கம்பளை வெலம்படையைச் சேர்ந்த அஜ்மல் சஹீர் அப்துல்லா என்ற 23 வயதுடைய இளைஞரே சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்கும் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவராவார்.

மொஹமட் சஹ்ரான் 2018 ஜூலை 21 மற்றும் 22ஆம் திகதிகளில் ஹம்பாந்தோட்டை செட்டிகுளம் பிரதேசத்தில் நடத்திய தீவிரவாத விரிவுரைகள் மற்றும் ஆயுதப்பயிற்சி முகாமில் சந்தேக நபர் கலந்து கொண்டுள்ளமை, தொலைபேசி

08


நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகார சபை
நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தான செல்ல கதிர்காமத்தில் அமைந்துள்ள காணித் துண்டுகளை கலப்பு அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்வி கோரல்



Base Value: Rs. 5,530,000/-

காணிப் பரப்பளவு : 0ஏக் 3றூட் 01.70 பேர்ச் (12170 பேர்ச்)
குத்தகை காலம் : குத்தகை அடிப்படையில் 30 வருடங்கள்
பிணை முறி : 100,000.00 ரூபா
கேள்வி முன்னோடிக் கூட்டம் : 2023 ஜூலை மாதம் 19ஆம் திகதி

இதில் ஆர்வம் காட்டும் விண்ணப்பதாரர்கள் (முதலீட்டாளர்கள் / அபிவிருத்தியாளர்கள்) தொடர்புடைய மேலதிக தகவல்களை உள்ளடக்கிய முதலீட்டுப் பிரேரணைகள் கோரும் ஆவணமொன்றை பெற்றுக்கொள்வதற்கு பெறுமதி சேர்வரி (VAT) உள்ளடக்கிய மீளளிக்கப்படாத 15,000.00 ரூபா தொகையை பத்தரமுல்ல, செத்சிறிபாய, கட்டம் 1, 6வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவிற்குச் செலுத்தி, 8ஆம் மாடியில் அமைந்துள்ள அந்த அதிகார சபையின் ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவிலிருந்து அல்லது கதிர்காமம் கந்தசுரிந்துகமவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் கதிர்காமம் உப அலுவலகத்திற்கு கொடுப்பனவைச் செய்து அந்த அலுவலகத்திலிருந்து 2023 ஜுன் மாதம் 28ஆம் திகதி முதல் 2023 ஜுலை மாதம் 28ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

அபிவிருத்திப் பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளல் 2023 ஆகஸ்ட் மாதம் 03ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் கிடைக்கப்பெற்றுள்ள முன்மொழிவுகள் பத்தரமுல்ல ''செத்சிறிபாய'', 6ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவில் அவ்வேளையிலேயே திறக்கப்படும். இதில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களை பணிப்பாளர், ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவு, 8ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபை, ''செத்சிறிபாய'', பத்தரமுல்ல அல்லது கதிர்காமம் உப அலுவலகம், நகர அபிவிருத்தி அதிகார சபை, கந்தசுரிந்துகம, கதிர்காமம் எனும் முகவரியில் அல்லது துரித தொடர்பு தொலைபேசி: 011-2875921, 011-2875916-20 நீடிப்பு 2960-2967 கையடக்கத் தொலைபேசி: 0711429870, தொலைநகல் இல. 011-2875900 மின்னஞ்சல் முகவரி: directorred@uda.gov.lk இணையதளம்: www.uda.gov.lk என்பவற்றின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர், வருமானக் கேள்விக் குழு (கீழ்நிலை), நகர அபிவிருத்தி அதிகாரசபை, 6ஆம் மாடி, ''செத்சிறிபாய'' பத்தரமுல்ல.


தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.06.21
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 5152
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 18,362,834.00
ஆங்கில எழுத்து: S
வெற்றி இலக்கங்கள்: 5 1 4 2 3 2

**கொவிசெத** (Govisetha)
சீட்டிழுப்பு இலக்கம்: 3394
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 64,702,275.20
ஆங்கில எழுத்து: Q
வெற்றி இலக்கங்கள்: 11 23 28 34

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம்: 1500
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 331,197,290.00
ஆங்கில எழுத்து: S
சுப்பர் இலக்கம்: 14
வெற்றி இலக்கங்கள்: 18 21 25 69
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

**ராசி சுப பலன்** (Handahana)
சீட்டிழுப்பு இலக்கம்: 461
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 2,800,616.40
வெற்றி இலக்கினம்: சிம்மம்
வெற்றி இலக்கங்கள்: 17 46 51 62
விசேட இலக்கினம்: சிம்மம்

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம்: 1182
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 96,078,552.80
ஆங்கில எழுத்து: J
வெற்றி இலக்கங்கள்: 13 35 38 43

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 1607
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ.12,796,013.12
வெற்றி இலக்கினம்: கன்னி
வெற்றி இலக்கங்கள்: 7 0 3 6 3 0

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 201.29 | 215.00 |
| கனடியன் டொலர் | 224.47 | 239.42 |
| யூரோ | 324.45 | 344.53 |
| ஜப்பான் யென் | 2.1010 | 2.2276 |
| சிங்கப்பூர் டொலர் | 220.86 | 235.11 |
| ஸ்ட்ரேலிங் பவுன் | 379.69 | 402.23 |
| சுவிஸ் பிராங்க் | 329.51 | 352.41 |
| அமெரிக்க டொலர் | 298.47 | 314.49 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 811.99 | கட்டார் ரியால் | 84.04 |
| குவைத் டினார் | 996.76 | சவூதி ரியால் | 81.61 |
| ஓமான் ரியால் | 795.16 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 83.34 |

# பொன்விழாக் காணும் ஜாமிஆ நளீமிய்யா




Golden Jubilee
Since 1973
JAMIAH NALEEMIAH
50 Years of Excellence in Islamic Studies & Human Sciences


அறிவுத் தந்தை நளீம் ஹாஜியார்

## ஜாமிஆ நளீமிய்யாவின் தோற்றமும் இலக்குகளும்

ஆழமான கல்வி ஞானமும் அறிவார்ந்த அணுகுமுறையும் பரந்த நோக்கும் ஆன்மீக – பண்பாட்டுப் பயிற்சியும் கொண்ட புத்திஜீவித்துவ பரம்பரையொன்றை உருவாக்கும் நோக்குடன் கொடைவள்ளல் அல்ஹாஜ் எம்.ஐ.எம். நளீம் அவர்களால் பேருவளையில் 19.08.1973 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட ஜாமிஆ நளீமிய்யா இவ்வருடம் அதன் பொன்விழாவைக் கொண்டாடுகிறது. இத்தகைய ஒரு கலாநிலையத்தை உருவாக்க வேண்டியது காலத்தின் தேவை என்பதை உணர்ந்த அல்ஹாஜ் எம்.ஐ.எம். நளீம் அவர்கள், அக்காலத்தில் முஸ்லிம் சமூகத்தில் இருந்த ஏ.எம்.ஏ. அஸீஸ் போன்ற புத்திஜீவிகளின் வழிகாட்டல்கள், ஆலோசனைகளுடன் ஜாமிஆ நளீமிய்யாவை நிறுவினார்கள்.

ஜாமிஆவின் தோற்றம் பற்றி எழுதும் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி அவர்கள்: 'அல்லாஹ் தனக்கு வழங்கிய செல்வத்தை அவனது திருப்தியைப் பெறும் வகையில் பயன்படுத்தல் வேண்டும் என்ற கொள்கையைத் தனது வாழ்க்கையின் தத்துவமாக வரித்துக் கொண்ட நளீம் ஹாஜியார் அவர்கள், மஸ்ஜித்களை நிறுவுதல், ஏழைகளுக்கு வாழ்வளித்தல், கல்வியைத் தொடர முடியாதவர்களுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கல் போன்ற பணிகளில் தனிப்பட்ட முறையில் ஈடுபட்டு வந்தாலும், அவரது உள்ளத்தில் அவரது சமூக, சன்மார்க்கப் பணிகளுக்கு சிகரம் அமைக்கும் ஒரு மகத்தான எண்ணம் கருக்கொண்டது. அதுவே இஸ்லாமிய சன்மார்க்கக் கல்விக்கான கல்வி நிலையம் ஒன்றை உருவாக்குதல் வேண்டும் என்ற எண்ணமாகும்.'

'தனது எண்ணக்கருவைச் செயல்படுத்தவும் இலட்சியக் கனவை நிறைவேற்றவும் கல்வித்துறையிலும் ஏனைய துறைகளிலும் அறிவும் அனுபவமும் உடையவர்களின் ஆலோசனையைப் பெறுவதன் அவசியத்தை அவர் உணர்ந்தார். இந்த நிலையிலேயே நளீம் ஹாஜியார் முஸ்லிம் சமூகத்தின் சிறந்த கல்விமான்களுள் ஒருவராக விளங்கிய மர்ஹூம் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்களைச் சந்திக்கின்றார். இக்கருத்தை நளீம் ஹாஜியார் அவர்கள் முஸ்லிம் சமூகத்தில் மிகப் பரந்த மனப்பான்மையும் விரிந்த சிந்தனைப் போக்கும் கொண்ட ஒரு மார்க்க அறிஞராகவும் நளீம் ஹாஜியாரின் மிக நெருங்கியவராகவும் இருந்த மஸ்ஊத் ஆலிம் அவர்களிடம் வெளியிட்டபோது, அவர் இதை மிகவும் வரவேற்று, அதற்கு மேலும் உற்சாகமூட்டி தூண்டுதல் அளித்தார்' எனத் தெரிவிக்கிறார்.


பாரம்பரிய இஸ்லாமிய கலாஞானங்களோடு நவீன சிந்தனைப் போக்குகளையும் இந்த நாட்டின் பொதுக் கலைத் திட்டத்தையும் அரபு, ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழியறிவையும் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குவதே ஹாஜியார் அவர்களதும் இப்பணிக்காக அவருடன் கைகோர்த்த சீனன் கோடையையும் நாட்டின் பலபாகங்களையும் சேர்ந்த தனவந்தர்கள் மற்றும் கல்விமான்களதும் இலக்காக இருந்தது.

ஜாமிஆ நளீமிய்யா 1973 இல் தொடங்கப்பட்டபோது, வெளியிடப்பட்ட ஜாமிஆ பற்றிய கையேட்டில் அதன் இலக்கு பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது;

'இஸ்லாத்தையும் அதன் தத்துவம், கோட்பாடு, கொள்கைகளையும் ஆழ்ந்து கற்று அதேநேரத்தில் நல்ல சிந்தனைகள், தத்துவங்கள் என்பனவற்றிலும் சிறந்த அறிவுபடைத்த உலமாக்களை உருவாக்க வேண்டிய ஓர் அவசரத் தேவை இன்று தோன்றியுள்ளது. இத்தகைய உலமாப் பெருமக்களின் வழிகாட்டுதலும் தலைமையுமே மிக அவசியமாகத் தேவைப்படுகின்றன...''


ஜாமிஆ நளீமிய்யாவின் பாடத்திட்டம் பற்றியும் அக்கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்லாமியக் கல்வியோடு பொதுக் கல்வியையும் பயிலக்கூடிய விதத்தில் பாடத்திட்டம் அமையுமென்றும் குர்ஆன், ஹதீஸ், இஸ்லாமிய சட்டக்கலை, இஸ்லாமியப் பண்பாடு, தத்துவஞானம், நாகரிகம், மதங்கள், நவீனசிந்தனைகள், தத்துவங்கள் பற்றிய ஒப்பீட்டு ஆய்வு என்பன பாடத்திட்டத்தில் இடம்பெறுமெனவும் பாடத்திட்டத்தை அமைப்பதிலும் காலத்துக்குக் காலம் அதனைப் புதுப்பிப்பதிலும் இஸ்லாமிய உலகின் புகழ்பெற்ற ஜாமிஆக்களின் படிப்பினைகளும் அனுபவங்களும் கருத்திற்கொள்ளப்படுமெனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்லாமியக் கலைகளையும் சமூக – மானிடவியல் கலைகளையும் ஒன்றிணைத்த இப்பரிசோதனை முயற்சி குறுகிய காலத்திலேயே வெற்றியடைந்து, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நன்கறியப்பட்ட கல்விமான்களின் பாராட்டையும் பெற்றுக் கொண்டது.

நளீமிய்யாவின் கல்விசார் இலக்குகள், கல்வித் திட்டம் பாடப்பரப்பு என்பன சிறந்த கல்விப் புலமும் அறிவார்ந்த அணுகு முறையும் பரந்த நோக்கும் ஆன்மீக–பண்பாட்டுப் பயிற்சியும் கொண்ட அறிஞர் பரம்பரையொன்றை உருவாக்கும் நோக்கைக் கொண்டவையாகும். அதன் பட்டதாரிகள் இலங்கையின் பல்லின சமூகங்களின் வேறுபட்ட கலாசாரப் பெறுமானங்களை மதிக்கும் பரந்த மனப்பான்மையையும் மனித நேயத்தையும் சிறந்த தலைமைத்துவப் பண்புகளையும் பெற்றிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.




### உட்கட்டமைப்பு

ஜாமிஆ சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளையும் மாணவர்களது ஆத்மீக, உடல், உள ஆரோக்கியத்தை கருத்திற்கொண்டு ரம்யமான, கவர்ச்சியான, பசுமையான, அமைதியான, சந்தடிகளற்ற சூழலையும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. வளாகத்தின் கட்டடங்கள் இஸ்லாமிய கட்டடக்கலைப் பாரம்பரியத்தை பறைசாற்றி நிற்கின்றன. மொத்தத்தில் வளாகம் அறிவுச் சூழலுக்கென்றே மிகவும் திட்டமிடப்பட்டு அழகிய முறையில் வதிவிட வசதிகளைக் கொண்ட நிறுவனமாக அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.





கம்பீரமாக தோற்றமளிக்கும் நளீமிய்யா மஸ்ஜித்

### ஜாமிஆவின் அரை நூற்றாண்டுப் பயணத்தில் இடம்பெற்ற சில முக்கிய நிகழ்வுகள்

| | |
|---|---|
| 1972.08.28 | ஜாமிஆவின் மஸ்ஜிதுக்கான அத்திவாரக் கல் அல்ஹாஜ் எம்.ஐ.எம். நளீம் அவர்களால் நடப்படுதல் |
| 1973.08.19 | கல்வி அமைச்சர் கலாநிதி பதிஉத்தீன் மஹ்மூத் அவர்களால் ஜாமிஆ உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டு, வகுப்புகள் உலக தப்லீக் அமீர் மௌலானா இனாமுல் ஹஸன் ஹஸரத் ஜீ அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படல். |
| 1976.01.07 | பாகிஸ்தான் சட்டம்-நீதி அமைச்சர் ஏ.கே. புரோகி ஜாமிஆவுக்கு விஜயம் செய்தலும் ஜாமிஆ நிர்வாகக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நடுதலும் |
| 1977.07.18 | ஜாமிஆவின் முதல் அதிபர் மௌலவி யூ.எம். தாஸீன் அவர்களின் மறைவு |
| 1977.12.19 | மௌலவி ஷாஹுல் ஹமீத் பஹ்ஜி 'வகீலுல் ஜாமிஆ'வாக நியமனம் பெறல் |
| 1978.10.15 | நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகத்தின் காலாண்டு சஞ்சிகையான 'இஸ்லாமிய சிந்தனை' வெளியிடப்படல் |
| 1979.05.21 | மௌலானா யூசுப் தலால் அலீ ஜாமிஆவின் அதிபராக பதவியேற்றல் |
| 1979.06.29 | கல்வி அமைச்சர் நிஸ்ஸங்க விஜேரத்ன ஜாமிஆவுக்கு விஜயம் செய்தல் |
| 1980.01.24 | ராபிததுல் ஆலமில் இஸ்லாமியின் பொதுச் செயலாளர் ஷெய்க் முஹம்மத் அலீ அல்ஹரகான், போக்குவரத்து அமைச்சர் எம்.எச். முஹம்மத் ஆகியோர் ஜாமிஆவுக்கு விஜயம் |
| 1980.05.15 | அறிஞர் ஷெய்க் முஹம்மத் அல்-கஸ்ஸாலி அவர்கள் ஜாமிஆவுக்கு விஜயம் |
| 1981.01.04 | பிரதமர் ஆர். பிரேமதாஸ ஜாமிஆ நிர்வாகக் கட்டடத்தை திறந்து வைத்தல் |
| 1981.04.01 | கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி ஜாமிஆவின் பணிப்பாளராக நியமிக்கப்படல் |
| 1982.05.15 | ஜாமிஆவின் முதலாவது பட்டமளிப்பு விழா. பிரதம அதிதி, மௌலானா அபுல் ஹஸன் அலி நத்வி |
| 1984.01.05-09 | இலங்கை முஸ்லிம்களின் வரலாறு தொடர்பான ஆராய்ச்சிக் கருத்தரங்கு ஜாமிஆவில் நடைபெறல் |
| 1985.04.10 | இஸ்லாமிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் கலாநிதி அஹ்மத் முஹம்மத் அலீ அவர்கள் ஜாமிஆவின் நூல் நிலையத்தை திறந்து வைத்தல் |
| 1986.04.03 | கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி அவர்களால் தொகுக்கப்பட்ட Muslims of Sri Lanka நூல் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் பங்கேற்புடன் வெளியிடப்படல் |
| 1987,1993 | இரண்டாவது (1987.07.05), மூன்றாவது (1991.11.03) பட்டமளிப்பு விழாக்கள் அல்ஹாஜ் எம்.ஐ.எம். நளீம் அவர்களின் தலைமையில் நடைபெறல் |
| 1993.9.12 | நான்காவது பட்டமளிப்பு விழாவும் இஸ்லாமிய கண்காட்சியும். பிரதம அதிதி, பேராசிரியர் குர்ஷித் அஹ்மத் |
| 1996.04.21 | ஐந்தாவது பட்டமளிப்பு விழா. பிரதம அதிதி, இஸ்லாமாபாத் சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழக முதல்வர் பேராசிரியர் ஹுசைன் ஹாமித் ஹஸ்ஸான் |
| 1999.10.24 | ஆறாவது பட்டமளிப்பு விழாவும் வெள்ளி விழாவும். பிரதம அதிதி, இஸ்லாமாபாத் சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி அஹ்மத் இப்றாஹீம் அஸ்ஸால் |
| 2000.01.10 | ஜித்தா இக்ரா நன்கொடை நிறுவனத்தின் உதவியுடன் நளீமிய்யா தகவல் தொழிநுட்ப பிரிவு (Naleemiah Institute of Information Technology) உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்படல் |
| 2003.10.19 | ஏழாவது பட்டமளிப்பு விழாவும் முப்பது வருட பூர்த்தி விழாவும். பிரதம அதிதி, இஸ்லாமாபாத் சர்வதேச இஸ்லாமிய பல்கலைக் கழகத்தின் முதல்வரும் முன்னாள் நீதியரசருமான கலீலுர் ரஹ்மான் கான் |
| 2005.09.27 | 2005.09.26 அன்று ஜாமிஆவின் ஸ்தாபகத் தலைவர் நளீம் ஹாஜியார் மறைவு. அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் ஜாமிஆ வளாகத்தில் நடைபெறல் |
| 2009.01.18 | அபிவிருத்தி, ஆய்வு மற்றும் பயிற்சிக்கான அகடமியின் -Academy for Development, Research and Training (ADRT) கட்டடத் திறப்பு விழா |
| 2008.02.24 | எட்டாவது பட்டமளிப்பு விழாவும் முப்பத்தைந்து வருட பூர்த்தி விழாவும். பிரதம அதிதி, நீதியரசர் சலீம் மர்ஸூப் |
| 2010.06.12-16 | 'அல்குர்ஆனின் அறிவியல் அற்புதமும் உலக நாகரிகத்துக்கான முஸ்லிம்களின் பங்களிப்பும்' எனும் கருப்பொருளில் தேசிய கண்காட்சி. அதிதிகள்: அமைச்சர் ஏ.எச்.எம். பவுஸி,அமைச்சர் ராஜித சேனாரத்ன |
| 2003.10.19 | ஒன்பதாவது பட்டமளிப்பு விழா. பிரதம அதிதி, ஜனாதிபதி சட்டத்தரணி ஷிப்லி அஸீஸ் |
| 2017.03.11 | பத்தாவது பட்டமளிப்பு. பிரதம அதிதி, அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல |
| 2018.05.15 | 'நல்லிணக்கத்திற்கான மாதிரி பீடம்' முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டல் |
| 2020.05.19 | நான்கு தசாப்தங்களாக ஜாமிஆவின் பணிப்பாளராக கடமையாற்றிய கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி அவர்களின் மறைவு |
| 2022.08.11 | நளீமிய்யாவின் முதல்வராக உஸ்தாத் ஏ.ஸீ. அகார் முஹம்மத் நியமனம் |
| 2022.09.08 | 'சமாதானத்திற்கும் உரையாடலுக்குமான ஸலாம் நிலையம்' அங்குரார்ப்பணம் |
| 2022.10.09 | தேசிய மீலாத் விழா - 2022 நிகழ்வுகள் ஜாமிஆ வளாகத்தில் இடம்பெறல் |
| 2022.12.14 | ஜாமிஆ மஸ்ஜிதின் படம் பொறிக்கப்பட்ட தேசிய மீலாத் ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு நிகழ்வு கொழும்பு தபாலக கேட்போர் கூடத்தில் இடம்பெறல் |


தொகுப்பு
அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். பளீல் (நளீமி)
அஷ்ஷெய்க் எஸ்.எல்.எம்.ஹஸ்ஸான் (நளீமி)
மலர் தயாரிப்பு
அஷ்ஷெய்க் எம்.எப்.எம்.அஜ்வாத் பாஸி (நளீமி)


### நளீமிய்யா கலாநிலைய பரிபாலன சபைத் தலைவர் அல்ஹாஜ் யாகூத் நளீம்



ஜாமிஆ நளீமிய்யாவின் பொன்விழாவின் நிமித்தம் இந்த வாழ்த்துச் செய்தியை வெளியிடுவதில் பெரு மகிழ்வடைகிறேன். இதன் பட்டதாரிகள் இலங்கையின் பல்வேறு [illegible]

### நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத்



ஜாமிஆ நளீமிய்யா அதன் பொன்விழாவைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பம் கடந்த காலத்தில் அது அடைந்த கல்வி சார் சாதனைகளையும் நளீமீக்களது பங்களிப்புக்களையும் நினைவு கூர வேண்டிய தருணமாகும்.

மர்ஹூம் நளீம் ஹாஜியார் அவர்களின் வழிகாட்டலில் அயராது உழைத்த குழுவினர், முன்னாள் அதிபர்கள், விரிவுரையாளர்கள், குறிப்பாக 40 வருடங்களாக பணிப்பாளராக இருந்து சேவையாற்றிய கலாநிதி எம். ஏ.எம். சுக்ரிபோன்றவர்களது முயற்சிகளுக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.அல்ஹாஜ் யாகூத் நளீம் அவர்களது தலைமைத்துவத்துடன் கூடிய பரிபாலன சபை உறுப்பினர்களது அயராத உழைப்பும் நன்கொடையாளர்கள், பழைய மாணவர்கள், நளீமிய்யாவின் துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் போன்றோரது பங்களிப்புகளும் தியாகங்களும் இன்றி நளீமிய்யாவின் சாதனைகள் சாத்தியப்பட்டிருக்க மாட்டாது.

பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெறுவோர் தமது கல்விப் பயணத்தில் பல தியாகங்களைச் செய்து இந்நிலையை அடைந்திருக்கிறார்கள். நளீமிய்யா தனது மரபுகளையும் விழுமியங்களையும் தொடர்ந்தும் நிலைநிறுத்துவதுடன் எதிர்கால சந்ததியினருக்கு அவற்றை வழங்குவர் என உறுதியாக நம்புகிறேன். சமூகங்களுக்கு மத்தியில் சகிப்புத் தன்மையையும் புரிந்துணர்வையும் வளர்ப்பதில் நிறுவனம் தொடர்ந்து பங்காற்ற வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக!

### பிரதம அதிதி கௌரவ பாயிஸ் முஸ்தபா, ஜனாதிபதி சட்டத்தரணி



நளீமிய்யாவின் பொன் விழாவுக்காக இந்த வாழ்த்துச் செய்தியை பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை வழங்கிய வல்ல அல்லாஹ்வை நான் போற்றுகின்றேன்.

எமது கல்விப் பரப்பில் மத கலாஞானங்களுக்கும் லோகாயுத கலைகளுக்கும் இடையில் ஒரு பாரிய இடைவெளி காணப்பட்டமை துரதிஷ்டமாகும். இப்படியான சந்தர்ப்பத்தில் இஸ்லாமிய கலாஞானங்களில் மட்டுமல்ல, நவீன கல்வித் துறைகளிலும் மிகத் திறமைபெற்ற, நவீன சவால்களுக்குமுகம் கொடுக்கக்கூடிய ஒரு பரம்பரையை உருவாக்கும் கலாநிலையத்தை நளீம் ஹாஜியார் கட்டியெழுப்பினார். அவருக்கு அல்லாஹ் அருள்பாலிப்பானாக!

இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்காக உழைத்த, உழைக்கும் அனைவருக்கும் நன்றிகூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஜாமிஆ தனது இலக்கையடைவதில் வெற்றியடைந்திருக்கிறது. அதன் பழைய மாணவர்கள் நிர்வாகம், கல்வி, நீதி போன்ற துறைகளில் சம்பந்தப்பட்டு தேசத்தை கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். மர்ஹூம் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் 1953 ஆம் ஆண்டு முஸ்லிம் கல்விமாநாட்டில்; 'முஸ்லிம்களது சமூக நிகழ்ச்சித் திட்டத்தில் கல்விதான்; கல்வி மட்டுமே அதி முக்கியமான முன்னுரிமையாக இருக்கவேண்டும்.' என்று தெரிவித்த கூற்றோடு எனது வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கிறேன்.

### கௌரவ அதிதி அமைச்சர் எம்.யூ.எம். அலி ஸப்ரி,



நளீமிய்யாவின் வரலாற்றில் மைல்கல்லான பொன்விழா நிகழ்வினை முன்னிட்டு இந்த சில வரிகளை எழுதுவதில் பெருமகிழ்வடைகின்றேன். இந்நிறுவனம் இலங்கை வாழ் முஸ்லிம்களுக்குத் தரமான கல்வியை வழங்கி, இஸ்லாத்தின் அடிப்படைகளைப் பாதுகாப்பதில் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கிறது. அது தனது பட்டதாரிகளுக்கு தமது தனிப்பட்ட மற்றும் தொழில் விருத்திக்குத் தேவையான அறிவையும் திறன்களையும் வழங்கியிருக்கிறது.

நளீமிய்யாவின் பொன்விழா கொண்டாடப்படும் இந்த சந்தர்ப்பத்தில் இஸ்லாமியக் கல்வியை மேம்படுத்துவதற்காக அதனை ஸ்தாபித்த நளீம் ஹாஜியார் அவர்களை நாம் போற்ற வேண்டும். கல்வி வாய்ப்புகளை இழந்த இளம் மாணவர்களுக்கு உயர் இஸ்லாமிய கல்வியை வழங்கவேண்டும் என்பது அவரது இலக்காக இருந்தது. இஸ்லாமிய சட்டப் பரப்பிலும் லோகாயுதக் கல்வித் துறையிலும் சமநிலைத் தன்மை வாய்ந்த புத்திஜீவிகளை நளீமிய்யா உருவாக்கியுள்ளது. அத்தகைய கல்விமான்கள் சமுதாயத்தில் மாற்றத்திற்காக தங்களது பங்களிப்புகளை செய்திருக்கிறார்கள். சமய ஐக்கியத்தை, சமூக நலன்களை கட்டியெழுப்புவதற்கும் சமூகத் தலைவர்களை உருவாக்குவதற்கும் அதன் அர்ப்பணமானது குறிப்பிடத்தக்கதாகும். இந்த நிறுவனத்தால் எதிர்கால சந்ததியினர் தொடர்ந்தும் பயனடைவர் என்று நம்புகிறேன்.

### அல்ஹாஜ் மர்ஜான் பளீல் (பாராளுமன்ற உறுப்பினர்)



நளீமிய்யா என்ற ஆல விருட்சத்தின் வெற்றிக்கு இறையருளும் அதன் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.ஐ.எம். நளீம் ஹாஜியாரின் தூய்மையான எண்ணமுமே பிரதான காரணங்களாகும். சீனன்கோட்டை மண்ணில் பிறந்த நளீம் ஹாஜியார் அவர்கள், மாணிக்க வியாபாரத்தின் ஊடாகவும் நளீமிய்யா மற்றும் இக்ரா தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றை எமது மண்ணில் உருவாக்கியதினூடாகவும் அனைவரையும் பேருவளை மண்ணை திரும்பிப் பார்க்கச் செய்தார்.

இந்தக் கலாபீட பட்டதாரிகள் இன்று பல்வேறு துறைகளில் பணியாற்றி வருகின்றமை எமது சமூகத்திற்கு கிடைத்த பெருவெற்றியாகும். நளீமிய்யாவின் வளர்ச்சிக்காக வரலாறு நெடுகிலும் பங்களிப்புச் செய்த, செய்து கொண்டிருக்கின்ற பரிபாலன சபை உறுப்பினர்கள் உட்பட கலாபீட ஆசிரியர் குழாத்தினர் அனைவருக்கும் வல்லநாயன் அவனது ரஹ்மத்தை வழங்கவேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் பிரார்த்திக்கிறேன்.

### பேராசிரியர் ரேணுக சில்வா (வயம்ப பல்கலைக்கழகம்)



ஜாமிஆ நளீமிய்யாவின் பொன்விழா மற்றும் பட்டமளிப்பு விழாவுக்கும் வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இலங்கை மக்கள் சமாதான சகவாழ்வை மேற்கொள்வதற்கும், இலங்கையின் கலாசார தனித்துவத்தை உருவாக்குவதற்கும் அதன் அபிவிருத்திக்கும் கல்வியானது பெரும் பங்காற்றிக் கொண்டிருக்கிறது.

சேர் ராஸிக் பரீத், ரீ.பீ. ஜாயா போன்ற கல்விமான்களும் சமூகத் தலைவர்களும் முஸ்லிம் சமூகத்தின் கல்வி எழுச்சிக்காக வழிகாட்டல்களை வழங்கி முன்னோடிகளாகத் திகழ்ந்தார்கள். சில வருடங்களுக்கு முன்னர் நான் நளீமிய்யாவுக்குச் சென்றபொழுது அங்கு கல்வி மேம்பாட்டுடன் பண்பாட்டு மற்றும் ஆன்மீக மேம்பாட்டையும் கண்டு நான் கவரப்பட்டேன். கல்வி மற்றும் திறமைகளை வளர்ப்பதில் மாத்திரமன்றி பிறருடன் சகிப்புத் தன்மையுடன் நடந்துகொள்ளும் பிற கலாசாரங்களை மதிக்கும் மாணவர்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் கல்வித்துறையில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் நளீமிய்யாவுக்கு கிட்டிய எதிர்காலத்தில் பாரிய பொறுப்பு இருக்கிறது. மேலும் இம்முறை பட்டம் பெறுகின்றவர்களையும் நான் வாழ்த்துகின்றேன்.

### பேராசிரியர் ரஞ்சித் பண்டார (பாராளுமன்ற உறுப்பினர்)



பொன்விழா நிகழ்வினை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்வடைகிறேன்.

பொன்விழா என்பது ஒரு கலாநிலையம் கல்வி, ஒழுக்கம் மற்றும் ஆன்மீக பெறுமானங்கள் ஆகிய தனது துறைசார் இலக்குகளை அடைவதில் எவ்வளவு தூரம் வெற்றி கண்டுள்ளதென்பதை மீள் பரிசீலனைக்கு உட்படுத்துவதற்கான சந்தர்ப்பமாகும். பரந்து விரிந்த இஸ்லாமிய கல்வியுடன் கூடிய, தற்கால உலகுக்கு அவசியமான கற்கைகளுமே முஸ்லிம் சமூகத்தின் தற்கால மிக முக்கியமான தேவையாகும். அதனை நிறைவு செய்வதற்குத் தான் நளீமிய்யா ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என அறிகிறேன்.

நளீமிய்யாவின் கலைத்திட்டமானது அதியுயர் அறிவுப் பின்புலமும் கல்வித் தூரநோக்கும் அகன்ற பார்வையும் ஆன்மீக மற்றும் ஒழுக்க சீலமும் பயிற்சியும் கொண்ட புத்திஜீவித்துவ பரம்பரையொன்றை உருவாக்கும் இலக்குடன் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை குறிப்பிடுவதில் மகிழ்வடைகிறேன்.

நளீமிய்யா பட்டதாரிகள் விரிந்த சிந்தனையுடன் நல்ல ஒழுக்கமாண்புகள் மற்றும் தலைமைத்துவப் பண்புகளுடன் இலங்கையின் பல்லின சமுதாயங்களது மதிப்பீடுகளையும் சூழமையையும் மதித்து பணிபுரிபவர் என நம்புகிறேன். இச்சந்தர்ப்பத்தில் நளீமிய்யாவுடன் சம்பந்தப்பட்டுள்ள அனைவரையும் நான் வாழ்த்துவதோடு ஒளிமயமான எதிர்காலம் அமையவேண்டும் என விரும்புகிறேன்.

## ஜாமிஆ நளீமிய்யாவின் சாதனைகள்

### 01. சர்வதேச அங்கீகாரம்

- வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள், மனிதவள விருத்திக்காக இயங்கும் பல அமைப்புகளோடு ஜாமிஆ நீண்ட காலமாக நெருக்கமான உறவைக் கொண்டிருக்கிறது. இந்த நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இருந்தும் தனிப்பட்ட ரீதியிலும் பல முக்கியஸ்தர்களும் கல்விமான்களும் அவ்வப்போது ஜாமிஆவுக்கு வருகை தந்திருக்கிறார்கள்.

ஜாமிஆவின் பட்டச் சான்றிதழ் சர்வதேச பல்கலைக்கழகங்கள் பலவற்றில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இஸ்லாமிய உலகின் பல்கலைக்கழகங்களது ஒன்றியத்தில் (FUIW) ஜாமிஆ அங்கத்துவம் வகிப்பதுடன் சில சர்வதேச பல்கலைக்கழகங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது.

அந்த வகையில் சர்வதேச தொடர்புகளை ஜாமிஆ பெற்றிருப்பதானது அதன் சர்வதேச தரத்திற்கான முக்கிய சான்றாகும். 1973 தொடக்கம் 2023 வரையான ஐம்பது வருட காலப்பகுதியில் 2000க்கு மேற்பட்டோர் ஜாமிஆவில் கல்வி கற்றிருப்பதுடன் 1000க்கும் அதிகமானோர் ஏழு வருட கற்கைநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து 'நளீமி' பட்டத்தைப் பெற்றுள்ளனர்.

### 02. கல்வித் துறைச் சாதனைகள்

- இலங்கையில் மாத்திரமின்றி வேறு பல நாடுகளிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்பின் கற்கைகளை பூர்த்தி செய்த ஜாமிஆவின் பழைய மாணவர்களில் சுமார் 27 பேர் கலாநிதிப் (PhD) பட்டங்களை பெற்றிருப்பதுடன் சிலர் கலாநிதி கற்கையைத் தொடருகின்றனர். முது தத்துவமாணி (M.Phil.), முதுமாணி (M.A), கலைமாணி (B.A) பட்டத்தைப் பலர் பெற்றுள்ளனர்.

2. பேராதெனிய பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக் கழகம், மலேசியாவின் மலாயா பல்கலைக்கழகம், இஸ்லாமிய கலைகளுக்கான பல்கலைக்கழகம், சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம், பாகிஸ்தானின் சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம், தாய்லாந்து இளவரசர் சோங்க்லா பல்கலைக்கழகத்தின் பட்டாணி வளாகம், புரூணை தாருஸ் ஸலாம் பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் மார்க் ஃபீல்ட் கலாநிலையம் போன்றவற்றில் துறைத்தலைவர்களாக, விரிவுரையாளர்களாக, ஆய்வாளர்களாக நளீமீக்கள் பணியாற்றியுள்ளனர். தற்போதும் பலர் பணியாற்றி வருகின்றனர். இதுவரை 3 பேர் பேராசிரியர்களாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

3. நளீமிய்யா பட்டதாரிகள் இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS) பரீட்சையில் சித்தியடைந்து கல்வி அமைச்சில் பிரதி ஆணையாளர்களாவும் (Deputy Commissioner) மாகாணக் கல்வித் திணைக்களங்களில் மேலதிக மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களாகவும் (Additional Provincial Director of Education), வலய மற்றும் கோட்டக் கல்விப் பணிமனைகளில் பணிப்பாளர்களாகவும் பிரதி மற்றும் உதவிப் பணிப்பாளர்களாகவும் (Director/Deputy/Assistant Director Zonal and Divisional Education) கடமையாற்றுகின்றனர். சிலர் ஆசிரியர் கல்விக் கல்லூரிகளில் விரிவுரையாளர்களாக உள்ளனர்.

இலங்கையின் கல்விக் கொள்கையின் திட்டவடிவமைப்புக்கு நளீமீக்கள் பங்களிப்புச் செய்து வருகின்றனர். இலங்கையின் கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் அங்கத்தவராக நளீமி ஒருவர் தெரிவாகியிருப்பது தேசத்தின் கல்விக் கொள்கைக்கு பங்களிப்புச் செய்யக் கூடிய மிக முக்கியமான சந்தர்ப்பமாகும்.

4. இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர்களாக சேவையாற்றுவதன் ஊடாக பாடப்புத்தகங்களை (Text Books) எழுதுதல் மற்றும் அவற்றை விநியோகம் செய்வது முதலான கடமைகளில் நளீமீக்கள் ஈடுபடுகின்றனர்.

அத்தோடு இலங்கை அரச பாடசாலைகளது பாடத் திட்டத்தையும் பாட நூல்களையும் தயாரிக்கும் பிரதான நிறுவனமான தேசிய கல்வி நிறுவனத்தில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை அவர்கள் வகிப்பதோடு பாடங்களுக்கான கலைத்திட்டத்தை (Curriculum) உருவாக்குதல், ஆசிரியர் கைநூல்களைத் (Teacher Guide) தயாரித்தல், ஆசிரியர் பயிற்சிகளை (Teacher Training) வழங்குதல் என பலதரப்பட்ட வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றனர். தேசிய கல்வி நிறுவகம் நடாத்தும் கல்வியியல் பட்டப் பின் கற்கைகளின் விரிவுரையாளர்களாகவும் அவர்கள் கடமையாற்றுகின்றனர். மேலும் ஆசிரியர் பயிற்சிக்கான வளவாளர் குழுவிலும் (Resource Persons) நளீமிய்யா பட்டதாரிகள் பலர் இணைந்து பணியாற்றுகிறார்கள்.


இலங்கையின் பரீட்சை திணைக்களத்தால் நடாத்தப்படுகின்ற பல பாடங்களது பரீட்சை வினாத்தாள்களை தயாரிப்பவர்களாக (Paper Setters) விடைத்தாள்கள் திருத்தப்படுகின்ற பொழுது பிரதம பரீட்சகர்களாக (Chief Examiners), மதிப்பீட்டாளர்களாக (Assistant Examiners) நளீமீக்கள் தொடர்ந்தும் செயற்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

5. அத்தோடு அவர்களிற் பலர் இலங்கை அதிபர் சேவையில் (Sri Lanka Principal Service) இணைந்ததன் மூலம் அதிபர்கள், பிரதி அதிபர்கள் மற்றும் உப அதிபர்களாக கடமை புரிகின்றனர். இலங்கை ஆசிரியர் கல்வியாளர் சேவை (SLTES) அதிகாரியாக நளீமிய்யா பட்டதாரி ஒருவர் கடமையாற்றுகின்றார். ஆசிரியர் பயிற்றுவிப்பு மற்றும் ஆசிரியர் கல்வியியல் சார்ந்த பல்வேறு சேவைகளை அவர் வழங்கி வருகிறார்.

6. பிரதேச ரீதியான கல்வி நிருவாகத்திலும் நளீமீக்கள் பதவி வகித்து தமது பங்களிப்பை வழங்கி வருகின்றனர். இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை (Sri Lanka Teacher Advisors Service) அதிகாரிகளாகவும் கல்வி வலயங்களில் குறிப்பிட்ட பாடத்திற்கான பாட ஆலோசகர் (In Service Advisors) களாகவும் வலயங்களின் வளவாளர்களாகவும் நளீமிக்கள் கடமையாற்றுகின்றனர்.

7. கணிசமான தொகையினர் இலங்கை ஆசிரியர் சேவையில் (SLTS) இணைந்து அரச மற்றும் தனியார் பாடசாலைகளில் கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் பொதுவாக இஸ்லாம், இஸ்லாமிய நாகரீகம், அரபு மொழி ஆகியவற்றைக் கற்பித்தாலும் அவையல்லாத பொருளியல், புவியியல், அரசியல், தமிழ், ஆங்கிலம், சிங்களம், கணனி போன்ற பாடங்களையும் கற்பித்து வருவதன் மூலம் சமயம் சார்ந்த பாடங்கள் மூலமாக மாத்திரமன்றி ஏனைய பொதுப் பாடங்களூடாகவும் தமது கல்வித்துறைசார் பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

எனவே, பாடசாலை மட்டத்திலிருந்து பல்கலைக்கழக மட்டம் வரையிலும் பிரதேச மட்ட கல்வி நிருவாகத்திலிருந்து தேசிய மட்ட நிருவாகம் வரையிலும் நளீமீக்கள் தமது அறிவாற்றல், ஆளுமை, நிபுணத்துவத்தினூடாக பாரிய பங்களிப்பைச் செய்து வருகின்றமை தேசத்தின் எதிர்காலத்திற்கு பங்களிப்பதற்கு இறைவன் வழங்கிய மிகப் பெரிய சந்தர்ப்பமாகும். அல்ஹம்துலில்லாஹ்.


நளீமிய்யா கலாபீட மாநாட்டு மண்டபம்

### 03. நிருவாக மற்றும் நீதித் துறைப் பங்களிப்புகள்

- இலங்கையின் நிருவாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள நளீமீக்கள் ஆணையாளர், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர், அமைச்சின் செயலாளர், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினர், அமைச்சுகளில் மேலதிக செயலாளர், சிரேஷ்ட உதவிச் செயலாளர், பிரதேச செயலாளர், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் போன்ற பதவிகளையும் வகித்து வருகிறார்கள். பல நிறுவனங்களது முகாமைத்துவ பதவிகளிலும் இஸ்லாமிய வங்கி மற்றும் காப்புறுதி நிறுவனங்களிலும் அவர்கள் உத்தியோகத்தர்களாக பணிபுரிகிறார்கள்.
- இலங்கை கடல்கடந்த சேவை பரீட்சை (SLOS) யில் சித்தியடைந்த நளீமீக்கள் தூதுவராலயங்களில் பல உயர் பதவிகளையும் வகிக்கின்றனர். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பிரதி ஆணையாளர் நாயகம், பிரதி ஆணையாளர், ஆணையாளர் போன்ற பதவிகளையும் நளீமீக்கள் வகிக்கின்றனர். சிலர் சுங்க மற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்களங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்க தற்போதும் சிலர் பணியாற்றுகிறார்கள். நளீமீக்களில் பலர் சட்டக் கல்லூரியில் தமது வெளிவாரிக் கற்கையை தொடர்ந்திருப்பதால் சிலர் நீதிபதிகளாக இருப்பதுடன் கணிசமான எண்ணிக்கையினர் சட்டதரணிகளாக செயற்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

### 04. எழுத்துத் துறைப் பங்களிப்புகள்

- நளீமீக்களில் பலர் எழுத்தாளர்களாக இருக்கும் அதேவேளை ஆங்கிலம், அரபு, சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வருகின்றார்கள்.

கடந்த ஐந்து தசாப்தங்களாக அவர்களால் எழுதப்பட்ட நூல்கள், மொழி பெயர்ப்புகள், நூல் அத்தியாயங்கள், ஆய்வுக் கட்டுரைகள், தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளில் முன்வைக்கப்பட்ட ஆய்வுகள், சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகளில் பிரசுரமான கட்டுரைகள் போன்றவற்றை மதிப்பீடு செய்கையில் அவை சமநிலையான சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான அறிவியல் பங்களிப்புகளாக அமைந்துள்ளதை அவதானிக்கலாம்.

### 07 சமூக, சன்மார்க்க அமைப்புக்களினூடான பங்களிப்புகள்

- இலங்கையின் மைய நீரோட்டத்தில் இருக்கும் அமைப்புக்களில் பிரதான பொறுப்புக்களை நளீமீக்கள் வகிப்பது நளீமிய்யாவுக்கான சமூக அங்கீகாரத்துக்கு அடையாளமாகும். சீர்திருத்த மற்றும் தஃவா இயக்கங்கள் போன்றவற்றில் தலைவர், உபதலைவர், செயலாளர் உள்ளிட்ட இன்னும் பல பொறுப்புவாய்ந்த பதவிகளிலும் இருந்து சமூகத்துக்கு தேவையான பங்களிப்புக்களை அவர்கள் வழங்கி வருகின்றனர்.

### 08 பொது அமைப்புகளினூடான பங்களிப்புகள்

- ஊர் மட்டங்களில் கல்வி, பொருளாதார, சமூக மேம்பாட்டு அமைப்புகளில் நளீமிய்யா பழைய மாணவர்கள் பிரதான பதவிகளை வகிக்கின்றனர். பள்ளிவாயல் நிருவாக சபை தலைவர், உப தலைவர், செயலாளர், உறுப்பினர் போன்ற பொறுப்புக்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்டிருப்பது அவ்வப்பிரதேச மக்கள் நளீமிய்யா மீது கொண்டிருக்கும் நம்பிக்கைக்கும் அபிமானத்துக்குமான மற்றொரு சான்றாகும்.

### 09 தஃவாப் பணி

- நளீமீக்களில் கணிசமான தொகையினர் பள்ளிவாயல்களில் நாடளாவிய ரீதியில் குத்பாப் பிரசங்கங்களை நிகழ்த்தி வருகின்றனர். அதேபோன்று சன்மார்க்க சொற்பொழிவுகளையும் மாதாந்த வகுப்புக்களையும் ஊக்குவிப்பு உரைகளையும் அவர்கள் தொடராக நிகழ்த்தி வருகிறார்கள். அத்தோடு தேசிய மட்டத்திலும் பிராந்திய மட்டங்களிலும் நடைபெறும் கருத்தரங்குகள், செயலமர்வுகளில் பிரதான வளவாளர்களாக கலந்துகொண்டு நளீமீக்கள் பங்களிப்பு செய்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### 10 தொடர்பூடகங்களினூடான பங்களிப்புகள்

- நளீமீக்களில் குறிப்பிடத்தக்க அளவு தொகையினர் இலங்கை முஸ்லிம் வானொலி முஸ்லிம் சேவை வளவாளர்களாக (Resource Persons) நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றனர். நேரடி கலந்துரையாடல் நிகழ்ச்சிகள், அல்குர்ஆன் விளக்கங்கள், ஹதீஸ் தெளிவுரைகள் போன்ற பல்வேறு வகையான நிகழ்ச்சிகளை நடத்தி இலங்கை வானொலி முஸ்லிம் சேவை வரலாற்றில் அவர்கள் தடம் பதித்து வருவதோடு அரச மற்றும் தனியார் பத்திரிகை நிறுவனங்களிலும் சிலர் பணிபுரிந்து வருகின்றமை அல்லாஹ்வின் பேரருளாகும். மேலும் நளீமீக்களது நிகழ்ச்சிகள் பல தனியார் வானொலிகளிலும் தொலைக்காட்சிகளிலும் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். அது மாத்திரமன்றி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களாகவும் யூடியூப் தயாரிப்பாளர்களாகவும் அதனூடாக தஃவாப் பணி செய்பவர்களாகவும் பல பழைய மாணவர்கள் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்து வருகின்றனர்.

### 11 ஜாமிஆவில் பணிபுரிவோர்

- ஜாமிஆ நளீமிய்யாவின் கற்பித்தல் மற்றும் நிர்வாகப் பணிகளில் பெரும்பாலும் நளீமீக்கள் இருக்கிறார்கள். ஜாமிஆ ஸ்தாபிக்கப்பட்ட ஆரம்ப காலங்களில் தரமான விரிவுரையாளர்களைத் தேடிக்கொள்வதில் நளீம் ஹாஜியார் உட்பட அதன் ஸ்தாபகர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.


### 12 பழைய மாணவர் அமைப்பு

- 1996 ஆம் ஆண்டு முதல் 'றாபிததுன் நளீமிய்யீன்' எனப்படும் பழைய மாணவர் அமைப்பு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்குகிறது. நளீமிய்யாவுக்குப் பங்களிப்புச் செய்தல், நளீமீக்களின் ஐக்கியத்திற்காக உழைத்தல், இஸ்லாமிய பிரசாரத்திற்கு பங்களிப்பு செய்தல் ஆகிய மூன்று இலக்குகளையும் அது கொண்டிருக்கிறது.

நிறுவனம் இதுவரை கண்ட எல்லா சாதனைகளுக்கும் அல்லாஹ்வின் அருள் தான் பிரதான காரணமாகும். அல்ஹம்துலில்லாஹ். இந்நிறுவனத்தை உருவாக்கி, கட்டிக் காத்தவர்கள், தற்போதும் அதனை தமது தோள்களில் சுமந்திருப்பவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் மேலான கூலிகளை வழங்குவானாக!

தினகரன்
THINAKARAN தினகரன்
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சோபகிருது வருடம் ஆணி மாதம் 09ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்ஹிஜ்ஜா பிறை 04

### குறள் தரும் சிந்தனை



உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்

பணயம் வைத்து இடைவிடாமல் சூதாடுவதை ஒருவன் பழக்கமாகவே கொள்வானேயானால் அவன் செல்வமும் அந்தச் செல்வத்தை ஈட்டும் வழிமுறையும் அவனைவிட்டு நீங்கிவிடும்.

## வீதி போக்குவரத்து விபத்துக்களை கட்டுப்படுத்த மற்றொரு திட்டம்!

நாட்டில் வீதிப் போக்குவரத்து வாகன விபத்துக்கள் அண்மைக் காலமாக அதிகரித்த வண்ணமுள்ளன. 65,610 சதுர கிலோ மீற்றர் சதுரப் பரப்பளவைக் கொண்ட இந்நாட்டில், 22 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இந்நாட்டில் மொத்தம் ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 100 கிலோ மீற்றர் நீளமான வீதி காணப்படுகின்றது. அவற்றில் மொத்தம் 12 ஆயிரத்து 567.98 கிலோ மீற்றர் நீளமான நெடுஞ்சாலைகளும் 312.58 கிலோ மீற்றர் நீளமான அதிவேக நெடுஞ்சாலைகளும் உள்ளன. ஏனையவை மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்ற வீதிகள்.

நாட்டில் காணப்படும் மொத்த வாகனங்களின் எண்ணிக்கையோ 82 இலட்சத்து 97 ஆயிரத்து 852 ஆகும். அவற்றில் பெரும்பாலானவை இரண்டு சக்கரங்களைக் கொண்ட மோட்டர் பைசிக்கிள்களும் மூன்று சக்கர ஓட்டோ வண்டிகளும் ஆகும்.

இந்நாட்டில் வீதிப் போக்குவரத்து வாகன விபத்துக்களும், அதனை அடிப்படையாகக் கொண்ட உயிரிழப்புக்களும் வருடா வருடம் அதிகரித்த வண்ணமுள்ளன.

அந்த வகையில் கடந்த 2020 இல் 23 ஆயிரத்து 704 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றின் விளைவாக 2 ஆயிரத்து 370 பேர் மரணமடைந்துள்ளனர். 2021 இல் 22 ஆயிரத்து 847 வீபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றினால் 2 ஆயிரத்து 559 பேர் மரணமடைந்துள்ளனர். 2022 இல் 21 ஆயிரத்து 992 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றின் காரணமாக 2 ஆயிரத்து 536 பேர் உயிரிழந்துள்ளனர். இவ்வருடம் (2023) ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூன் மாதம் 18 ஆம் திகதி வரையும் 8,875 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதோடு 1,043 பேர் மரணமடைந்துள்ளனர்.

ஆனால் கடந்த 2020 ஆம் ஆண்டு மார்ச் மாத நடுப்பகுதி முதல் 2021 பிற்பகுதி வரையும் கொவிட் 19 பெருந்தொற்று பரவுதல் அச்சுறுத்தல் நிலவியது, 2022 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் அவ்வாண்டின் நடுப்பகுதி வரையும் பொருளாதார நெருக்கடியும் அதன் தாக்கங்களும் கடுமையாக இருந்தன. இவற்றின் விளைவாக 2020 மார்ச் முதல் 2022 இறுதிப் பகுதி வரையும் நாட்டின் வாகனப் போக்குவரத்து 2020 ஆம் ஆண்டுக்கு முன்பு போன்று இடம்பெறவில்லை. வீதிப் போக்குவரத்து வாகன விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சட்டங்களும் கடுமைப்படுத்தப்பட்டுள்ளன.

அப்படியிருந்தும், நாட்டில் வீதிவிபத்துகளும் அவற்றின் விளைவாக உயிரிழப்புக்களும் குறைந்ததாக இல்லை. அதிகரித்த மட்டத்திலேயே காணப்படுகின்றன. இந்நிலைமை குறித்து சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினர், சுகாதாரத் துறையினர் உள்ளிட்ட பல தரப்பினரும் இது குறித்து கவனம் செலுத்தியுள்ளனர்.

இந்நிலைக்கு சிலர் போதைப்பொருட்களை பாவித்த நிலையில் வாகனங்களைச் செலுத்துவதே பிரதான காரணம் என்று பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர். ஆனால் போதைப்பொருட்களைப் பயன்படுத்திய நிலையில் வாகனங்களை செலுத்துவதை அடையாளம் காண்பதற்கான வசதிகள் இற்றைவரையும் நாட்டில் இல்லை.

வாகன விபத்துக்களை கட்டுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் மற்றொரு நடவடிக்கையாக போதைப்பொருட்களைப் பாவித்த நிலையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளை அடையாளம் காண்பதற்கான உமிழ்நீர் பரிசோதனைக் கருவிகள் தற்போது நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இக்கருவிகளைப் பயன்படுத்தி போதைப் பொருட்களைப் பாவித்த நிலையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை அடையாளம் காண்பதற்கான பரீட்சார்த்த நடவடிக்கை கடந்த 12 ஆம் திகதி மேல்மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது 1781 சாரதிகள் பரீட்சிக்கப்பட்டனர். அவர்களில் 41 சாரதிகள் போதைப்பொருள் பாவித்த நிலையில் வாகனத்தை செலுத்தியமை கண்டறியப்பட்டது. அவர்களில் 19 பேர் பஸ்சாரதிகள் என்பதும் 09 பேர் முச்சக்கர வண்டிச் சாரதிகள் என்பதும் உறுதியானது. இவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் 'போதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளைக் கண்டறியும் நோக்கில் சாரதிகளை உமிழ்நீர் பரிசோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்' என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

வீதிப் போக்குவரத்து வாகன விபத்துக்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். வாகன சாரதிகள் வீதிச் சட்டங்களை மதித்து நடக்க வேண்டும். அதுவே சட்டத்தை நடைமுறைப்படுத்தும் தரப்பினரினதும் மக்களினதும் எதிர்பார்ப்பாகும். இதன் நிமித்தம் தான் இந்த முன்னேற்றகர நடவடிக்கை அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வரப்படுகின்றது. இந்நடவடிக்கை நிச்சயம் வீதி போக்குவரத்து வாகன விபத்துக்கள் குறைவடைவதற்கு வழிக்கும் என்பதில் ஐயமில்லை.

editor.tkn@lakehouse.lk

# எதிர்வரும் 10 ஆண்டு காலம் இந்திய தேசத்தின் தொழில்நுட்ப தசாப்தம்

## அமெரிக்காவுக்கு விஜயம் செய்த பிரதமர் நரேந்திர மோடி, தனது அரசின் முற்போக்குத் திட்டங்களை வெளியிட்டார்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, எதிர்வரும் இருபது ஆண்டு காலப்பகுதியை தொழில்நுட்ப தசாப்தமாக மாற்றுவதற்கான தனது யோசனையை முன்வைத்துள்ளார். இந்த யோசனையை நடைமுறைப்படுத்துவதற்காக 'Techade' என்ற பதத்தை பிரதமர் நரேந்திர மோடி உருவாக்கியுள்ளார்.

"இந்தியாவின் தொழில்நுட்பக் கனவானது அதன் கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் அவர்களின்

காப்புரிமைகள் மூலம் நிறைவேற்றப்படும் என்று நான் நம்புகிறேன்" என்று பிரதமர் மோடி கூறியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தனது அமெரிக்கப் பயணத்தின் இரண்டாவது நாளான நேற்று வோஷிங்டன் சென்றடைந்தார். அங்கு அவர் வேர்ஜீனியாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு நிகழ்ச்சியில் அமெரிக்க முதற்பெண்மணியான ஜில் பைடனை சந்தித்தார். இதையடுத்து, பிரதமர் நரேந்திர மோடி வெள்ளை மாளிகைக்கு சென்றார். அங்கு அவரை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் அவரது மனைவி ஜில் பைடன் ஆகியோர் வரவேற்றனர்.

நேற்று மாலை வெள்ளை மாளிகையில் பிரதமர் மோடி மற்றும் ஜனாதிபதி ஜோ பைடன் இடையே அதிகாரப்பூர்வ சந்திப்பு நடைபெற்றது. அங்கு இருவரும் இணைந்து கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

வெள்ளை மாளிகையில் நேற்று மாலை பிரதமர் மோடிக்கு 21 துப்பாக்கி குண்டுகள் முழங்க மரியாதை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வெள்ளை மாளிகையில் இந்திய_ அமெரிக்க உறவு குறித்து இருதரப்பு





### வெள்ளை மாளிகையில் மரியாதையுடனான மகத்தான வரவேற்பு

பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதன்பிறகு வெள்ளை மாளிகையில் அரசு விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்று மாலை பிரதமர் மோடி அமெரிக்க நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து, வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் முதல் பெண்மணி ஜில் பைடன் வழங்கிய விருந்தில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார்.

பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்ட பரிசுகள் குறித்த தகவலை வெள்ளை மாளிகை அதிகாரபூர்வமாக வெளியிட்டுள்ளது. அதன்படி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் ஜில் பைடன் ஆகியோர் பிரதமர் மோடிக்கு கைகளால் தயாரிக்கப்பட்ட பழைமையான அமெரிக்க புத்தக கலரியை வழங்கினர். அதனுடன், 20 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விண்டேஜ் அமெரிக்க கமராவையும் ஜனாதிபதி பைடன் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, ஜோ பைடன் சார்பில் அமெரிக்க வனவிலங்கு புகைப்படம் பற்றிய ஹார்ட்கவர் புத்தகமும், ஜில் பைடன் சார்பில் ராபர்ட் ஃப்ரோஸ்டின் கவிதைகளின் முதல் பதிப்பின் புத்தகமும் பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டன.

பிரதமர் மோடி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் முதல் பெண்மணி ஜில் பைடன் ஆகியோருடன் இந்தியாவின் பல்வேறு கலாசாரங்கள் தொடர்பான இசை நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நியூ யோர்க்கில் இருந்து வோஷிங்டன் சென்றடைந்ததும், அமெரிக்க முதல் பெண்மணியான ஜில் பைடனுடன் வேர்ஜீனியாவில் உள்ள தேசிய அறிவியல் அறக்கட்டளைக்குச் சென்றார்.

இளம் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்காக தனது அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளை அவர் அங்கு பகிர்ந்து கொண்டார். அதன் மூலம் எதிர்வரும் பத்தாண்டு காலப்பகுதியை 'தொழில்நுட்ப தசாப்தமாக' மாற்றுவதே தனது அரசாங்கத்தின் இலக்கு என்று பிரதமர் நரேந்திர மோடி அங்கு கூறினார்.

"இளம் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில், 'Start Up India' திட்டத்தை நாங்கள் தொடங்கினோம். இந்த பத்தாண்டுகளை தொழில்நுட்பப் பத்தாண்டுகளாக மாற்றுவதே எங்கள் இலக்கு" என்று பிரதமர் மோடி கூறினார்.

"திறன் இந்தியா (Skill india)பிரசாரத்தின் கீழ் 50 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் செயற்கை

நுண்ணறிவு, ட்ரோன் ஆகிய துறைகளில் திறமை பெற்றுள்ளனர்" என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இதேவேளை ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான எச். லோரன்ஸ் கல்ப், ஜூனியர் ஆகியோரைச் சந்தித்த பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவில் உற்பத்தியை மேம்படுத்த சிறந்த தொழில்நுட்ப ஒத்துழைப்பைப் பெறுவது குறித்து விவாதித்தார்.

வோஷிங்டனில் அப்ளைட் மெட்டீரியல்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி கெரி இ.டிக்கர்சனை சந்தித்துப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவில் சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்துவதற்கான வழிகளைப் பற்றி ஆராய்ந்தார்.

மைக் ரோன் தொழில்நுட்பத் தலைவர் ம ற்றும் தலைமை நிர்வாக அதிகாரி சஞ்சய் மெஹ்ரோத்ராவுடனும் பிரதமர் மோடி சந்திப்பொன்றை நடத்தினார். இந்தியாவில் உற்பத்தித் துறையை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து அவர் விவாதித்தார்.

இந்த தசாப்தத்தை தொழில்நுட்பத்துக்கான தசாப்தமாக மாற்றும் நோக்கத்துடன் கல்வி, திறன் மேம்பாடு மற்றும் புதுமை ஆகியவற்றின் மீது இந்தியா கவனம் செலுத்தி வருகின்றது எனக் குறிப்பிட்ட நரேந்திர மோடி, தனது அரசாங்கத்தின் 'ஸ்டார்ட் அப்' இந்தியாவின் திட்டங்களையும் அங்கு பகிர்ந்து கொண்டார்.

இச்சந்திப்புகளுக்கு முன்னதாக, எலோன் மஸ்க் உள்ளிட்ட சிலிக்கன் பள்ளத்தாக்கின் முன்னணி

தொழில்முனைவோரை பிரதமர் மோடி சந்தித்தார்.

இதுஇவ்விதமிருக்க வோஷிங்டனை பிரதமர் நரேந்திர மோடி வந்தடைந்ததும் அங்கு அவருக்கு மரியாதையுடனான வரவேற்பு வழங்கப்பட்டது.

வேர்ஜீனியாவில் உள்ள அலெக்ஸாண்ட்ரியாவில் உள்ள தேசிய அறிவியல் அறக்கட்டளைக்கு விஜயம் செய்த போது, கல்வி மற்றும் பணியாளர் மேம்பாடு ஆகிய துறைகளில் அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையில் இதுவரை பகிரப்பட்டுள்ள விடயங்களை அவர் எடுத்துரைத்தார்.

இந்தியாவின் திறமைகளை பாராட்டிய நரேந்திர மோடி, இந்திய_ அமெரிக்க உறவுகளை வலுப்படுத்தும் வகையில் அதிக இளைஞர்களைக் கொண்ட நாடாக இந்தியா இருப்பதை குறிப்பிட்டுக் கூறினார்.

"அமெரிக்காவில் உயர்தர கல்வி நிறுவனங்கள் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் உள்ளன. மறுபுறம், இந்தியா உலகின் மிகப்பெரிய இளைஞர் ஆளணியைக் கொண்டுள்ளது. அதனால்தான், இந்திய_அமெரிக்க கூட்டாண்மையானது நிலையான மற்றும் உலகளாவிய வளர்ச்சியின் இயந்திரமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்" என்று பிரதமர் நரேந்திர மோடி அங்கு மேலும் கூறினார்.

அமெரிக்காவின் முதல் பெண்மணியான ஜில் பைடன் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், இந்தியாவுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான இருதரப்புப் பிணைப்புக்கு கல்வி ஒரு மூலக்கல்லாக உள்ளது. இந்தியப் பிரதமரின் இந்த விஜயத்தின் மூலம் இரு நாடுகளுக்கிடையிலான நல்லுறவைத் தொடர்ந்து கட்டியெழுப்பவும், வ லுப்படுத்தவும் முடியுமென நாங்கள் நம்புகிறோம்" என்று கூறினார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 2014ஆம் ஆண்டு பிரதமராகப் பதவியேற்றதில் இருந்து ஐந்து

தடவை அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் தற்போதைய பயணம் அவரது முதலாவது அமெரிக்க அரசுப் பயணமாகும்.

# ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இளைஞர் பாராளுமன்ற 5ஆவது அமர்வு

ஐந்தாவது இளைஞர் பாராளுமன்றின் மூன்றாவது அமர்வு இம்முறை ஜனாதிபதி செயலகத்தில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க பழைய பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் கடந்த 17, 18 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் ,தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர் பசிந்து குணரத்ன உட்பட விசேட அதிதிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது நாட்டின் பல பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர். அக்கூட்டத் தொடரின் இரண்டாவது நாள் அமர்வில் அநுராதபுரம் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களில் எப். எம் சஜீர் உரையாற்றியிருந்தார்.

"இளைஞர் பாராளுமன்றம் பற்றிய விளக்கம் இன்று அநேகமானோரிடம் இல்லை.





இளைஞர் பாராளுமன்றம் ஏன் ஸ்தாபிக்கப்பட்டது? அதன் அடைவு என்ன? போன்ற விளக்கம் பலரிடம் இல்லை.

இளைஞர்கள் நாளைய தலைவர்கள்.. இளைஞர்களுக்கு அரசியலில் வாய்ப்பு வழங்க வேண்டும்.

இன்று எத்தனை அரசியல் கட்சிகள் இளைஞர்கள் அரசியலில் களம் காண சந்தர்ப்பத்தை இளைஞர்களுக்கு வழங்கியுள்ளன என்று பார்த்தால் அவற்றை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

இளைஞர் பாராளுமன்ற தெரிவானது 05வது இளைஞர் பாராளுமன்ற தெரிவைப் போன்று ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கு உட்பட்டதாக இருக்கு வேண்டும். இளைஞர்களுக்கான பிரச்சினைகளை இளைஞர்களே இளைஞர் பாராளுமன்றத்தினூடாக இனங்கண்டு அதனைத் தீர்க்கும் ஒரு நடைமுறையும் கொண்டு வரப்பட வேண்டும் என்று நான் யோசனை முன்வைக்கின்றேன்.

இளைஞர் பாராளுமன்றினூடாக அனுபவத்தை பெற்று வருகின்ற ஒவ்வொரு இளைஞர் பாராளுமன்ற உறுப்பினருக்கும் தேசிய அரசியலில் அரசியல் மேற்கொள்ள, பிரதேச அரசியலில் அரசியல் மேற்கொள்ள அரசியல் கட்சிகள் சந்தர்ப்பங்களை வழங் வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

எமது கடமை இளைஞர்களுக்கான வழிகாட்டுதல்களை மேற்கொண்டு அவர்களுக்கான ஒரு தளத்தை அமைத்துக் கொடுப்பதும், அவர்களுக்கான உரிமையை பெற்றுக் கொடுப்பதும் தான்.

அந்த வகையில் இளைஞர்களுக்கான ஒரு பலமான அத்திவாரத்தை இந்த இளைஞர் பாராளுமன்றம் அமைத்திருக்கிறது. இளைஞர் பாராளுமன்ற காலம் முடிவுற்றாலும். தொடர்ந்து ஒரு சில திட்டங்களை இளைஞர்களுக்காக நடைமுறைப்படுத்த எத்தனித்துள்ளோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

ஏ.ஆர்.எம்.ரபியுதீன்...
(திறப்பனை தினகரன் நிருபர்)

# அக்கரைப்பற்று அஸ்-ஸிறாஜ் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினரின் சாதனை

அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட அக் / அஸ் ஸிறாஜ் மகாவித்தியாலய (தேசிய பாடசாலை) பழைய மாணவர் சங்கத்தின் சிந்தனையில் உதித்து பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரின் பங்களிப்புடன் சுமார் 2.3 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சுற்றுமதிலும் நுழைவாயிலும் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகளின் உதவியுடன், பாடசாலையின் அதிபர் ஏ.ஜீ.பஸ்மில் தலைமையில் நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டன. நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட அக்கரைப்பற்று வலயக் கல்விப்பணிப்பாளர் அஷ்ஷேக் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் சுற்றுமதில், நுழைவாயில் ஆகியவற்றை வைபவ ரீதியாக திறந்து வைத்தார். நினைவுப்படிகமும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

பாடசாலையின் பாண்ட் வாத்தியக் குழுவினரினால் அதிதிகளும், பழைய மாணவர் சங்க பிரதிநிதிகளும் புதிதாக அமைக்கப்பட்ட மதில் மற்றும் நுழைவாயிலுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். பல வருடங்களாக இப்பாடசாலையின்




சுற்று மதில் நிர்மாணம் தாமதமடைந்து வந்தது. இப்பணியை இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்க பிரதிநிதிகளின் ஆதரவோடு பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் செய்திருப்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இது போன்ற பணிகள் பாராட்டப்பட வேண்டும் என்று பாடசாலை அதிபர் ஏ.ஜீ.பஸ்மில் தெரிவித்தார். இப்பாடசாலையில் இச்சுற்று மதில் சேதமடைந்து காணப்பட்ட போது இரவு நேரங்களில் பாடசாலை கட்டடங்களை போதைப்பொருள் பாவனைக்காகவும் இன்னும் பல தீய செயல்களை செய்வதற்கும் சமூகவிரோதிகள் பயன்படுத்தி வந்தார்கள்.

இதனைத் தடுப்பதற்கு பழைய மாணவ சங்க பிரதிநிதிகளுடன் இணைந்து பாடசாலை சமூகம் பெரும் முயற்சியில் ஈடுபட்டாலும், சேதமடைந்த நிலையில் உள்ள சுற்றுமதில் நிர்மாணம் முக்கிய தேவையாக இருந்தது.

எம்.எஸ்.எம்.றிஸ்வான்...
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

# அரபா நாளின் மகத்துவம்



"நிச்சயமாக அல்லாஹ்வுடைய ஏட்டில் வானங்களையும் பூமியையும் படைத்த நாளில் இருந்தே மாதங்களின் எண்ணிக்கை பன்னிரெண்டாகும். அவற்றில் நான்கு மாதங்கள் புனிதமானவை..." (தௌபா 36) என அல்லாஹுத்தஆலா குறிப்பிடுகின்றான். ரஜப், துல்க.்.தா, துல்ஹஜ், முஹர்ரம் மாதங்களே அவையாகும் என அந்த நான்கு மாதங்களையும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இந்நான்கு மாதங்களில் துல்கஃதா, துல்ஹிஜ்ஜா, முஹர்ரம் என தொடர்ந்து வரும் மூன்று மாதங்கள் அல்லாஹ் தஆலாவினால் புனிதப்படுத்தப்பட்டுள்ளன. இம்மூன்று மாதங்களிலும் நடுவில் வருகின்ற துல்ஹிஜ்ஜா மாதத்தின் அரபாவுடைய நாளிலேயே அல்குர்ஆன் இறக்கப்படுவது பூரணமாக்கப்பட்டது.

அல்குர்ஆன் முதலில் இறக்கப்பட்ட ரமழானின் இறுதிப் பத்தில் வரும் லைலத்துல் கத்ர் இரவு போலவே துல்ஹிஜ்ஜாவின் விஷேடமான முதல் பத்து இரவுகளில் அல்குர்ஆன் இறங்குவது நிறைவுறுத்தப்பட்ட அரபா தினம் முக்கியத்துவம் பெறுகிறது. அரபா தினத்தின் முக்கியத்துவத்தைக் குறித்துக் காட்டும் இமாம் இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் பின்வரும் சம்பவத்தை எடுத்துக் காட்டுகிறார்கள். "தாரிக் பின் ஷிஹாப் கூறியதாக இமாம் அஹமத் (ரஹ்) பதிந்து வைத்திருக்கிறார்கள். ஒரு யூதர், உமர் (ரழி) அவர்களிடம், 'அமீருல் முஃமினீனே, உங்களுடைய வேதத்தில் ஒரு வசனம் இருக்கிறது. நீங்கள் அனைவரும் அதனை ஓதி வருகிறீர்கள். இவ்வசனம் எங்களுக்கு இறக்கப்பட்டிருந்தால் (அது இறக்கப்பட்டதற்காக) அந்நாளை நாங்கள் பெருநாளாகக் கொண்டாடியிருப்போம்' என்று கூறினார். அவ்வசனம் என்ன என உமர் (ரழி) கேட்க. "இன்றைய தினம் உங்களுக்கு உங்களுடைய மார்க்கத்தைப் பூரணப்படுத்தி விட்டேன். உங்கள் மீது என் அருட்கொடையையும்பூரணமாக்கிவிட்டேன். இஸ்லாத்தையே உங்களுடைய மார்க்கமாக நான் பொருந்திக் கொண்டு விட்டேன்" (அல் மாஇதா 3) என்ற வசனங்களே அவை" என அந்த யூதர் பதிலளித்தார். அதற்கு உமர் (ரழி) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக, இறைத்தூதருக்கு அவ்வசனம் எங்கே? எப்போது? அருளப்பட்டது என்பதை நான் அறிவேன். வெள்ளிக்கிழமையொன்றின் அரபா தினத்தின் மாலை வேளையில் அவ்வசனம் அருளப்பட்டது' எனக் கூறினார்கள்.

இறைதூதர் (ஸல்) அவர்கள் தமது தூதினை பகிரங்கமாகச் சொல்வதனை ஸபா மலையில் இருந்து ஆரம்பித்தார்கள். தனது இறுதி உரையை அரபா மலையில் முடித்தார்கள். "மக்களே! என் பேச்சை கவனமாகக் கேளுங்கள்! இந்த ஆண்டிற்குப் பிறகு மீண்டும் இவ்விடத்தில் சந்திப்பேனா என்பது எனக்குத் தெரியாது" என்று நபி(ஸல்) அவர்கள் ஆரம்பித்தார்கள். இறுதியில் மக்களை நோக்கி, 'மறுமை நாளில் உங்களிடம் என்னைப் பற்றி விசாரிக்கப்படும்போது நீங்கள் என்ன சொல்வீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், "நீங்கள் (மார்க்க போதனைகள் அனைத்தையும் எங்களிடம்) தெரிவித்து விட்டீர்கள். (உங்களது தூதுத்துவப் பொறுப்பை) நீங்கள் நிறைவேற்றி விட்டீர்கள். (சமுதாயத்திற்கு) நன்மையை நாடினீர்கள் என நாங்கள் சாட்சியம் அளிப்போம்' என்றார்கள். உடனே அல்லாஹ்வின் தூதர் அவர்கள், தமது ஆட்காட்டி விரலை வானை நோக்கி உயர்த்தி சைகை செய்த பிறகு, அதை மக்களை நோக்கித் தாழ்த்தி "இறைவா! இதற்கு நீயே சாட்சி! இறைவா! இதற்கு நீயே சாட்சி! இறைவா! இதற்கு நீயே சாட்சி! என்று முடித்தார்கள்.

இந்த அரபா தினத்திலேயே அல்லாஹுத்தஆலாவும் இம்மார்க்கத்தை இன்றுடன் முழுமையாக்கி விட்டதாகவும் இஸ்லாத்தையே மார்க்கமாக அவன் பொருந்திக் கொண்டதாகவும் அறிவித்து விட்டான். இச்செய்தி சொல்ல வருவதைப் புரிந்து கொண்ட ஸஹாபாக்களுக்கு அன்றைய தினம் கவலை தோய்ந்த நாளாகிவிட்டது. ஒவ்வொருவரும் கண்ணீர் விட்டழுதார்கள்.

நபி (ஸல்) அவர்கள் தமது தூதைப் பூரணப்படுத்தியதாக நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியவர்கள் சாட்சியமளித்த நாளாக அரபாவுடைய தினம் காணப்படுகிறது. அரபா உரையின் இறுதியில் நபியவர்கள் மக்களை நோக்கி "இங்கு வந்திருப்பவர்கள், வராதவர்களுக்கு இவ்வழிகாட்டல்களை எடுத்துச் சொல்லட்டும். விஷயம் சென்று சேருபவர்களில் சிலர், நேரடியாக கேட்பவரைவிட நன்கு ஆராயும் தன்மை உடையவராக இருக்கலாம்." என்று கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: ஸஹீஹுல் புஹாரி)

இவ்வசனங்களைக் கேட்ட நபித்தோழர்கள் தமது ஒட்டகங்கள் எந்தப் பக்கம் திரும்பியிருந்ததோ அந்தத் திசைகளில் தமது ஒட்டகங்களைச் செலுத்தி அல்லாஹ்வின் தூதை, நபிகளாரின் வழிகாட்டலை எத்திவைப்பதற்காகச் சென்றார்கள். இந்த வகையில் எம்மிடம் வந்து சேர்ந்திருக்கின்ற இந்தத் தூதை மக்களிடம் எத்திவைக்க வேண்டியதன் அவசியத்தை இந்த அரபா தினம் எமக்கு உணர்த்துகிறது.

அரபா தினத்தை மேன்மைப்படுத்தும் வகையில் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்கள் பல இருக்கின்றன. "இந்த (அரபா) நாளைப் போல வேறெந்த நாளிலும் அல்லாஹுத்தஆலா மனிதர்களை நரகத்திலிருந்து விடுதலை செய்வதில்லை" (ஆதாரம்: முஸ்லிம்)

அரபா தினத்தில் நோன்பு நோற்பது ஒருவருடைய கடந்த வருடத்தின் பாவங்களுக்கும் முன்வரும் வருடத்தின் பாவங்களுக்கும் மன்னிப்பாகும்' என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த வகையில் அரபா நாளில் நோன்பிருப்பது முக்கியமான ஸுன்னத்தாகும். அல்லாஹுத்தஆலா இந்நாளில் அளவுகணக்கில்லாமல் மன்னிப்பு வழங்குவதனால் நோன்பிருந்து பாவமன்னிப்புத் தேட வேண்டும். 'லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹ், லஹுல் முல்க், வலஹுல் ஹம்த், வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர்' என்பதனை அரபா நாளில் அதிகமாக ஓதுமாறு நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இது தானும் தனக்கு முந்திய நபிமாரும் ஓதி வந்த சிறந்த துஆவாகும் என அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: முவத்தா)

அரபா நாளிலும் ஐயாமுத் தஷ்ரீக்குடைய நாட்களிலும் தஹ்லீல் (லாஇலாஹ இல்லல்லாஹ்), தக்பீர் (அல்லாஹு அக்பர்), தம்ஹீத் (அல்ஹம்துலில்லாஹ்) தஸ்பீஹ்( சுப்ஹானல்லாஹ்) வை அதிகம் ஓதுமாறும் நபியவர்கள் வழிகாட்டியுள்ளார்கள்.

உண்மையில் அரபா தினம் என்பது முஸ்லிம்கள் பின்பற்றிவரும் இஸ்லாம் மார்க்கத்தை அல்லாஹ் பொருந்திக் கொண்டு ஒரே மார்க்கமாகப் பிரகடனப்படுத்திய பெருநாளாகும். நபியவர்களுக்கு இறக்கப்பட்ட அல்குர்ஆன் முழுமைப்படுத்தப்பட்ட நன்நாளும் அதுவாகும். நபியவர்கள் தமது தூதுத்துவத்தை பூரணமாக நிறைவேற்றி விட்டதாக ஸஹாபாக்கள் சாட்சியம் சொன்ன பொன்னாளும் கூட. அந்த வகையில் இந்நாளை இபாதத்துகளால் அலங்கரிப்பது போன்றே நபியவர்கள் பூரணப்படுத்திய தூதை எத்திவைப்பதிலும் முஸ்லிம்கள் இந்நாளில் கவனமெடுப்பது மிகவும் அவசியமாகும்.

**பியாஸ் முஹம்மத்...**

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

## அரபா நோன்பின் முக்கியத்துவம்

ரமழான் மாதக் கடமையான ஒரு மாத நோன்பைத் தவிர மற்ற சில நாட்களிலும் நோன்பு நோற்குமாறு நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். அவற்றில் மிக முக்கியமான நோன்பு அரபா தின நோன்பாகும். ரமழானைத் தொடர்ந்து வரும் இஸ்லாமிய வருடத்தின் இறுதி மாதமான துல்ஹஜ் மாதத்தின் ஒன்பதாம் நாளே அரபா தினமாகும். அதாவது ஹஜ் யாத்திரிகர்கள் ஹஜ்ஜின் முக்கியக் கடமைகளில் ஒன்றான அரபா மைதானத்தில் ஒன்று கூடும் நாளாகும். இந்நாளில் ஹஜ்ஜுக்குச் செல்லாத முஸ்லிம்கள் நோன்பு நோற்குமாறு நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்.

ஒரு தடவை, அரபா நாளில் நோன்பு நோற்பது பற்றி நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது. அதற்கு அவர்கள் "அது கடந்த வருடத்தின் மற்றும் வரக்கூடிய வருடத்தின் பாவத்தை போக்கிவிடும்!" என்று பதிலளித்தார்கள். (ஆதாரம்: முஸ்லிம், திர்மிதி, அபூதாவூத்).

"நபி (ஸல்) அவர்கள் துல்ஹஜ் ஒன்பதாம் நாள் நோன்பு வைப்பார்கள் என்று நபிகளார் (ஸல்) அவர்களின் துணைவியார்களில் சிலர் கூறினார்கள்" (ஆதாரம்: அபூதாவூத், நஸயி, அஹ்மத்). ஆனால் அரபா தினத்தன்று அரபா மைதானத்தில் (குழுமியிருக்கும் ஹாஜிகள்) நோன்பு நோற்பதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள்.

(ஆதாரம்: அபூதாவூத், அஹ்மத், நஸயி)

அரபா மைதானம் என்பது மறுமையில் இறைவன் முன் மனிதர்கள் விசாரணைக்காக எழுப்பப்பட்டு நிறுத்தி வைக்கப்படும் மஹ்ஷர் மைதானத்திற்கு இவ்வுலகில் இறைவன் காண்பிக்கும் ஓர் உதாரணமாகும். இதனை அரபா மைதானத்தில் ஒரு முறையாவது ஹஜ்ஜிற்காகச் சென்று ஒன்று கூடியவர்கள் கண்ணாரக் கண்டு உணர்ந்திருப்பார்கள். இலட்சக்கணக்கான மக்கள் ஓர் இடத்தில் ஒரே நேரத்தில் ஒன்று கூடுவதும் தன்னைப் படைத்தவனிடம் இருகரமேந்தி பாவமன்னிப்புத் தேடுவதும் பல மணிநேரம் இவ்வுலகச் சிந்தையின்றி இறை தியானத்தில் இருப்பதும் இத்தினத்தில் அரபா மைதானத்தில் நிகழ்கிறது.

அதே தினம் உலகின் பிற பகுதிகளில் இருக்கும் முஸ்லிம்களும் இறை தியானத்தில் தங்களையும் ஈடுபடுத்த, நோன்பு வைப்பதற்கு நபி (ஸல்) அவர்கள் ஏவியிருப்பது பல்வேறு அர்த்தங்களையும் எதிர்பார்ப்புகளையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

எனவே இத்தினத்தில் ஹஜ்ஜிற்குச் செல்லாத முஸ்லிம்கள் அவசியம் நோன்பு வைத்து, தங்களையும் ஹஜ்ஜாஜிகளோடு இறைதியானத்தில் ஒன்றிணைக்க முயல வேண்டும்.

**பிந்த் இஸ்மாயீல்...**

## துல் ஹஜ்ஜின் முதல் பத்து நாட்கள்

அல்லாஹ்தஆலா அடியார்கள் தன்னை நெருங்க வேண்டும் என்பதற்காக பல சந்தர்பங்களை எமக்குத் தந்து அமற்களால் சிறந்தவர்களாக நாம் மாற ஒவ்வொரு கால கட்டத்திலும் வாய்ப்பளிக்கின்றான். அந்த வகையில் இப்போது நாம் இருக்கக் கூடிய காலமும் புனித மாதங்களில் ஒன்றாகும். இது ஒவ்வொரு முஸ்லிமின் வாழ்கையிலும் சுவனத்துக்கான அறுவடை காலம்.

அதிலும் இம்மாதத்தின் முதல் பத்து நாட்களும் அதிசிறப்புக்குரியவை. அல்லாஹ்தஆலா 'பத்து இரவுகளின் மீது சத்தியமாக... என்று (89:2) அல் குர்ஆனில் குறிப்பிட்டுள்ளான்.

இங்கு பத்து இரவுகள் என்பது துல் ஹஜ் மாதத்தின் முதல் பத்து இரவுகளைக் குறிக்கும் என இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் விளக்கம் அளித்துள்ளார்கள்.

இக்காலப்பகுதியில் புரியப்படும் நல்லமல்கள் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவை. '(துல்ஹஜ் முதல்) பத்து நாட்களில் செய்யும் நல்லறத்தையும் விட அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான நல்லமல்கள் கிடையாது' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது நபித்தோழர்கள்

'ஜிஹாதை விடவுமா?' எனக்கேட்க, 'தன் உயிரையும், பொருளையும், பணயம் வைத்துப் புறப்பட்டு இரண்டையும் (இறை வழியில்) இழந்து விட்டவன் செய்த ஜிஹாதைத் தவிர' என்று நபி(ஸல்) கூறினார்கள்.

(ஆதாரம்: ஸஹீஹ் புஹாரி)

இவை இவ்வாறிருக்க, 'ஹஜ் என்றால் அரஃபாவில் தங்குவதுதான்' எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: ஹாகிம்). மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ், அரஃபா (துல்ஹஜ் 9ஆவது) நாளில் அடியார்களுக்கு நரக விடுதலையளிக்கும் அளவிற்கு வேறெந்த நாட்களிலும் நரக விடுதலை அளிப்பதில்லை. அன்றைய தினம் அவன் (அரஃபாவிலுள்ளவர்களை) நெருங்கி, வானவர்களிடம் அவர்களைக் குறித்துப் பெருமை பாராட்டுகிறான். "இவர்கள் எதை நாடி (இங்கு குழுமி)யுள்ளார்கள்?" என்று (பெருமிதத்தோடு) கேட்கிறான்' என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்)

இதேவேளை இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானீ (ரஹ்) அவர்கள், துல் ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களும் மகத்தான நாட்களாகும் என சிலாகித்துக் கூறப்பட்டிருப்பதன் காரணம் என்னவெனில், அந்நாட்களில் தான் பிரதான வணக்க வழிபாடுகள் யாவும் ஒருங்கே அமைந்திருக்கிறது. தொழுகை, நோன்பு, ஹஜ், தர்மம், ஆகிய யாவும் இந்நாட்களில் முக்கிய அமல்களாக நிறைவேற்றப்படுகின்றன. இந்நிலை வேறு எந்த நாட்களிலும் சாத்தியப்பட மாட்டாது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

அதனால் துல் ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களிலும் ஹஜ்ஜுடன் தொடர்பான அனைத்து வணக்கங்களிலும் நாம் ஈடுபட வேண்டும். அதில் கவனம் செலுத்த வேண்டும். அக்கறை காட்ட வேண்டும். பர்ளான வணக்கங்களைத் தவறாது நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். ஸுன்னத்தான வணக்கங்களின் மூலம் அல்லாஹ்வை நெருங்க முயற்சிப்பது அவசியம்.

ஏனெனில் அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள். '

'எவன் என் நேசரை பகைத்துக் கொண்டானோ அவனுடன் நான் போர் பிரகடனம் செய்கிறேன். எனக்கு விருப்பமான செயல்களில் நான் கடமையாக்கிய ஒன்றை விட வேறு எதன் மூலமும் என் அடியான் என்னுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதில்லை. என் அடியான் கூடுதலான (நஃபிலான) வணக்கங்களால் என் பக்கம் நெருங்கி வந்து கொண்டேயிருப்பான். இறுதியில் அவனை நேசித்து விடும்போது அவன் கேட்கிற செவியாக, அவன் பார்க்கிற கண்ணாக, அவன் பற்றுகிற கையாக, அவன் நடக்கிற காலாக நான் ஆகிவிடுவேன். அவன் என்னிடம் கேட்டால் நான் நிச்சயம் தருவேன். என்னிடம் அவன் பாதுகாப்புக் கோரினால் நிச்சயம் நான் அவனுக்குப் பாதுகாப்பு அளிப்பேன். ஓர் இறைநம்பிக்கையாளனின் உயிரைக் கைப்பற்றுவதில் நான் தயக்கம் காட்டுவதைப் போன்று, நான் செய்யும் எச்செயலிலும் தயக்கம் காட்டுவதில்லை. அவனோ மரணத்தை வெறுக்கிறான். நானும் (மரணத்தின் மூலம்) அவனுக்குக் கஷ்டம் தருவதை வெறுக்கிறேன்'.

(ஆதாரம்: ஸஹீஹ் புஹாரி)

அதேநேரம் 'ஓர் உம்ரா செய்வது மறு உம்ரா வரையிலுள்ள பாவங்களின் பரிகாரமாகும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு, சொர்க்கத்தைத் தவிர வேறு கூலியில்லை' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: ஸஹீஹ் புஹாரி)

மேலும் இந்த நாட்களில் அதிகமதிகம் தக்பீர் சொல்ல வேண்டும். இப்னு உமர் (ரழி) அவர்களும், அபூஹுரைரா (ரழி) அவர்களும் துல்ஹஜ் மாதத்தில் முந்தைய பத்து நாட்களில் கடை வீதிக்குச் சென்றால் தக்பீர் சொல்வார்கள். அதைப் பார்த்து மக்களும் சொல்வார்கள். நபிலான தொழுகைக்குப் பிறகும் முஹம்மது பின் அலி (ரஹ்) அவர்கள் தக்பீர் சொல்வார்கள். அதனால் துல் ஹஜ் தலைப்பிறை தொடக்கம் அய்யாமுத் தஷ்ரீக்குடைய நாட்கள் முடியும் வரை நாம் தக்பீர், தஹ்மீத், தஹ்லீல் கூற வேண்டும். அல் குர்ஆனுடன் அதிகம் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதிகமதிகம் ஸதகாவும் கொடுக்க வேண்டும். துல் ஹஜ் பிறை பத்தில் தியாகத் திருநாளைக் கொண்டாடுவதோடு பெருநாள் தொழுகை முதல் மூன்று நாட்களுக்குள் உழ்ஹிய்யாவை நிறைவேற்றவும் தவறலாகாது.

ஆகவே இந்த நாட்களில் நாம் செய்யும் நல்லமல்களுக்கு அதிசிறந்த கூலி கிடைக்கப் பெறும். அதனால் இந்த சந்தர்ப்பத்தைத் தவறவிடாது பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அது இறையடியார்களின் பொறுப்பாகும்.

**அப்துல்லாஹ்...**

## உழ்ஹிய்யா—ஒரு சிறு விளக்கம்

இஸ்லாத்தின் முக்கிய கடமைகளில் ஒன்றாக விளங்கும் ஹஜ்ஜில் உழ்ஹிய்யா (அறுத்துப் பலியிடல்) கிரியையும் ஒரு பகுதியாகும்.

துல் ஹஜ் மாதம் பிறை 10 அன்று பெருநாள் தொழுது முடிந்ததில் இருந்து, அய்யாமுத் தஷ்ரீக் பிறை 11, 12, 13 அன்று இறுதி நேரம் வரை உள்ள கால கட்டங்களில் உழ்ஹிய்யாவை நிறைவேற்ற வேண்டும்.

இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் பதிவு செய்துள்ள ஹதீஸ் படி, ஒட்டகம், ஆடு, மாடு ஆகிய பிராணிகளை அல்லாஹ்வுக்காக அறுத்து இக்கடமையை நிறைவேற்றுவது அவசியம். உழ்ஹிய்யா பொதுவாக குர்பான் என்றும் அழைக்கப்படுகிறது. ஆனால் குர்பானுக்கும் உழ்ஹிய்யாவுக்குமிடையில் வித்தியாசங்கள் உள்ளன. குர்பானை யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் செய்யலாம். எதை வேண்டுமானாலும் குர்பான் கொடுக்கலாம். ஆனால், உழ்ஹிய்யாவுக்கு காலம், நேரம், கொடுக்கப்படும் பிராணி அனைத்துமே வரையறை செய்யப்பட்டதாகும்.

இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு வாழ்ந்த இப்றாஹீம்(அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று தனது மகன் இஸ்மாயீல்(அலை) அவர்களை அறுத்துப் பலியிட முன்வந்தார். இஸ்மாயீல்(அலை) அவர்களும் அல்லாஹ்வுக்காக தனது உயிரைத் தியாகம் செய்ய முன்வந்தார்கள். இந்த நிலையில் இஸ்மாயீல்(அலை) அவர்களுக்காக ஒரு ஆட்டை அறுக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்டான். இம்மாபெரும் தியாகத்தை நினைவுகூரும் வகையில் இக்கடமை பேணப்பட்டு வருகின்றது.

அதேநேரம் இக்கடமையை நிறைவேற்றுவது தொடர்பில் சில வழிகாட்டல்களையும் இஸ்லாம் வழங்கியுள்ளது. அந்த வகையில் நபி(ஸல்) அவர்கள், 'துல் ஹஜ் (முதல்) பத்தில் நுழைந்துவிட்டால் உங்களில் உழ்ஹிய்யா கொடுக்க யாரேனும் விரும்பினால் அவர் தனது நகம், முடி என்பவற்றைக் களைய வேண்டாம்' என கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம், அஹ்மத், தாரமீ, இப்னுமாஜா)

மேலும் இக்கடமைக்காக தெரிவு செய்யப்படும் பிராணி குருடாகவோ, நோய்க்கு உட்பட்டதாகவோ, நொண்டியானதாகவோ மெலிந்தவையாகவோ, அங்கங்கள் குறைபாடு கொண்டவையாகவோ இருக்கக்கூடாது.

ஒருவர் உழ்ஹிய்யாவை நிறைவேற்றும் பிராணி ஆடாயின் ஒரு குடும்பத்திற்கு ஒன்று போதுமானது (ஆதாரம் திர்மிதி) என்று குறிப்பிட்டுள்ள நபி(ஸல்) அவர்கள் ஒட்டகம், மாடு என்றால் ஏழு பேர் சேர்ந்தும் வழங்கலாம் (ஆதாரம் திர்மிதி) என்றும் கூறியுள்ளார்.

உழ்ஹிய்யாவுக்கு தெரிவு செய்யும் பிராணியை ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைக்கு பின்பு அறுக்க வேண்டும். நபி (ஸல்) அவர்கள் அறிவித்துள்ள படி, 'யார் பெருநாள் தொழுகைக்கு முன் அறுக்கின்றாரோ அது உழ்ஹிய்யாவாக அமையாது. அவர் தன் குடும்பத்தின் தேவைக்காக அறுத்ததாகவே அது கணக்கிடப்படும்'.

(ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

உழ்ஹிய்யா கொடுக்கப்பட்ட பிராணிகளின் முடிகளையோ தோல்களையோ மாமிசங்களையோ அறுத்தவருக்கு கூலியாக கொடுக்கக்கூடாது. 'குர்பானி கொடுப்பதற்கான ஒட்டகங்களை மேற்பார்வை செய்வதற்கு என்னை நபி (ஸல்) அவர்கள் நியமித்தார்கள். அவற்றின் மாமிசம் தோல் ஆகியவற்றை தர்மமாகவே கொடுக்க வேண்டும் என்றும் அவற்றில் எதையும் அறுப்பவருக்கு கூலியாக கொடுக்கக்கூடாது என்றும் அன்னார் கூறினார்கள். அறுப்பதற்குரிய கூலியை நாங்கள் தனியாகவே கொடுப்போம் என அலி (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

ஆகவே உழ்ஹிய்யாவை அதற்குரிய ஒழுங்கில் நிறைவேற்றிட முயற்சிப்போம்.

**அம்மார்...**

## பாடசாலைகளில் ஆரம்ப...

தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று விசேட அறிக்கையொன்றை ஆற்றிய அமைச்சர், அமைச்சரவை ஊடாக இதற்கான விசேட அங்கீகாரம் கிடைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

இதன்படி எதிர்காலத்தில் கல்வி அமைச்சுடன் இணைந்து சிறுவர்களுக்கு ஜப்பானிய மொழியை கற்பிப்பது தொடர்பான செயற்பாடுகள் தயாராகி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜப்பானிய சந்தையை இலக்காகக் கொண்டு 5000 ஜப்பானிய மொழி பயிற்றுவிப்பாளர்களைக் கொண்ட குழுவை ஆரம்பிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

## யாழ். புளி வாழைப்பழம்...

தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின்போதே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் மூன்று வருடங்களில் வருமானத்தை ஐந்து இலட்சமாக உயர்த்த இலக்கு நிர்ணயித்துள்ளதாக வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன குறிப்பிடுகின்றார்.

வடமாகாணத்தில் 8000 ஏக்கர் காணிகளை இனங்கண்டு இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மாகாண ஆளுநரிடமிருந்து பணிப்புரைகள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மாம்பழம், பப்பாளி, பாசிப்பழம் போன்றவற்றை வெளிநாட்டு சந்தைகளுக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாகாணத்தின் மிளகாய்த் தேவையை பூர்த்தி செய்ய 1000 ஏக்கரில் மிளகாய் பயிரிடப்பட்டு வருவதாகவும் தெரியவந்தது.

## பிரான்ஸ் கடற்படை ...

அறிவிக்கப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றிற்காக பிரான்ஸ் கடற்படைக்கு சொந்தமான கப்பல் (21) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. கடற்படை மரபுப்படி இந்த கப்பலுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது. 102 மீட்டர் நீளம் கொண்ட பிரான்ஸ் கடற்படைக் கப்பலில் 107 பேர் இலங்கை வந்துள்ளனர்.

இக்கப்பல் தீவில் தரித்திருக்கும் போது, அதில் வருகை தந்துள்ள பிரான்ஸ் கடற்படையினர் தீவின் முக்கிய இடங்களை பார்வையிடுவதற்கு பல பகுதிகளுக்குச் செல்லவுள்ளனர்.

பிரான்ஸ் கடற்படை கப்பல் எதிர்வரும் 27ஆம் திகதி இலங்கையில் இருந்து புறப்பட உள்ளதாக கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

## முன்னாள் சட்ட மா அதிபரை ...

சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா தாக்கல் செய்த மனு தொடர்பிலேயே சட்ட மா அதிபர் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த மனு தொடர்பான விசாரணைகளின் போது சட்டமா அதிபர் திணைக்களம் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளது.

## இராணுவ பஸ்ஸில் மோதி ...

பண்டாரகம கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான காரியாலயத்தின் கணக்காளரான உயிரிழந்த சிறுமியின் தாயார், சிறுமியுடன் மோட்டார் சைக்கிளில் அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்தபோதே பண்டாரகம கூட்டுறவுச் சங்க அலுவலகத்துக்கு முன்பாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

களுத்துறை இராணுவத் தலைமையகத்திலிருந்து சென்ற பஸ் கெஸ்பேவ நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த சிறுமியையும் அவரது தாயையும் பிரதேசவாசிகள் பண்டாரகம மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாகவும், சிறுமி ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## மியன்மாரில் மூன்று...

நிலநடுக்க அறிவியல் மையம் தெரிவித்துள்ளது. இது கடந்த 24 மணிநேரத்திற்குள் ஏற்பட்ட 3வது நிலநடுக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 மணிநேரத்திற்கு முன்னர் 2வது நிலநடுக்கம் ஏற்பட்டது. அது நேற்று அதிகாலை 2.53 மணியளவில் உணரப்பட்டது. 4.2 ரிச்டர் ஆக பதிவான இந்த நிலநடுக்கம் 10 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. முதல் நிலநடுக்கம் புதன் கிழமை இரவு 11.56 மணியளவில் ஏற்பட்டுள்ளது.

அது 4.4 ரிச்டர் ஆக பதிவாகி இருந்தது. குறித்த நிலநடுக்கம் 25 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டு இருந்தது. எனினும், இதனால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய விவரங்கள் எதுவும் உடனடியாக வெளியிடப்படவில்லை.

## டெங்கு அபாய வலயங்களாக ...

கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். பத்தரமுல்லை, கொத்தட்டுவை, மஹரகம ஆகிய டெங்கு அபாயம் அதிகம் காணப்படும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுகளில் இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் போது 7000 இற்கும் அதிகமான வீடுகளின் சுற்றுச்சூழலை பரிசோதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2 வார காலத்திற்கு இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது. வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 46,473 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## அமைச்சர் அலி சப்ரி...

அலி சப்ரி சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

அதன்படி, எதிர்வரும் 24 முதல் 30ஆம் திகதி வரையில் சீனாவுக்கு விஜயம் செய்வார் என இலங்கைக்கான சீனத் தூதரகம் தமது டுவிட்டர் பதிவில் அறிவித்துள்ளது. இலங்கையில் சீன முதலீடுகளை அதிகரித்தல், இருநாடுகளுக்கு இடையிலான நல்லுறவுகளை வலுப்படுத்தல் போன்ற விடயங்கள் குறித்து இந்த சுற்றுப் பயணத்தின் போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

## மருந்து கொள்வனவு நடவடிக்கைகளில் ...

தொடர்பில் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் கேள்வியொன்றை எழுப்பி கருத்துக்களை முன்வைத்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதன்போது மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர், அதேவேளை சுமார் 700 விஷேட மருத்துவ நிபுணர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதால் எதிர்கொள்ள நேரும் சிக்கல்கள் தொடர்பிலும் அவர் சபையில் குறிப்பிட்டார்.

நாட்டில் பல்வேறு பிரதான வைத்தியசாலைகளிலும் பல்வேறு நெருக்கடிகள் நிலவுவதாகவும் மருந்துகள் இன்மை, டாக்டர்கள் பற்றாக்குறை, தேவையான வசதிகளின்மை என பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றன என்றும், அவற்றை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன என்றும் அவர் சபையில் கேள்வி எழுப்பினார்.

மருந்து தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண்பதில் தமது கட்சியின் ஒத்துழைப்பையும் வழங்க முடியும் என்றும் அவர் அதன் போது குறிப்பிட்டார்.

## உருளைக்கிழங்கு கொள்கலனில்...

தகவலின்படி, நீண்ட விசாரணையின் போது, கப்பலின் குளிர் கொள்கலன் பெட்டி யொன்றில் இந்த ஹெரோயின் கையிருப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் குறித்த போதைப்பொருள் கையிருப்பு மற்றும் சந்தேகநபர்கள் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக சுங்கத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுக கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கொள்கலனை கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு வந்த கொழும்பு இறக்குமதியாளர், உடனடியாக கொள்கலனை மீண்டும் பாகிஸ்தானின் கராச்சிக்கு திருப்பி விடுவதற்கு தயாராகியுள்ளார்.

ஆனால் அதற்கு முன்னதாக குறித்த கொள்கலனை கைப்பற்றிய சுங்க அதிகாரிகள் அதிலுள்ள விசேட அறைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஹெரோயின் போதைப் பொருளை கைப்பற்றியுள்ளனர்.

தற்போது, குறித்த ஹெரோயின் போதைப்பொருளை இறக்குமதி செய்த கொழும்பு பிரதேசத்தில் வசிக்கும் மூவர் கொழும்பு துறைமுக கட்டுப்பாட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசாரணைக்கு சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகளும் உதவியிருந்த நிலையில், தற்போது இந்த ஹெரோயின் கையிருப்பு மற்றும் சட்டவிரோத இறக்குமதியில் ஈடுபட்ட மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### முஸ்லிம் கலாசார திணைக்கள ஏற்பாட்டில்

# தேசிய ரீதியிலான அல்குர்ஆன் மனனப்போட்டி ஜூலை மாதம்

### மாணவ, மாணவிகள் பங்குகொள்ள ஏற்பாடு

*அஜ்வாத் பாஸி*




புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து இலங்கையிலுள்ள சவூதி அரேபிய தூதுவராலயத்தின் அனுசரணையில் முதன் முறையாக தேசிய ரீதியில் அல்குர்ஆன் மனனப் போட்டியொன்றை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இப்போட்டி எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதி கொழும்பில் நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளை மையப்படுத்தி ஆண், பெண் இரு பாலாருக்கும் நான்கு பிரிவுகளாக நடாத்தப்படுவதுடன், மொத்தம் 08 பிரிவுகளில் போட்டிகள் இடம்பெறும். (ஆண்கள் பிரிவுகள் 04, பெண்கள் பிரிவுகள் 04) மேற்படி போட்டி நடைபெறும் காலம் மிகக் குறுகியது என்பதனால் திணைக்களகள உத்தியோகத்தர்களின் ஊடாக விண்ணப்பம் தொடர்பான விடயங்கள் 'வட்ஸ்அப்' மூலமாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் 05 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவதுடன், சவூதி அரேபிய தூதரகத்தின் மூலமாக வெற்றியாளர்கள் பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படுவர்.

## யாழ்ப்பாணத்திற்கும்... 03ஆம் பக்கத் தொடர்

ஆகஸ்ட் மாதம் வரை விமானப்பயணச் சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அந்த விமான சேவையை 7 நாட்களுக்கும் தொடர்வதற்கு நாம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

வேறு விமான சேவை நிறுவனங்களும் விமான சேவைகளை முன்னெடுப்பதற்கு முன்வந்தால் அதற்கு அனுமதி வழங்கவும் நாம் தயாராகவுள்ளோம். சென்னைக்கும் பலாலிக்குமிடையில் அந்த விமான சேவைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## இந்தியாவின் 'ஜஎன்எஸ் வாகிர்'... 03ஆம் பக்கத் தொடர்

மேற்கு பிராந்திய கடற்படை கட்டளை தளபதி ரியர் அட்மிரல் சுரேஷ் டி சில்வா மற்றும் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கெப்டன் விகாஸ் சூட் ஆகியோரும் இந்த விஜயத்தின்போது அமைச்சருடன் கலந்து கொண்டனர்.

## பல்கலை மாணவருக்கு... 03ஆம் பக்கத் தொடர்

இந்த ஆண்டின் நிறைவடைந்த காலப்பகுதியில் மாத்திரம் ஐந்து மாணவர்கள் தற்கொலை செய்துக் கொண்டுள்ளார்கள். தற்கொலைக்கு முயற்சித்த இரண்டு மாணவர்களுக்கு பல்கலைகழக உளவியல் பிரிவு மூலம் உளவியல் ரீதியான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதேவேளை, பல்கலைக்கழக மாணவர்களில் பெரும்பாலானோர் ஒருவேளை உணவை மாத்திரமே உட்கொள்கின்றார்கள். மாணவர்களின் அன்றாட செலவுகளுக்கு பணம் அனுப்ப முடியாத நிலையில் அவர்களது பெற்றோர் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மாணவர்கள் உடல் ரீதியில் பாதிக்கப்பட்டு உடலளவில் நலிந்துள்ளார்கள். விரிவுரைகளின் போது மாணவர்கள் மயங்கி விழும் சந்தர்ப்பங்கள் தொடர்பிலும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள். மாணவர்களே நாட்டில் எதிர்காலம் என்பதால் இந்த பிரச்சினையின் பாரதூரத்தன்மையை விளங்கிக் கொண்டு விரைவான தீர்மானங்களை மேற்கொள்ள.கல்வியமைச்சு அதில் தலையிட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அபராத தொகையினை... 03ஆம் பக்கத் தொடர்

வர்த்தமானியின்படி, எந்தவொரு அபராதமும் செலுத்தாமல், பொருந்தக்கூடிய விசா கட்டணத்தை செலுத்தி நாட்டை விட்டு வெளியேறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆயுத பயிற்சி பெற்ற... 03ஆம் பக்கத் தொடர்

தரவு அறிக்கைகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டு, அதன்படி அவர் கைது செய்யப்பட்டதாக பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

## எதிர்க்கட்சியில் பலர் சஜித்தோடு... 03ஆம் பக்கத் தொடர்

தீவிரமடைந்து அது அரசியல் நெருக்கடியாக மாற்றமடைந்த போது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அழைப்பு விடுத்தார். பொறுப்பெடுக்க ஆசையும் பயமும் ஒன்றாக இருந்ததால் அரசாங்கத்தை பொறுப்பேற்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவரிடம் அரசாங்கத்தை ஒப்படைக்காமல் ரணில் விக்ரமசிங்கவிடம் அரசாங்கத்தை ஒப்படைத்தடையிட்டு மகிழ்ச்சியடைய முடிகிறது. நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ளது. பணவீக்கம் குறைவடைந்து வருகிறது. இந்த ஆண்டுக்குள் வட்டி வீதத்தை 12 சதவீதமாக குறைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை நாடவில்லை என்று எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டினார்கள்.

ஆனால் தற்போது சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களான நாலக கொடஹேவா, ஜி.எல்.பீரிஸ் ஆகியோரே ஆலோசனை வழங்குகிறார்கள்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களான மனோ கணேஷன், திகாம்பரம் ஆகியோர் மனதளவில் ஜனாதிபதியின் பக்கமே உள்ளார்கள். அவர்கள் அரசாங்கத்துடன் இணைந்தால் அவர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

## மருந்து தட்டுப்பாடு பிரச்சினைக்கு... 03ஆம் பக்கத் தொடர்

இவ்வாறு மருந்துப் பொருட்கள் கொண்டுவருவதை நிறுத்துமாறு உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தனர்.

அதனால் எமக்கு பாதிப்பு ஏற்பட்டது. சுகாதாரத்துறை தொடர்பாக நீதிமன்றத்தின் சில தீர்ப்பு எமக்கு பாதகமாகவே அமைந்துள்ளன.இது தொடர்பாக நீதியமைச்சருக்கும் எமது கவலையைத் தெரிவித்துள்ளோம். நாட்டில் தற்போது நிலவும் மருந்து தட்டுப்பாட்டுக்கு இதுவும் ஒரு காரணமாகும். நிதி தொடர்பாகவும் எமக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது.சுகாதாரத்துறைக்கு போதுமான நிதியொதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும். அதுதொடர்பாக நிதியமைச்சுடன் உடனடியாகவே கலந்துகையாட தீர்மானித்துள்ளோம். கலந்துரையாடலில் உரிய தீர்வு கிடைக்காவிட்டால் அது தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை, விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்றவகையில் நாட்டில் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் போது அதற்கு பதில் கூற வேண்டிய அவசியம் உள்ளது. அந்த வகையில் நிதியமைச்சுடன் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடலின் மூலம் மருந்துப்பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முடியாமற்போகுமானால் தொடர்ந்தும் அமைச்சுப் பதவியை வகிப்பது தமது எதிர்பார்ப்பல்ல என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஜாமிஆ நளீமிய்யா...

கலாபீடத்தின் பரிபாலன சபைத்தலைவர் யாகூத் நளீம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம அதிதியாக தென் கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா மற்றும் கௌரவ அதிதியாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரியும் கலந்து சிறப்பிப்பர். இந்நிகழ்வின் விசேட உரையை நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் (நளீமி) நிகழ்த்துவார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் பண்டார, மு.கா தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோரும் கௌரவ அதிதிகளாக கலந்து கொள்வர். இந்நிகழ்வில் சர்வமத தலைவர்கள், உலமாக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், அரச உயரதிகாரிகள், கலாபீட விரிவுரையாளர்கள் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். நாளைய தினம் இடம்பெறவுள்ள பொன்விழா நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் காலை 9.30 மணி முதல் நேரடி ஒலிபரப்பப்படவுள்ளது. இலங்கை வரலாற்றில் தனக்கென தனியிடம் பிடித்த கொடைவள்ளல் மர்ஹூம் எம்.ஐ.எம். நளீம் ஹாஜியாரின் கனவாக பேருவளையில் 1973ஆம் ஆண்டு உதித்த இக்கலாபீடம் கடந்த 50 வருடங்களில் இந்த நாட்டிற்கும் சமூகத்திற்கும் தேவையான பல்வேறு புத்திஜீவிகளை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடன் நெருக்கடியை...

பாராளுமன்றத்தின் ஒத்துழைப்புடன், நாடு தற்போது எதிர்கொள்ளும் கடன் சுமையைத் தீர்ப்பதற்கான விரிவான மூலோபாயத் திட்டத்தை வகுப்பதாகவும் கடன் மறுசீரமைப்பு ஒரு பிரதான முன்னுரிமையாக இருந்தாலும், முக்கியமான கட்டமைப்பு சீர்திருத்தங்களை நிறைவு செய்வதிலேயே முக்கிய கவனம் செலுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். கனேடிய முன்னாள் பிரதமர் ஸ்டீபன் ஹாபருடனான சந்திப்பின் போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

ஜூன் 19 மற்றும் 20 ஆகிய திகதிகளில் லண்டனில் நடைபெற்ற சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் (IDU) 40ஆவது ஆண்டு விழாவின் போது இந்த கலந்துரையாடல் நடைபெற்றது. சுற்றுச்சூழல் சவால்கள், பொருளாதார முன்னேற்றம் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆகியவை சிக்கலான தலைப்புகளாக மாறியுள்ள தற்போதைய காலகட்டத்தில், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் பாதுகாப்பான மற்றும் வளமான உலகத்தை உருவாக்க எவ்வாறு ஒன்றிணைந்து செயல்படுவது என்பதை விவாதிக்க உலகத் தலைவர்கள் இந்த ஆண்டு ஒன்று கூடியிருந்தனர். ஸ்டீபன் ஹாபர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டமை, நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப அமுல்படுத்தப்பட்ட கொள்கை வேலைத்திட்டம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் என்பன தொடர்பில் விரிவாகக் கருத்துத் தெரிவித்தார்.

இலங்கையின் நிதி வாய்ப்புகளை வலுப்படுத்தி நீண்ட காலத்திற்கு சாதகமான வர்த்தக சமநிலையை ஏற்படுத்த எதிர்பார்ப்பதாகவும் தாராளமய பொருளாதார நெகிழ்வுக் கொள்கையை துரிதப்படுத்தல் மற்றும் முதலீடுகளை கவர்வதை நோக்காகக் கொண்டு செயல்படுவதாகவும் தாம் பிரதமராக இருந்த காலத்தில் மேற்கொண்ட முயற்சிகளின் அடிப்படையில் தமிழ் பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி அவர்களின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து உழைக்க விரும்புவதாக ஜனாதிபதி விக்ரமசிங்க தெரிவித்தார். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டமை ,புதிய பயங்கரவாத தடைச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுதல் உள்ளிட்ட முக்கியமான விடயங்கள் தொடர்பில் உடன்பாடு எட்டப்பட்டிருப்பது குறித்தும் ஜனாதிபதி இங்கு கருத்துத் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை வரையறுப்பது தொடர்பில் அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் நிலவி வந்த சர்ச்சை நீதிமன்ற தீர்ப்பின் மூலம் தீர்க்கப்பட்டுள்ளதாகவும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நிலவும் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். காணாமற்போனோர் அலுவலக நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதாகவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

## நல்லிணக்கம், பொறுப்புக்கூறலை ...

இலங்கை நேரப்படி மாலை 6.30 மணிக்கு (ஜெனிவா நேரப்படி பி.ப 3.00 மணி) மனித உரிமைகள் பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல்நஷீஃப் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான தனது வாய்மொழி மூல அறிக்கையை வாசித்தார்.

அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுக்குப் பதிலளிக்கும் வகையிலும், மனித உரிமைகளை வலுப்படுத்துவதை முன்னிறுத்தி இலங்கையால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்துத் தெளிவுபடுத்தும் வகையிலும் பதில் உரையாற்றியபோதே ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருணதிலக மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டினார். இலங்கை தீவிர சமூக, பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு எட்டப்பட்டமை உள்ளடங்கலாக பொருளாதார மீட்சியை முன்னிறுத்திய நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதை இலக்காகக்கொண்டு நாட்டின் அரசியலமைப்புக்கு அமைவாகப் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் தமிழ் அரசியல் தரப்பினருடன் நடாத்தப்பட்ட சந்திப்பு குறித்தும், அதன்போது காணி விடுவிப்பு, காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, அரசியல்கைதிகள் விடுதலை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டமை பற்றியும் பேரவையில் பிரஸ்தாபித்த ஹிமாலி அருணதிலக, உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தை சர்வதேச நியமங்களுக்கு அமைவாக மாற்றியமைப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தில் இழப்பீட்டுக்கான அலுவலகத்துக்கென விசேட ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், படையினர் வசமிருந்த 92 சதவீத தனியார் காணிகள் விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார். இவ்வாறானதொரு பின்னணியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செயற்பாடுகளுக்கு இலங்கை தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அவர் உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது.

## அதிகரிக்கும் குற்றச்செயல்களை ....

அமைச்சர் தெரிவித்துள்ளார். குற்றக்கும்பல்கள் மத்தியிலான மோதலே துப்பாக்கிசூட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளமைக்கு காரணம் எனவும் கொல்லப்படுவது சாதாரண மக்கள் இல்லை. குற்றவாளிகளே குற்றவாளிகளை இலக்கு வைக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தகாலத்தில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் குற்றவாளிகளின் கைகளில் சிக்கியுள்ளன. அவற்றை அவர்கள் தற்போது பயன்படுத்துகின்றனர் என முன்னதாக அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை அதிகரிக்கும் குற்றச்செயல்கள் குறித்து கருத்து தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா, யுத்தகாலத்தில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் குற்றக்கும்பல்களின் கரங்களில் சிக்குண்டுள்ளன என்பதை நிராகரித்துள்ளார். அனைத்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. எவருடைய கரங்களிற்கு செல்வதற்கும் நாங்கள் எதனையும் விட்டுவைக்கவில்லை என சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சட்டமொழுங்கை பேணமுடியாத தவறியுள்ள அரசாங்கத்தின் கீழ் நாடு குழப்பத்தில் சிக்குண்டுள்ளது எனவும் தெரிவித்துள்ள சரத்பொன்சேக்கா, பேச்சு மாத்திரம் தான் செயல் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பாதாள உலகத்தவர்கள் துப்பாக்கிசூட்டு சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர். போதைப்பொருள் பிரச்சினை அதிகரித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமைகளில் ஈடுபடும் போது எதிர்கொள்ளும் நடைமுறை சட்ட சிக்கல்கள் தொடர்பில் உரிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் இதன் போது சுட்டிக்காட்டினார். பொலிஸாரினால் கட்டுப்படுத்த முடியாத பாரிய நெருக்கடிகள் ஏற்படும் போது, முப்படையினரின் உதவியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் இதன் போது ஆலோசனை வழங்கினார்.

## ஜனாதிபதி ரணிலின் தலைமையில் ...

தெரிவித்தார். இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து வெளியுறவுத்துறை துணை அமைச்சர் ஷுன்சுகே டேக்கி கிழக்கு மாகாண ஆளுநருக்கு இடையில் விசேட கலந்துரையாடலொன்று வெளியுறவு அமைச்சில் இடம்பெற்றது.

ஜப்பானுக்கு உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று முன்தினம் வெளியுறவுத்துறைக்கான துணை அமைச்சர் ஷுன்சுகே டேக்கியை சந்தித்து கலந்துரையாடல் மேற்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் போது, இலங்கை – ஜப்பான் இடையே நிலவும் நீண்டகால நட்புறவை இருவரும் நினைவூட்டியதுடன் எதிர்காலத்தில் நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. மாகாண ஆளுநர் என்ற வகையில் மாகாணத்தின் வளர்ச்சிக்காக நீங்கள் எடுக்கும் முயற்சிக்கு ஜப்பான் அரசு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும், தங்களுடைய முயற்சியை ஜப்பான் அரசு பாராட்டுவதாகவும் ஷுன்சுகே டேக்கி செந்தில் தொண்டமானிடம் தெரிவித்தார். அத்துடன் கடந்த பெப்ரவரி மாதம் சுதந்திர தின விழாவில் கலந்துகொள்ள இலங்கை வந்த வெளியுறவுத்துறைக்கான துணை அமைச்சர் ஷுன்சுகே டேக்கிக்கு சிறந்த வரவேற்பை இலங்கை அளித்திருந்தமைக்காக அவர் பாராட்டையும் நன்றியினையும் ஆளுநரிடம் தெரிவித்திருந்தார்.

மேலும் இரு நாடும் இணைந்து மீன்பிடித்துறையுடன் தொடர்புடைய துறைசார் தொழிலை மேம்படுத்துவது குறித்தும், கனிம வளங்கள் குறித்து ஆராய்ந்து அதனை செயற்படுத்த ஜப்பான் அரசு பங்களிப்பு அளிக்க வேண்டும் என செந்தில் தொண்டமான் கோரிக்கை விடுத்தார். அக்கோரிக்கையை ஏற்று, அதற்கு சாதகமான பதிலளித்த ஷுன்சுகே டேக்கி ஜப்பான் தனது முழு ஆதரவையும் வழங்கும் என உறுதியளித்தார்.

இலங்கையின் கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தில் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க, ஜப்பான் சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என செந்தில் தொண்டமான் வேண்டுகோள் விடுத்தார். சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க ஜப்பான் தனது பூரண ஒத்துழைப்புகளை வழங்கும் எனவும் ஆளுநரிடம் ஷுன்சுகே டேக்கி உறுதியளித்துள்ளார்.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I. கீழே தரப்பட்ட பாடலை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு பதில் எழுதுக.**

கறுப்பு வண்ண காக்கையாரே
கண்ணை உருட்டி கரைகிறாய்
விருந்தில் கலந்து கொள்ளவா
விரைந்து உறவை அழைக்கிறாய்

ஒற்றுமையின் வலிமையை
உணர்த்த வானில் கரைகிறாய்
சுத்தம் தெருவில் செய்கிறாய்
சிறந்த தொண்டன் ஆகிறாய்

1. இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள பறவை எது?

…………………………………………………………

2. அப்பறவையின் சிறப்பியல்பு ஒன்றினை பாடலில் இருந்து எழுதுக?

…………………………………………………………

3. பாடலிலுள்ள பண்புப் பெயரை எழுதுக?

…………………………………………………………

4. வானில் என்ற சொல்லின் ஒத்த கருத்தை தருக.

…………………………………………………………

5. ‘கண்’ என்பது எவ்வகை பெயர்ச்சொல்லாகும்?

…………………………………………………………

6. எதிர்கருத்து தருக.

i. ஒற்றுமை - ………………… ii. சுத்தம் - …………………

**II. (நூலகம், பூச்சாடி, இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர், பாடசாலை)**
மேலே கொடுக்கப்பட்ட சொற்களை உரிய இடத்தில் எழுதுக.

7. கூட்டங்கூட்டமாக - ……………………………………
8. மடக்கேறும் அரவும் - ……………………………………
9. படபடவென - ……………………………………
10. கீழ்க்காலும் சுழியும் - ……………………………………

**III.**

11. சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.
i. நகரும் / அம்மியும் / அடிமேல் / அடியடித்தால்

…………………………………………………………

ii. இயற்கை / அனைத்தும் / அற்புதமே / படைப்பில் / அன்னையின்

…………………………………………………………

12. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடவும்.
i. அம்மா கடைக்கு சென்று சீனி பருப்பு பால் வாங்கிக் கொண்டு வந்தார்

…………………………………………………………

ii. அடடா இந்த பூ எவ்வளவு அழகு

…………………………………………………………

13. இணை மொழியை பூரணப்படுத்துக.

i. குப்பை ………………… ii. குன்றும் …………………

iii. எலும்பும் …………………

14. உவமைத் தொடருக்கு பொருத்தமான கருத்தை எழுதுக.

i. கலங்கரை விளக்குபோல ……………………………………

ii. காட்டுத்தீ போல ……………………………………

iii. இலைமறை காய் போல ……………………………………

15. ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றுக.

i. மயில் அழகாக ஆடும். ……………………………………

ii. வீட்டுத் தோட்டம் அழகானது ……………………………………

16. ஆண்பால் சொற்களுக்கு பெண்பால் சொற்கள் எழுதுக.

i. இடையன் - ………………… ii. தபுதாரன் - …………………

iii. இளைஞன் - …………………

17. வாக்கியத்திலுள்ள செயற்படுபொருளின் கீழ்க் கோடிடுக.

i. மயில் தோகை விரித்து அழகாக ஆடியது.

ii. மானை துரத்திக் கொண்டு புலி ஓடியது.

18. இறந்த கால சொற்களை எதிர்கால சொற்களாக மாற்றுக.

i. ஆடினாள் - ………………… ii. படித்தார்கள் - …………………

19. பின்வரும் உறவுமுறை சொற்களின் சிங்கள கருத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

i. தாத்தா - ………………… ii. நெந்தா - …………………

iii. நங்கி - …………………

20. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.


i. My book is very small ……………………………………

ii. I went to the playground ……………………………………

**IV.**


21.
```
  4 2 5 0
+ □ □ □ □
  8 6 7 5
```
……………………………………

22.




சதுரத்தின் பெறுமதி யாது? ……………………………………

23.





i. முக்கோணத்துக்கு மட்டும் உரிய இலக்கம் யாது? ……………………

ii. செவ்வகத்துக்கும் வட்டத்துக்கும் மட்டும் உரிய இலக்கங்கள் எவை?

……………………………………


iii. வட்டத்துக்குரிய இலக்கங்கள் எவை? ……………………

24.




இவ்வுருவின் சுற்றளவு யாது? ……………………

25.



இதிலுள்ள செங்கோணத்தை விட குறைந்த கோணங்களின் எண்ணிக்கை யாது?

……………………………………


26.

| நிமிடம் | விநாடி |
|---|---|
| 20 | 30 |
| - 12 | 42 |
| | |

27. ZXRV ஆனது 1395 எனக் குறிப்பிடப்படின் XZVR என்பது எவ்வாறு குறிக்கப்படலாம்?

……………………………………

28.



இதிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?

……………………………………

29. 19999 இதனை எண் பெயராக எழுதுக.

……………………………………

**V. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. பூவில் காணப்படாத பகுதியானது?
i. மகரந்தம் ii. அல்லி iii. அரும்பு

31. இலங்கையில் பிரசித்திபெற்ற மிருகக்காட்சிசாலை அமைந்துள்ள இடம்?
i. தெஹிவளை ii. கண்டி iii. யால

32. களனிகங்கை கடலுடன் கலக்குமிடம்?
i. கொழும்பு ii. திருகோணமலை iii. புத்தளம்

33. எமது நாட்டின் தேசிய கொடியில் தேசிய ஒற்றுமையை குறிக்கும் நிறமானது?
i. பச்சை ii. சிவப்பு iii. மஞ்சள்

(10ஆம் பக்கம் பார்க்க)

09 ஆம் பக்கத் தொடர்

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

34. இந்துக்கள், பௌத்தர்களின் கலாசாரத்துடன் இணைந்த தாவர இலையானது?
i. வெற்றிலை ii. துளசி iii. வேப்பிலை

35. வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையில் வேலிக்கம்புக்கு பொருத்தமானது?
i. பலா ii. இலவம் iii. கிளிசறிடியா

36. இறப்பர் தாவரம் பூக்கும் மாதம் எது?
i. மாசி ii. பங்குனி iii. தை

37. வாகனமொன்றின் தடுப்பினை பிரயோகிக்கும் போது ஒளிரும் விளக்கின் நிறம் யாது?
i. சிவப்பு ii. மஞ்சள் iii. வெள்ளை

38. தேசிய மரபுரிமை என்பது?
i. விலைமதிப்பு மிக்கவை
ii. அயல் நாட்டிலிருந்து எமது நாட்டுக்கு வந்தவை
iii. எமது நாட்டிலே தோற்றம் பெற்றவை

39. பின்வருவனவற்றுள் விரைவில் பழுதடையும் உணவல்லாதது?
i. கிழங்கு ii. பயறு iii. பால்

40. விற்றமின் A குறைபாட்டினால் பாதிப்படையும் உறுப்பானது?
i. வாய் ii. கண் iii. இதயம்

41. அந்தமில் பட்டியின் பயனானது?
i. பொருட்களை கட்டுவதற்கு ii. பொருட்களை தூக்குவதற்கு
iii. சக்தியை கடத்துவதற்கு

42. தாவர இலைகளில் கூடு அமைக்கும் பிராணியானது?
i. வண்ணத்துப்பூச்சி ii. செவ்வெறும்பு iii. நத்தை

43. பண்டைய தொடர்பாடல் முறைகளில் ஒன்றானது?
i. வானொலி ii. கடிதம் iii. முரசு

44. செங்கண்மாரி நோய்க்கு காரணமானது?
i. உணவில் சக்தியின்மை ii. நீரின் தூய்மையின்மை
iii. நுளம்புகளால்

45. மழைக் காலத்தில் ஒலி எழுப்பும் பிராணியானது?
i. காகம் ii. தவளை iii. பல்லி

46. பின்வருவனவற்றுள் நீரில் அமிழாத பொருள்?
i. கல் ii. ஆணி iii. இலை

47. மண்ணில் மண்வளியை அதிகரிக்க உதவும் பிராணியானது?
i. மண்புழு ii. எலி iii. கறையான்

48. மேற்பரப்பில் ஒட்டியிருப்பதற்கு விசேட பாதங்கள் உடைய பிராணி?
i. பூனை ii. பல்லி iii. கரப்பான்

49. இலங்கையில் வெப்பநிலை மிகக் குறைவாக உள்ள பிரதேசம்?
i. வட மாகாணம் ii. மத்திய மாகாணம் iii. கிழக்கு மாகாணம்

50. பின்வருவனவற்றுள் சமூக விரோத செயலாக அமைவது?
i. போட்டியிடுதல் ii. தனியார் வியாபாரங்கள்
iii. போதைப்பொருள் விற்பனை

51. காற்றினால் மரஞ்செடி கொடிகளுக்கு ஏற்படும் பயன் அல்லாதது?
i. மகரந்த சேர்க்கை ii. வித்துக்கள் பரவுதல் iii. இலைகள் உதிர்தல்

52. சிக்கன் குனியா நோயை பரப்புவது?
i. கோழி ii. நுளம்பு iii. நீரினால்

53. மிகவும் போசாக்கான பானமானது?
i. இளநீர் ii. நீர் iii. செயற்கை பழச்சாறு

54. முலையூட்டி இனத்தை சேர்ந்த பறவையானது?
i. வௌவால் ii. கிளி iii. கழுகு

55. இலைக்கஞ்சி தயாரிக்க தேவையான தாவர இலைகளாவன?
i. முடக்கொத்தான், துளசி ii. சாத்தாவாரி, முடக்கொத்தான்
iii. கொத்தமல்லி, துளசி

56. புவி சூரியனை சுற்றி பயணிக்க எடுக்கும் கால அளவானது?
i. ஒரு நாள் ii. ஒரு மாதம் iii. ஒரு வருடம்

57. எதிரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ள உடலை பந்து போல உருட்டிக்கொள்ளும் பிராணியானது?
i. ஆமடில்லா ii. ஆமை iii. நத்தை

58. தற்கால போக்குவரத்தின் முக்கிய அனுகூலமானது?
i. செலவு குறைவு ii. விரைவாக பயணிக்கலாம்
iii. பாதுகாப்பின்மை

59. ஒலிம்பிக் கொடியில் ஆசியா கண்டத்தை குறிக்கும் நிற வளையமானது?
i. சிவப்பு ii. மஞ்சள் iii. பச்சை

**VI.**

60. 'எமது நாட்டிலுள்ள வளங்கள்' என்ற தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் அமைக்குக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருந்தபோது, எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக பேணப்பட வேண்டும்.

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

## கடந்த வார (16.06.2023) வினாத்தாள் II இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 2 | 11. 1 | 21. 3 | 31. 1 |
| 2. 1 | 12. 2 | 22. 3 | 32. 1 |
| 3. 2 | 13. 1 | 23. 2 | 33. 2 |
| 4. 3 | 14. 2 | 24. 1 | 34. 1 |
| 5. 1 | 15. 3 | 25. 1 | 35. 3 |
| 6. 1 | 16. 1 | 26. 2 | 36. 2 |
| 7. 3 | 17. 2 | 27. 3 | 37. 1 |
| 8. 2 | 18. 3 | 28. 1 | 38. 2 |
| 9. 3 | 19. 2 | 29. 2 | 39. 3 |
| 10. 3 | 20. 2 | 30. 3 | 40. 1 |




# சித்த மருத்துவபீடம் ஏற்பாடு செய்த யோகா விழிப்புணர்வு நடைபவனி

*(ரொட்டவெவ குறுப் நிருபர்)*

சர்வதேச யோகா தினத்தை யொட்டி, Vanni Hope Australia நிறுவனத்தின் நிதி உதவியில் Trinco Aid நிறுவனத்தோடு இணைந்து, திருமலை வளாக கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் ஏற்பாடு செய்த யோகா விழிப்புணர்வு நடைபவனி புதன்கிழமை (21) நடைபெற்றது.




கிழக்கு பல்கலைக்கழக திருமலை வளாக துணைத் தலைவர் சந்திரவதனி ஜி.தேவதாசன் தலைமையில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு முன்னால் ஆரம்பமான இந் நடைபவனி, தபாலக சந்தி வீதி வழியாகச் சென்று திருகோணமலை நகர சபைக்கு முன்னால் முடிவுற்றது. இவ் விழிப்புணர்வு நடைபவனியில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர், Trinco Aid இன் பணிப்பாளர் திருமதி. தயாளினி ஹரிகரன், கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவபீட விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், சுதேச மருத்துவ திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சித்த மருத்துவபீட மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சி முடிவில் இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட நன்னாரி பானம், மோர், கடலை ஆகியன யோகா நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

# போதைப் பொருள் தடுப்பு உத்தியோகத்தர்களின் கலந்துரையாடல்


***மட்டக்களப்பு குறுப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்***

மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப் பொருள் தடுப்பு உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் வழிகாட்டுதலின் கீழ், மாவட்ட போதைப் பொருள் தடுப்பு உத்தியோகத்தர் ப. தினேஷ் தலைமையில் புதன்கிழமை (21)நடைபெற்றது.

மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர்கள், இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கிராம, பிரதேச மட்டங்களில் போதைப் பொருள் பாவனை அதன் மூலம் ஏற்படும் பிரச்சினைகளையும் குறைப்பதற்காக, மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் போது, உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

போதைப்பொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு தொடர்பாக கடமையாற்றும் உத்தியோகத்தர்களை, வலுப்படுத்தும் முகமாக பயிற்சி பாசறைகள் தலைமை காரியாலயத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.



கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் கலைஞர்களுக்கான கொடுப்பனவுகள், மூதூர் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்ட போது.
(படம்; தோப்பூர் தினகரன் நிருபர்)

# கைரேகை பதியும்பணி ஆரம்பித்து வைப்பு

***(கல்முனை குறுப், திராய்க்கேணி தினகரன் நிருபர்கள்)***



கடவுச்சீட்டுகளுக்காக கைவிரல் அடையாளம் பெறும் நடவடிக்கை சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் புதன்கிழமை (21) ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.கடவுச்சீட்டு வழங்கும் புதிய நடை முறைக்கமைய, கைரேகைகள் பதிவு செய்யும் பணி, சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் வைத்து அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனீபா தலைமையில் நடைபெற்றது.

நாடளாவிய ரீதியிலுள்ள 51 பிராந்திய செயலகங்களில் கடவுச் சீட்டு பெற்றுக் கொள்வதற்கான விரல் அடையாளத்தை பதிவு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை மற்றும் பொத்துவில் ஆகிய இரு பிரதேச செயலகங்கள் கடவுச் சீட்டு பெற்றுக் கொள்வதற்கான கைரேகைகளை பதிவு செய்யும் பிரதேச செயலகங்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.








# இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்தால் தான் வருங்கால சந்ததியினர் வளமுடன் வாழ முடியும்

## ரோட்டேரியன் கனகரத்தினம் அருள்செல்வம்

இன்று மிகத் திறன்மிக்க பிள்ளைகள் வளர்ந்து வருகின்றார்கள். அவர்கள் இதய சுத்தியுடன் இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்தால் தான் வருங்காலச் சந்ததியினர்கள் வடிவமைப்புடன் வாழ முடியும். கிளிநொச்சி கனகபுரம் றோயல் முன்பள்ளிப் பாடசாலையின் முதல்வர் ரோட்டேரியன் கனகரத்தினம் அருள் செல்வம், இவர் ஓர் அழகான தோட்டத்தினுள் ஒரு வலு சூழல் நேயமிக்க முன்பள்ளிப் பாடசாலையினை நடத்தி வருகிறார்.

முன்பள்ளிச் சூழல் என்பது பிள்ளைகளுக்கு இயற்கை நேயத்தோடு பிள்ளைகள் வளர்வதற்கான ஒரு சூழலை உருவாக்குதல் வேண்டும். பிள்ளைகளுக்கு ஊட்டச் சத்து, பராமரிப்பு, எழுத்தறிவு, கற்பித்தல், கலை ஆகியவற்றை விட பிள்ளைகளை சூழலியல் தொடர்பான விடயங்களோடு பிள்ளைகளைப் பராமரித்தல் வேண்டும். சூழலியல் நேய விடயங்கள் எனும் போது மரங்கள் செடிகள், பூக்கள், பறவைகள், போன்ற இயற்கை சூழலினை முன்பள்ளிச் சூழலில் வைத்துக் கொள்வதும் வீட்டுச் சூழலை தோற்றுவிப்பதற்குரிய அறிவை வழங்குவது வளர்ச்சிக்கான முக்கியமான விடயம்.

பிள்ளைகளை ஆரம்பத்தில் இருந்து இயற்கை நேயத்தின் ஊடாக வளர்த்தெடுப்பதன் ஊடாக பிள்ளைகளை ஒரு சூழல் நேய மனிதர்களாக உருவாக்குவதே பிரதான நோக்கம் என்று செயற்படும் கிளிநொச்சி கனகபுரம் றோயல் முன்பள்ளிப் பாடசாலையின் முதல்வர் ரோட்டேரியன் கனகரத்தினம் அருள் செல்வம் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

**நீங்கள் 33 வருட காலமாக முன் பள்ளி ஆசிரியராகப் பணிபுரிகின்றீர்கள். அதன் தோற்றுவாய் வளர்ச்சி பற்றிய விளக்கம்?**

1990 10 06 ஆம் திகதி இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இது ஆரம்பத்தில் பரந்த இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி கனகபுரத்தில் இல 53, றோயல் முன்பள்ளி என்ற பெயரில் நாமம் சூட்டி 33 வருடங்களாக நடத்திக் கொண்டு வருகின்றோம்.

இந்த முன்பள்ளியில் 02 வயது தொடக்கம் 05 வயது மாணவர்களை சேர்த்து கொள்கிறோம். 50 பிள்ளைகள் தான் படிக்கலாம். அதற்கு மேல் சேர்க்க மாட்டோம். ஐந்து ஆசிரியைகள் இருக்கிறார்கள், ஒரு ஆசிரியை பத்துப் பிள்ளைகளை வைத்து படிப்பிக்கின்றார்கள். இன்றுள்ள பிள்ளைகள் எல்லோரும் மிக திறன் கூடிய பிள்ளைகளாக உள்ளனர். அவ் வகையில் நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் பிள்ளைகளை இணைத்துள்ளோம். இங்கு படித்த பிள்ளைகளின் பேரப் பிள்ளைகள் கூட இங்கு




இப்போ படிக்கின்றார்கள்.

சராசரி 30 விகிதம் பிள்ளைகள் ஒவ்வொரு வருடமும் வெளியாகிக் கொண்டுதான் இருக்கிறார்கள். முன்பு 100 பிள்ளைகளையும் எடுத்துப் படிப்பிப்போம். இப்பொழுது மீதிறன் உள்ள பிள்ளைகள் என்ற காரணத்தினால் குறைத்துத்தான் எடுக்கின்றோம். கல்வித் திட்டத்தின் கொள்கையின் அடிப்படையில் வகுப்பில் 20 பிள்ளைகளுக்கு மேல் வைத்துக் கொள்ள முடியாது. இடவசதி இருக்கிறது. ஆனால் கல்வித் திட்டத்தின் கொள்கைக்கு அமைய பிள்ளைகளை இணைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. ஓர் ஆசிரியை 10-15 வரையிலான பிள்ளைகளை வைத்திருத்தல் வேண்டும்.

ஆரம்பத்தில் பிள்ளைகளுக்கு வரவேற்பு விழா நடத்துவோம். தைப் பொங்கல் விழா, கண்காட்சி, சந்தை, விளையாட்டு விழா, பிறந்த நாள் விழா, நவராத்திரி கலை விழா என பல நிகழ்வுகளை நடத்துவோம். கிறிஸ்தவ மதத்திற்குரிய ஒளி விழா போன்ற விழாக்களையும் நடத்துவோம். சிறுவர் தினம், ஆசிரியர் தினம், பெற்றோர் தினம், முதியோர் தினம் என சகல சர்வதேச நிகழ்வுகளையும் இங்கு நடத்துவோம். எந்த விதமான கூச்சங்களும் இல்லாமல் பாடசாலைக்குச் செல்லக் கூடிய பயிற்சிகளை இங்கு வழங்கி வருகின்றோம்.

என்னுடைய துணைவியார்தான் உதவி ஆசிரியராக இருந்து நடத்தி வருகிறார். அவர் பெயர் திருமதி அருட்செல்வம் அனுஷா. இவர் தான் இந்த முன்பள்ளிப் பாடசாலையை கட்டி எழுப்பியவர். எமது மகளும் படிப்பிக்கின்றார். ஏனைய நான்கு ஆசிரியர்களும் கல்வி கற்பிக்கின்றனர். இப்பாடசாலையில் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மும்மொழிகளும் உள்ளன. சிங்கள, ஆங்கில மொழியும் வாய்மொழி மூலமாக பாடல்கள், கவிதைகள் போதிக்கப்படுகின்றன.

இதுவே கிளிநொச்சி மாவட்டத்தில் மூத்த முன்பள்ளிப் பாடசாலையாக இருக்கிறது. சிறார்களை உள்வாங்குகின்ற முன்னணி மிக்க முன்பள்ளியாக இயங்கி வருகின்றது என்று குறிப்பிடலாம்.

**பிள்ளைகளுக்கு எவ்வகையிலான பாடங்களை போதித்து வருகின்றீர்கள்?**

பொதுவாக முன்பள்ளிப் பாடசாலையின் கல்வித் திட்டம் என்பது விளையாட்டின் மூலம் கற்பிப்பதுதான் ஆகும். பிள்ளைகளுடைய உளப்பாங்கான கல்வி செயற்பாட்டின் மூலம் தான் ஆசிரியைகள் மிகவும் கீழ் இறங்கி கற்பித்தல் வேண்டும். சிறார்கள் விளையாடும் எந்த விளையாட்டாக இருந்தாலும் படிப்பித்தல் வேண்டும். அவர்களுடைய உடல் விருத்தி செயற்பாடு, மொழி விருத்தி செயற்பாடு, கணித எண்ணக் கரு விருத்தி, ஆக்க அழகியற் செயற்பாடு, சுற்றாடற் செயற்பாடு முதலிய செயற்பாடுகளின் அடிப்படையில்தான் பிள்ளைகளுக்கான கல்விகள் போதிக்கப்படுகின்றன.

**நீங்கள் மட்டும் இயற்கை நேயச் சூழலை உருவாக்கினால் போதாது பிள்ளைகளுடைய வீட்டுச் சூழலை இயற்கை நேயச் சூழலாக எப்படி உருவாக்குகின்றீர்கள்? எல்லாவற்றையும் தொட்டு உணர்தவற்கும் பார்த்து உணர்வதற்கும் பிள்ளைகள் செடிகள், கொடிகள், பூக்கள் போன்றவற்றை 3– 5 வயது காலப் பகுதியில் கட்டாயம் வழங்கப்பட வேண்டி விடயங்கள் ஆகும். அந்த வகையில் இயற்கை நேயச் சூழல் யாவை?**

பூக்கன்றுகள் நிறைந்த பூந்தோட்டம், மரக் கறிகள் கொண்ட வீட்டுத் தோட்டச் செய்கைகள், பிள்ளைகளின் மனதைக் கவரக் கூடிய வகையில் மலையில் இருந்து அருவி பாய்தல் போன்ற இயற்கைக் காட்சிகளைச் சார்ந்து அழகிய வடிவமைப்பில் உருவாக்கியுள்ளோம்.

அதே நேரத்தில் சிறார்களும் பெற்றோர்களும் இந்த முன்பள்ளிப் பாடசாலைக்கு விரும்பி வருவதற்கான காரணம் யாதெனில் ஏ 9 பாதையில் இருந்து 2.2 கிலோ மீட்டர் தூரத்தில் கனகபுரம் என்ற கிராமத்தில் இருக்கிறது. கனகபுரம் பிரதான வீதியில் இருந்து 25 மீட்டர் தூரத்தில் தான் இப்பாடசாலை அமையப்பெற்றுள்ளது.

இவ்வளவு தூரத்திற்கு அமைத்திருப்பதற்கான காரணம் வெளியே செல்லும் வாகனங்களின் சப்தங்கள், அதாவது பிள்ளைகள் கல்வி கற்கும்போது புறச் சூழல் பாதிப்பு இருக்கக் கூடாது என்ற நோக்கில் வளாகத்தின் பின் பகுதியில் முன்பள்ளிக்கான கட்டடத்தை நிர்மாணித்து விளையாட்டுத் திடல், இயற்கைச் சூழல் வாய்ந்தவையாகவே நாங்கள் அதனைப் பேணிப் பாதுகாத்து வருகின்றோம். பாடசாலைக்கு முதல் நாள் வரும் போது பிள்ளை அழுது கொண்டு வரும்.

பெற்றோர்களிடத்தில் இருந்து ஆசிரியர்களிடம் கைமாறும் போது பிள்ளைகள் அழுவார்கள். ஆனால் இப்பாடசாலையைப் பொறுத்தவரையில் முதல்நாள் தான் அந்தப் பிள்ளை அழும். அடுத்த நாள் இப்பாடசாலையின் இயற்கை நேயச் சூழலுக்கு ஏற்ற வகையில் பறவைகளைப் பார்ப்பதன் மூலம் வண்ண வளர்ப்பு மீன்களைப் பார்ப்பதன் மூலம் இயற்கைச் சூழலின் வடிவமைப்பை பார்ப்பதன் மூலம் சிறார்களுக்கான மெல்லிய இசையில் பாடல்கள் ஒலிபரப்படுவதன் மூலம் பெற்றோர்களிடத்தில் இருந்து பிள்ளைகளை அரவணைத்துக் கொள்வதற்கான படிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளன. அந்தப் பிள்ளையை அரவணைத்தால் தான் அந்தப் பிள்ளைக்குச் சொல்வதை மிக இலகுவாகவும் நேர்த்தியாகவும் விளங்கிக் கொள்ளும். அவற்றை நாங்கள் முதல் உருவாக்கினோம்.

இந்த வருடம் ஒரு கல்விச் சுற்றுலாவை கவுதாரிமுனைக்கு மேற்கொண்டிருந்தோம். அங்கு மணல் மேடுகளோடு கடற்கரையில் இருக்கின்ற சிப்பிகளைப் சேகரிப்பதன் ஊடாகவும் கவுதாரிமுனையில் ஆழ் கடல் இல்லை. அக்கடலில் பிள்ளைகளை குளிக்கச் செய்தமையின் ஊடாகவும் கடற்கரை மணலில் மண் வீடு கட்டி விளையாடச் செய்வதன் ஊடாகவும் அந்தப் பிள்ளைகள் இயற்கை நேயச் சூழலோடு ஒன்றித்து வாழ்கின்ற விடயங்களை விளையாட்டுப் பயிற்சியின் மூலமாகவும் மகிழ்வூட்டலின் மூலமாகவும் புகட்டி வருகின்றோம்.

**கிளிநொச்சி நகரம் இயற்கையோடு சார்ந்து இருக்கக் கூடிய பிரதேசம். உங்களுடைய சூழலில் இருக்கக் கூடிய வளங்கள் என்ன?**

நாங்கள் கிளிநொச்சிக்கு நகரத்திற்கு 2 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்றோம். நகரத்தைச் சார்ந்து பிள்ளைகள் வருவது குறைவு. இயற்கை சார்ந்த சூழல் இருக்கின்றன. எனினும் நீர் பற்றாக் குறை காணப்படுகிறது. இயற்கை சூழலைப் பேண இயலாமல் போகிறது. ஆனாலும் உள்ள நீரைக் கொண்டு இயற்கை சூழல் நேயத்தை உருவாக்க முயற்சி செய்கின்றோம். இப்பொழுது சின்னச் சின்னப் பயிர்களை பூக்கன்றுகளோடு சேர்த்து மிளகாய்த் தோட்டங்கள் செய்து வருகின்றோம். நாளாந்தம் சொட்டு நீர் பயன்படுத்தக் கூடியவாறு பையில் வைத்து நடுகின்றோம். கத்தரி, வெண்டி, மிளகு ஆகிய கன்றுகளை பெரும்பாலும் ஒவ்வொரு வீடுகளிலும் நட்டி வைத்துள்ளார்கள்.

பாடசாலையில் எல்லா மரக்கறி வகைகளும் இருக்கின்றன. பையில் வைத்து வளர்க்கக் கூடிய மரக்கறிகளை பெரும்பாலும் நாங்களும் நட்டு வைத்திருக்கின்றோம். நாங்கள் இவற்றை பிள்ளைகளுக்காகவே செய்து வருகின்றோம் என்றாலும் கிளிநொச்சியின் பல பாகங்களிலும் இயற்கை நேயச் சூழலை மேம்படுத்துவதற்கான ஒரு புறத்தில் பங்களிப்புச் செய்த நன்மை எமக்கு இருக்கின்றன என்று கூறலாம்.



**முன்பள்ளியில் இருக்கக் கூடிய இயற்கை வளங்கள் வெளியே பிள்ளைகளுடைய இல்லங்களிலும் காண முடியுமா?. அல்லது தொடர்புகள் இருக்கிறதா?**

ஆமாம். முன்பள்ளிப் பாடசாலையில் காணப்படும் இயற்கை வள நேயக் காட்சிகளை பிள்ளைகளுடைய இல்லத்திலும் காணுகின்றோம். அவர்களுடைய பிறந்த நாளைக்கு அவர்களுடைய இல்லத்திற்கு அங்கு எல்லோரையும் அழைத்து தோட்ட பயிர்ச்சிகளை மேற்கொள்வோம். முன்பள்ளியில் இயற்கை வளமிக்க நேயமிக்க சூழலை உருவாக்குவதைப் போன்று அந்தப் பிள்ளையின் இல்லத்திலும் ஒரு கூட்டாகச் சேர்ந்து செய்வோம். போட்டி முறையிலும் இயற்கை சூழல் நேயத் தன்மையினை உருவாக்கியுள்ளோம்.

ஒவ்வொரு தை மாதத்திலும் புதிய பிள்ளைகள் வருவார்கள். எங்களது முன்பள்ளிப் பாடசாலை பூக்கன்றுகள். மரம் செடி கொடிகளால் செழுமைப்படுத்தியிருக்கிறோம். அவர்களுடைய இல்லத்திற்கு வருடத்திற்கு ஒரு முறை அவர்களுடைய பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக நாங்கள் செல்வோம். போகும் போது மரக்கன்றுகளை எடுத்துச் சென்று அவர்கள் இல்லத்தில் நடுவோம். இது எங்கள் பள்ளியில் படிக்கின்ற பிள்ளைகள் வீடுகளிலும் இயற்கை சூழல் நேயத்தை விரும்பி செயற்படுத்துகின்றார்கள். நாங்களும் இதை ஊக்குவித்து வருகின்றோம்

**கிளிநொச்சி ரொட்ரிக் கழகம் தொடர்பில்,..**

கடந்த எட்டு வருடங்கள் கிளிநொச்சி ரொட்ரிக் கழகத்தில் இணைந்து செயலாற்றி வருகின்றேன். இந்த வருடத்தில் உப தலைவராகச் செயலாற்றியுள்ளேன். ரொட்ரிக் கழக தலைவர் வண. பிதா யோசுவா அடிகளார் எங்களுடைய முன்பள்ளிக்கும் ஒரு வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் இருந்து வருகிறார்.




அவர்கள் ரொட்ரிக் கழகத்தின் சார்ந்த விடயங்களில் ஆலோசனைகளைத் தருவதோடு ரொட்டரியின் வழிகாட்டல்கள் தான் எங்களை மெரு கூட்டி இருக்கிறது. அவருடைய எண்ணங்கள் புதுசு புதுசாக இருக்கும். அவருடைய செயற்பாடுகள் புதுமையாக இருக்கும். காவேரிக் கலா மன்றத்தின் ஊடாகவும் நான் பார்த்திருக்கின்றேன்.

என்னுடைய தந்தை அப்பாசாமி கனகரட்ணம், பாடசாலையின் ஆலோசகராகவும், பாடசாலையின் முதல்வராகவும் இருந்திருக்கிறார். அவருக்கு வயது 80. கல்விச் செயற்பாடுகளுக்காகப் பங்களிப்பு நல்கியவர்.

கிளிநொச்சி சுற்றுச் சூழலை எடுத்துக் கொண்டால் எல்லாமே இயற்கையானதாகத் தான் இருக்கும். திறன்வெளிப்பாட்டு விளையாட்டுக் கூட பிள்ளைகளுடைய இயற்கை நேய சூழலை மையப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். அதே நேரத்தில் புதுவருட நிகழ்வுகளைக் கொண்டாடுவோம். அது பெற்றோர்களுக்காகச் செய்வோம். அதில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறும்.

புதுவருட நிகழ்வுகளில் பிள்ளைகள் தாய் தகப்பனை வணங்க வேண்டும். முதியோரைக் கனம் பண்ண வேண்டும் என்ற விடயத்தை நாங்கள் செய்து வருகிறோம்.

அடுத்தோடு முகாமைத்துவத்தை நாங்கள் மிக முக்கியமாகக் கவனித்து வருகின்றோம். ஒரு நிகழ்வு ஆரம்பிக்கப் போவதென்றால் சரியாக 9.00 மணி என்றால் 05 நிமிடம் மட்டும் தாமதிப்போம். மற்றவர்கள் வருவார்களா இல்லையா என்பது இல்லை. சரியாக ஆரம்பித்து விடுவோம். வருங்காலப் பிள்ளைகள் நேரத்தை சேமித்து செயற்பட முடியுமோ அந்தளவுக்கு செயற்பட வேண்டும். அதற்கான நேரமுகாமைத்துவ வழிகாட்டுதலையும் செய்து வருகின்றோம். முன்பள்ளியில் ஒரு நிகழ்வு நடக்கப் போவது என்றால் நேர முகாமைத்துவம் காட்டாயம் இருத்தல் வேண்டும். அங்கு சென்றால் ஆசிரியை ஏசுவார். அவர்கள் எடுக்க மாட்டார்கள் என்ற விடயங்களை பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் நாங்கள் நிறையச் செய்து இருக்கின்றோம். இதன் மூலம் நல்ல நன் மதிப்புக்களைப் பெற்று இருக்கின்றோம்.

**நீங்கள் மேலும் முன்பள்ளி சிறார்கள் பற்றி என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

சிறார்கள் இயற்கையோடு இணைத்து அவர்களைத் திருப்திப்பட வைப்பதன் மூலம் கல்வியை கொண்டு செல்லலாம் ஒழிய ஆரம்ப காலத்தில் இருந்தது போன்ற வித்தியாசமான கல்விச் சூழலுக்கு ஏற்ற மாதிரி அல்லாமல் இப்பொழுது சிறார்களை உள்ளத்தை மகிழ்வித்து அரவணைத்துத்தான் அவர்களைப் பயிற்றுவிக்க முடியும். ஏனென்றால் இப்போதைய பிள்ளைகள் மீதிறன்மிக்க பிள்ளைகளாக வருகின்றார்கள். எங்களுடைய காலத்தில் கைபேசி இல்லை. இன்று கைபேசி இல்லா விட்டால் சாப்பாடு இல்லை. இன்று மிகத் திறன்மிக்க பிள்ளைகள் வளர்ந்து வருகின்றார்கள். அவர்கள் இதய சுத்தியுடன் இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்தால் தான் வருங்காலச் சந்ததியினர்கள் வடிவமைப்புடன் வாழ முடியும் என்று நான் கருதுகின்றேன்.

**ரொட்ரிக் கழகத்தின் தலைவர் வணபிதா யோசுவா அடிகளார் பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

நான் அவருடன் சேர்ந்து உப தலைவராகக் கடமையாற்றி இருக்கின்றேன். அவரிடமிருந்து நிறைய அனுபவங்களை கற்றுக் கொண்டேன். அவருடைய காலத்தில் 365 நாளில் 365 செயற் திட்டங்களைச் செய்து முடித்திருக்கின்றோம். வெற்றிகரமாகக் கொண்டாடியிருக்கின்றோம். ஒருவருக்கு நிவாரணம் கொண்டு போய் கொடுப்பதெல்லாம் அவருக்குப் பிடிக்காது. ஏன் இன்னுமொருவரிடம் கை ஏந்த வேண்டும். அதற்காக நாலு மிளகாய் கன்றைக் கொடுங்கள், நான்கு விதமான பயிர்களைப் பயிர்ச் செய்ய சொல்லுங்கள், அவர்கள் அதைப் பயிரிடுவதன் மூலம் தான் அவர்கள் வாழலாம் என்று அவர் வலியுறுத்துவார். அவருடைய ஒவ்வொரு செயற்பாடும் திறன்மிக்கது.

அவர் ஒரு சமையல் வல்லுனர். விதம் விதமாகச் சமைப்பார். அது எப்படி இருக்கும் என்றால் வாழைப்பூவிலே நிறைய விடயங்கள் செய்வார். அவர் வீடு சென்றால் தேநீர் பிளேண்டி எதுவும் கிடையாது. கசாயத் தண்ணீர் இருக்கும். வல்லாரை அவித்து வைத்திருப்பார். முடக்கத்தான் போட்டு அல்லது வியர்க்கொம்பு மூலிகை சார்ந்த பான வகைகளை பருகத் தருவார். ஒவ்வொரு செயற்பாடுகளையும் மாற்றியிருக்கிறார். நாங்களும் மாறியிருக்கிறோம். அவருடைய ரோட்டரி செயற்பாடு நிறையப்பேரை வளப்படுத்தி இருக்கிறது. எதிர்காலம் தூர நோக்கத்தோடு மிளிர வேண்டும். சந்ததியினர்கள் சிரமின்றி வளர வேண்டும் போன்ற நிறையச் செயற்பாடுகள் பேசப்படுகின்றன.



நேர்காணல் இக்பால் அலி...

# ஆத்மீக வரலாற்றுக் களஞ்சியமாகத் திகழும் பேருவளை மஹகொட தந்த அஸாத் ஹாஜி...



**ஹாஜியார் 92 வயதை எட்டிப் பிடிக்கும் நிலையில் இன்று நலமுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.**

இலங்கையில் ஷாதுலியா தரீக்காவின் முதலாவது கலீபத்துல் குலபாவாக நியமிக்கப்பட்ட ஷேஹ் அப்துல் காதிர் லெப்பையின் குடும்ப வழி வந்த முஹம்மது இப்ராஹிம் ஹாஜியார் முஹம்மது காஸிம் மரிக்கார் யெஹியா உம்மா தம்பதியின் இரண்டாவது புதல்வனாக முஹம்மத் அஸாத் 1932.07.28 ஆம் திகதி பேருவளை, மஹகொட அஸானா விலாவில் பிறந்தார்.





ஐந்து சகோதர சகோதரிகளைக் கொண்ட குடும்பத்தில் இன்று இவர் மாத்திரமே வாழ்ந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் முதலாவது முஸ்லிம் மகளிர் கல்லூரியென வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் பேருவளை, மருதானை அல்பாஸியத்துல் நஸ்ரியா கல்லூரி அன்று கலவன் பாடசாலையாக இருந்த போது 1937 இல் அஸாத் ஹாஜியார் அப்பாடசாலையில் தனது கல்வியை ஆரம்பித்தார். பின்னர் ஸெம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலயமாக இன்று மிளிரும் மாளிகாஹேன முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இணைந்து கல்வியைத் தொடர்ந்தார். அத்துடன் இலங்கையின் முதலாவது பள்ளிவாசல் என்ற புகழோடு இன்று பிரகாசித்துக் கொண்டிருக்கும் மஸ்ஜிதுல் அப்ராரில் அன்று இயங்கிய குர்ஆன் பள்ளிக் கூடத்தில் மார்க்கக் கல்வியைக் கற்றுத் தேர்ந்தார்.

அஸாத் ஹாஜியார் தனக்குப் போதிய கல்வியைப் பெற்றுக் கொண்ட கையோடு 1950களில் தனது ஊரில் மஹகொட ஸ்டோஸ் என்ற பெயரில் சில்லறை வர்த்தகக் கடை ஒன்றை ஆரம்பித்து நடாத்தி வந்தார். அதில் பெற்ற அனுபவத்தோடு 1970களில் பேருவளை நகரில் அஸாத் ஸ்டோர்ஸ் என்ற பெயரில் வியாபார நிறுவனத்தை நிறுவி உழைப்பில் ஈடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து தன் பிரதேசத்தில் பிரசித்தமாக விளங்கும் இரத்தினக்கல் வர்த்தகத்தில் கால் பதித்தார். 1998 / 1999 காலப் பகுதி வரையிலும் மாணிக்க வியாபார முயற்சியில் வியாபித்துக் கொண்டிருந்தார். பிள்ளைகள் வளர்ந்து உழைப்பில் ஈடுபடுவதைத் தொடர்ந்து தானும் ஓய்வு பெற்று தனக்கு இயலுமான நற்பணிகளில் ஈடுபடலானார். வர்த்தகத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்த 1968 ஆம் ஆண்டு தர்கா நகரைச் சேர்ந்த நூருல் ஹஸனா என்ற பெண்ணைத் மணமுடித்து இல்லறப் பயணத்தை ஆரம்பித்தார். இத்தம்பதிக்கு 3 ஆண்களும் ஒரு பெண்ணுமாக நான்கு பிள்ளைச் செல்வங்கள் கிடைத்தன. இவர்களில் சாஹுல் ஹமீத் என்ற மகன் வபத்தான நிலையில் ஹாஜிகளான அப்துல் காதிர் அஜ்வாத் மற்றும் ஹாஜியானி ரிலாயா ஆகியோர் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அஸாத் ஹாஜியார் இரண்டாம் தாரமாக 1976இல் பாணந்துறை எலுவிலையைச் சேர்ந்த சித்தி மபாஹிரா என்ற மங்கையை மணந்தார். இத்தம்பதிக்கும் ஹாஜியானிகளான அரூஸா, சமீஹா, புஷ்ரா, இஸ்ரா ஆகிய நான்கு பெண்களும் ஹாஜிகளான அரூஸ், அர்ஷத் ஆகிய இரண்டு ஆண்களும் உள்ளனர். எல்லா பிள்ளைகளையும் நல்ல முறையில் வளர்த்தெடுத்த ஒரு சிறந்த தந்தையாகவும் அஸாத் ஹாஜியார் திகழ்கிறார். இவர்களில் சிரேஷ்ட புதல்வன் முகம்மது அரூஸ் மாணிக்க வர்த்தகத்துடன் பொதுப் பணிகளிலும் தன்னை அர்ப்பணித்து அரசியலிலும் தடம் பதித்துள்ளார். கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி கட்சியில் போட்டியிட்டு பேருவளை நகர சபையில் ஓர் உறுப்பினராகப் பணியாற்றினார். தற்போது தேசிய மக்கள் சக்தியின் பேருவளை அமைப்பாளராகவும் களுத்துறை மாவட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும் பதவி வகிக்கிறார்.

2006 ஆம் ஆண்டில் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றிய அஸாத் ஹாஜியார் 1971இல் மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களில் ஒருவராகப் பணியாற்றி 1997 இல் பிரதம நம்பிக்கையாளர் பொறுப்பை ஏற்றார். 2020 வரையும் அப்பதவியை சிறப்பான முறையில் வழி நடத்தியுள்ளார். இப்பொறுப்போடு 1974 இல் அகில உலக ஷாதுலியா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் கலாநிதி ஷேஹ் ஸஜ்ஜாதா அல் பாஸி, அல் மக்கி, அஷ்ஷாதுலி அவர்களால் அஸாத் ஹாஜியார் அப்ரார் பள்ளியோடு இணைந்த மருதானை ஸாவியாவின் ஆயுட்கால நம்பிக்கையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரது உளத் தூய்மை, ஆளுமை, ஆற்றல்களுக்கு கிடைத்த அங்கீகாரமாக இதனைக் கருதலாம். அப்ராரின் பிரதம நம்பிக்கையாளர் பதவியின் போது பள்ளியின் வளர்ச்சிக்கும் பிரதேச முன்னேற்றத்திற்கும் முன்னோடியான பல பணிகளையும் முன்னெடுக்கவும் இவர் தவறவில்லை.

பேருவளை மருதானையில் மீனவர்கள் ஒன்றிணைந்து 'ஜம்இய்யத்துல் முபாரக் கடற்றொழிலாளர் சங்கம்' என்ற ஒரு அமைப்பை உருவாக்கியுள்ளனர். மீன் பிடித்தொழில் மூலம் தமக்குக் கிடைக்கும் வருமானத்தில் ஒரு தொகையை ஒதுக்கி சங்கத்தின் ஊடாக பள்ளிவாசல்கள் மற்றும் பொதுப்பணிகளில் ஈடுபடுத்தி வருகின்றனர். அந்த வகையில் அப்ரார் பள்ளியை நடத்துவதற்கு வருமானம் வரும் வகையில் அன்று கொள்ளுபிட்டியில் கடை, வீடு உள்ளிட்ட சொத்துக்கள் வாங்கி வக்ப் செய்யப்பட்டுள்ளன. தலைநகரை அண்டிய பகுதியென்பதால் மிகவும் விலை



மதிப்புள்ள சொத்துக்களாக இன்று அவை விளங்குகின்றன. அதேபோன்று மேற்படி சங்கத்தின் நிதியிலிருந்து பேருவளையில் 12 கடைகள் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. இவற்றில் கொள்ளுப்பிட்டியில் உள்ள உடைமைகள் செயலிழந்த நிலையில் அவற்றை ட்ரஸ்டி அஸாத் ஹாஜியார் மீட்டெடுத்து புனரமைப்புச் செய்து பள்ளிக்கு கூடுதலான வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பதில் துணிந்து செயல்பட்டுள்ளார். இவரது இத்தகைய துணிச்சல், விடாமுயற்சியுடனான செயற்பாடு, நம்பிக்கை, நாணயம், நீதி, நேர்மை உள்ளிட்ட நற் பண்புகளால் சகல மக்களாலும் மதிக்கப்படும் ஒருவராகவே இவர் காணப்படுகிறார். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் காலத்திலிருந்தே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளராக இருந்த போதிலும் இதர கட்சிகளை சேர்ந்தவர்களுடனும் சகல தரீக்காக்களைப் பின்பற்றுவோருடனும் எத்தகைய பேதம், வேற்றுமை பாராட்டாது எல்லோரையும் அனுசரித்து நடக்கும் பண்புக்கும் இலக்கணமாகத் திகழ்கிறார். பேருவளை, மருதானை ஷாதுலியா, காதிரியா, அலவியா ஆகிய மூன்று தரீக்காக்களின் இஹ்வான்கள் உள்ள ஊராகும். சகல தரீக்காக்களுடனும் இணங்கிப் போகும் ஆத்மீக ஈடுபாடும் இவரது உடன் பிறந்த மற்றொரு பண்பாகவுள்ளது. புனித மக்காவில் இருந்து இங்கு வருகை தந்த 'பெரிய மௌலானா' என்று அழைக்கப்படும் 'முஹம்மத் ஸாலிஹ் மௌலானா (ரஹ்)' அவர்கள் தான் இலங்கையில் ஷாதுலியா தரிக்காவை முதன் முதலில் அறிமுகம் செய்த பெரியாராவார். இவரே அஸாத் ஹாஜியாரின் தகப்பன் வழிபாட்டனாரான ஷேஹ் முஹியத்தீன் பாவா ஆலிம் இப்னு அப்துல் காதர் என்பவரை இலங்கையின் முதலாவது 'கலீபத்துல் குலபாவாக' 1880 களில் நியமனம் செய்துள்ளார் என்பது மற்றொரு விசேட அம்சமாகும்.

இலங்கையின் முதலாவது கலீபத்துல் குலபாவான முஹையத்தீன் பாவா ஆலிம் அவர்களுடைய தந்தையான ஷேஹ் அப்துல் காதர் ஆலிம் அவர்களும் நபவிய்யதுல் காதிரியா



வின் ஷேஹ் முஸ்தபா (ரஹ்) அவர்களும் பலப்பிட்டி, வெலித்தர மரிக்கார் குடும்பத்தைச்சேர்ந்த உடன்பிறந்த இருசகோதரிகளை மணமுடித்து நெருங்கிய உறவு முறையோடு அதாவது சஹலர்களாவார்கள். அத்துடன் ஷேஹ் அப்துல் காதர் ஆலீம் என்பவர் அஸாத் ஹாஜியாரின் பெரியப்பா. அதாவது தகப்பனின் மூத்த சகோதரன் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ஆத்மீக இரத்தம் இரண்டறக் கலந்து ஊறிப்போயுள்ள அஸாத் ஹாஜியார் ஷாதுலியா தரீக்காவின் மூத்த இஹ்வான்களில் ஒருவராகத் திகழ்கிறார்.

இவரிடம் இன்றைய இளம் சந்ததியினருக்குக் கூற வேண்டிய அறிவுரை குறித்து வினவிய போது,

'சன்மார்க்க கடமைகளை சரிவர பேணி நடப்பதன் மூலமே இம்மை மறுமை இரண்டிலும் ஈடேற்றம் பெறலாம். குறிப்பாக ஐங்காலத் தொழுகையை தவறாது நிறைவேற்றி வர வேண்டும். அதன் மூலமே அல்லாஹ்வை நெருங்கலாம். தக்வாவும் உரம் பெறுகிறது. கருத்து வேற்றுமை இருந்தாலும் உலகம் முடியும் வரையும் ஒற்றுமையை கடைபிடிக்க வேண்டும். ஒற்றுமையே சமூகத்திற்கு பலம் தரும் சக்தியாகும். ஒழுக்கம், தொழில்துறைகளில் நம்பிக்கை, நாணயம், நீதி, நேர்மை இருக்க வேண்டும். மூத்த மனிதரை உலமாக்களை மதித்து நடக்க வேண்டும். ஷெய்குமார்கள் காட்டித் தரும் வழியில் நடக்க வேண்டும். இதுவே நான் எமது வருங்கால சந்ததியினருக்கு எத்தி வைக்கும் எனது செய்தியாகும்.'

அஸாத் ஹாஜியாரின் சுகவாழ்வுக்கும் நீண்ட ஆயுளுக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் பாளிப்பானாக!

**பேருவளை : பீ. எம். முத்தார்**

# ஆயுர்வேத மருந்துக்கூட்டுத்தாபன விற்பனை நிலையம் திறந்து வைப்பு

**(திறப்பனை தினகரன் நிருபர்)**

ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் அநுராதபுர மருந்து விற்பனை நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.இங்கு மருந்து மூலிகையின் மூலப் பொருட்கள் மற்றும் மருத்துவ சிகிச்சை நிலையமும் உள்ளன. மைத்திரிபால சேனநாயக்க மாவத்தையில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த மருந்து நிலையம், சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் திரு.சிசிர ஜயக்கொடி தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி குறிப்பிட்டதாவது,

உள்ளூர் மருத்துவ மூலப்பொருட்களின் விற்பனையை வலுப்படுத்தவே இது, திறக்கப்பட்டுள்ளது.



ஆயுர்வேத மருத்துவ சேவைகளை மேற்கத்திய மருத்துவ சேவைகளுடன் இணைப்பதும் இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இதனூடாக முழு உலகிற்கும் தேவையான உள்நாட்டு மருத்துவப் பொருட்களை வழங்கும் திறன் விருத்தியாகும்.ஆயுர்வேத இயற்கை அழகு சாதனப் பொருட்களும் எம்மிடமுள்ளமை மகிழ்ச்சியளிப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் திரு.சிசிர ஜயக்கொடி மேலும் தெரிவித்தார்.

இதன்போது, இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டொக்டர் அனுர அத்தலமுதலி, வடமத்திய மாகாண சுகாதார மற்றும் உள் நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் கே.எம்.எஸ்.டி. ஜயசேகர, அநுராதபுரம் மேலதிக மாவட்ட செயலாளர் ஷமிலா விக்கிரமாராச்சி, மாகாண ஆயுர்வேத ஆணையாளர் டொக்டர் எம்.பி. திரு திருமதி கொடகே உட்பட பாதுகாப்பு பிரிவினரும், வைத்தியர்கள் குழுவினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# கோவிலூர் செல்வராஜனின் நூல் வெளியீடு நாளை



புலம்பெயர் எழுத்தாளரும், கவிஞரும், பாடலாசிரியருமான கோவிலூர் செல்வராஜன் எழுதிய 'கிழக்கிலங்கையின் மறைந்த சில இலக்கிய ஆளுமைகள்' நூல்வெளியீடு நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. கல்முனை வடக்குப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு கா.சந்திரலிங்கம் தலைமை தாங்கவுள்ளார். இவ்விழாவில், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதிசயராஜ் மற்றும் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீஸன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து சிறப்பிப்பர். அறிமுகவுரையை சஞ்சீவி சிவகுமாரும், வெளியீட்டுரையை, வே. அரவிந்தனும், நூல் வெளியீட்டுச் சிறப்புரையை எழுத்தாளர் உமா வரதராஜனும், வாழ்த்துரையை க. குணராசாவும் நிகழ்த்தவுள்ளனர்.

# காத்தான்குடி மத்திய கல்லூரியின் 93ஆவது வருட இல்ல விளையாட்டுப் போட்டி





காத்தான்குடி கல்விக் கோட்டத்துக்குட்பட்ட காத்தான்குடி மத்திய கல்லூரியின் 93ஆவது வருட நிறைவை முன்னிட்டு இல்ல விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி அக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காத்தான்குடி மத்திய கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 93 வருட வரலாற்றைக் கொண்டதாக காணப்படுவதுடன், தற்போது இப்பாடசாலையில் 2,250 மாணவர்கள் கல்வி கற்பதுடன், 100 ஆசிரியர்கள், 25 கல்வி சாரா ஊழியர்களின் பங்களிப்புடன் கல்விப் பணி தொடர்கிறது.

ஒவ்வொரு வருடமும் 60க்கும் குறையாத மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்வதுடன், ஏனைய உயர் கல்வி நிறுவனங்களிலும் கல்வியை தொடர்கின்றனர். இப்பாடசாலை மாணவர்கள் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் குறிப்பாக, விளையாட்டுத்துறையில் திறமைகளை மாணவர்கள் வெளிக்காட்டி வருகின்றனர்.

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு காசோலைகள்

**(வெலிகம தினகரன் நிருபர்)**



குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடு வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ், மாத்தறை மாவட்ட வெலிகம முலட்டியன மற்றும் திஹகொட ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட மக்களுக்கு காசோலைகள், வீட்டு உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இடம்பெற்றது. இதில், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

# இன ஒற்றுமை, மத நல்லுறவுகளுக்காக 1008 தேங்காய், கற்பூரங்கள் விநியோகம்



இனங்களுக்கிடையிலான ஒற்றுமை மற்றும் மதங்களுக்குள் நல்லுறவுகளைப் பேணும் பொருட்டு 1008 தேங்காய்களும் 1008 கற்பூரங்களும் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. இந்து, பௌத்த சங்கத்தினர் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு நேற்று (22) புதூர் நாகதம்பிரான் ஆலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண உதவி பிரதான சங்க தலைவர் அட்டமஸ்கட கல்யாணதிஸ்ஸ நாயக்க தேரர் மற்றும் இந்து பௌத்த சங்க தலைவர் ம.மயூரதன் இன்னும் இந்து , பௌத்த மக்களும் கலந்து கொண்டனர்.

# துடுப்பாட்டம், பந்துவீச்சில் முதல் பத்தில் இடம்பிடிப்பு





மாத்தறை தாருல் உலூம் பாடசாலை மாணவர்கள் இருவர், 15 வயதிற்குட்பட்ட பாடசாலை மட்ட கிரிக்கெட் வீரர்களின் தரவரிசையில் முதல் 10 இடங்களில் இடம்பிடித்துள்ளனர். சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் சல்ஹான் அஹமட் இடம்பிடித்துள்ளதுடன், சிறந்த பந்துவீச்சாளர்களில் ஒருவராக எம்.ஆர்.ரஸீன் அஹமட் தேர்வு செய்யப்பட்டார்.15 வயதுக்குட்பட்ட பிரிவு 2022 ஆம் ஆண்டுக்கான பாடசாலை கிரிக்கெட் போட்டிகளில் காட்டிய திறமைகளின் அடிப்படையிலே, இவ்விருவரும் முதல் பத்து இடங்களுக்குள் தெரிவாகியுள்ளனர். கிரிக்கெட் சம்மேளனம் இவர்களின் பெயர்களை வெளியிட்டுள்ளது . (பா)

# காலத்துக்கேற்றவாறு சமூகத்தை வழிநடாத்தும் சிந்தனை செம்மல்

## நளீமியாவின் இதய வாசல், கலாநிதி சுக்ரி



நளீமியாவின் ஆரம்ப காலப்பகுதி சுவாரஷ்யங்கள் நிறைந்ததென்பதை வரலாற்று வாயிலாக அறிய முடிகிறது.1973 இல்,உருவான நளீமியா, இன்று வரைக்கும் முஸ்லிம் சமூகத்தின் கலங்கரை விளக்கமாகத் திகழ்வதில் எமது சமூகம் பெருமையடை கிறது.இன முரண்பாட்டுக்குள் இலங்கை மூழ்கியிருந்த

காலத்தில்தான்,நளீமியாவின் உதயம் முஸ்லிம்களுக்கு அறிவு வெளிச்சம் பரப்பியது.எதிர்காலத்தை வடிவமைப்ப தில் முஸ்லிம்களுக்கு கல்வியே, கை கோர்க்கும்.

இந்த நியதியிலெழுந்த முஸ்லிம் புத்திஜீவிகளின் சிந்தனைகளில்தான்,நளீமிய்யாவின் அத்திவாரமும் எழுப்பப்பட்டது.இதனால்,முஸ்லிம் சமூகத்தை நிதானப்படுத்தி வழிநடாத்துவதில் ஜாமியா நளீமியா என்றும் வெற்றி நடைபோடுகிறது. இந்த வெற்றிக்கு நளீமியாவின் பணிப்பாளராக கலாநிதி சுக்ரி தெரிவானது போன்ற முக்கிய நிகழ்வாகவே,இந்நிறுவனத்தின் முதல் அதிபராக அறிஞர் தாஸிம் நத்வி கடமையாற்றியதையும் குறிப்பிடலாம் .

கல்லூரியின் ஆரம்ப மாணவரிடத்தில் அறிவுச்சிந்தனை விதைகளை தூவி விட்டுச்சென்றதில் இவரது பங்களிப்பு காலத்தால் நிலைக்கிறது. நளீமியா நூலகத்தில் அறிஞர் தாஸிம் நத்வி,ஏ.எம்.ஏ அஸீஸ் உட்பட பலருடைய நூல்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்நூலகத்தை மறுசீரமைப்புச் செய்யும் பணியில் எமது வகுப்புத் தோழர்களுடன் அப்போதைய நூலகராக இருந்த ஆசிரியர் அஸாஹிமும் ஈடுபட்டார்.இதனால்,

இங்குள்ள நூல்களைப் படிக்கும் சந்தர்ப்பம் எனக்கும் கிட்டியது.அறிவுச் சிந்தனைகளால் கவரப்பட்ட மாணவச் செல்வங்களை வழிநடாத்த தேவைப்பட்ட பொருத்தமா ன ஆசிரியர் குழாத்தைப் பெறுவதிலிருந்த சவாலை வெற்றிகொள்வதற்கு கலாநிதி சுக்ரி அவர்களின் பிரசன்னம் காரணமாயிருந்தது. நளீம் ஹாஜியாரின் வேண்டுதலுக்கு ஏற்ப நிலமையை ஆராய வந்த கலாநிதி சுக்ரி, நளீமியாவிலிருந்து நிறுத்தப்படுவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெயர்ப்பட்டியலை பார்வையிட்டு, முன்னணி வகித்த மாணவர்கள் குறித்த நூல்களை கேட்டறிந்தார்.

மாணவர்களின் வளர்ச்சியின் அடையாமான இதனை நெறிப்படுத்துவது ஆசிரியர்களின் பணியென விளக்கமளித்த சுக்ரி அவர்கள்,இவ்விவகாரத்தை

நெறிப்படுத்தினார். இந்நிகழ்வுகள் 1970 இன் இறுதியிலும் 1980 களின் ஆரம்பத்திலும் இடம்பெற்றன. வன்முறையால் சமூகப்பிரச்சினைக்கான தீர்வைத் தேடி இளைஞர்கள் களம் குதித்த இக்காலப்பகுதியில், முஸ்லிம் இளைஞர்களை கலாசாலையின் பக்கம் ஈர்ப்பதற்கு கலாநிதி சுக்ரியின் சிந்தனைகள் வழிகோலின.

இக்காலப்பகுதியில் வாழ்ந்த பெரும்பாலான இளைஞர்கள், நளீமியாவில் கற்க வேண்டுமென்ற கனவு மேலிடுமளவுக்கு நளீமியாவின் செயற்பாடுகள் இருந்தன.

நாட்டின் முஸ்லிம் இளைஞர்களுக்கு அறிவு மைய்யத் தளமாக நளீமிய்யா இயங்குகிறது. வன்முறைகள் முஸ்லிம் சமூகத்துக்குள் கருக்கொண்டுள்ளதாகக் கடந்த வருடங்களில் கிளப்பப்பட்ட புரளிகளைப் புறந்தள்ளுவதற்கு இவ்வாறான கலாசாலைகளே முஸ்லிம்களுக்கு உதவின. நாட்டின் இனப்பிரச்சினைக்கான மோதல்களில் எந்தத் தீவிர நிலைப்பாடுகளையும் சாராமல் இருந்தமை பலரையும் ஆச்சரியப்படுத்தின.

அறிவு ரீதியாக அணுகி நிலைமைகளைத் தீர்க்கும் பக்குவப் பயிற்சியையும் இக்கலாசாலைகளே பங்களிப்புச் செய்தன.

அறிஞர் சித்தி லெப்பை, ஏ.எம்.ஏ அஸீஸ் போன்றவர்கள் வாயிலாக வருகின்ற இப்பாரம்பரியத்தின் முதிர்ச்சிதான் நளீமியா என்ற சிந்தனை. அது இலங்கை முஸ்லிம்களை இந்நாட்டின் மைய்ய நீரோட்டத்திலிருந்து விலகாது சிந்திக்க வைத்துள்ளது.இவ்விடத்தில்தான், கலாநிதி சுக்ரி போன்ற ஒருவரின் தேவையை நளீம் ஹாஜியார் நன்கு உணர்ந்தார். இதனால்,நளீமியாவின் பணிப்பாளராகப் பதவியுயர்ந்தார்.நளீமியாவை நிறுவும் சிந்தனைகள் கருக்கொண்ட காலத்திலிருந்து சுக்ரிக்கு இவர்களுடன் தொடர்பு ஏற்பட்டிருந்தது.


1981 களில் நளீமியாவிற்கு வந்து சேர்ந்தவர் சுக்ரி. இது நளீம் ஹாஜியார் சொல்வது போன்று இறைவனின் ஏற்பாடு. இந்த நாட்டு முஸ்லிம்களின் வாழ்க்கைப் போக்கை நிதானமாக மாற்றிவிடுவதற்கு இறைவன் செய்த ஒரு மகத்தான் திட்டம் என்றால் அதுவும் மிகையானதல்ல. கொழும்பில் அக்காலப் பகுதியில் நடந்த ஒரு கூட்டமே, நளீமியாவின் உருவாக்கத்துக்கு வித்திட்டது.

ஒரு பள்ளிவாசலுக்குள் ஒதுங்கிக் கொண்ட ஒரு சிலர், முஸ்லிம் சமூகம் அறிவு ரீதியாக வழிநடாத்தப்பட வேண்டும் எனக் கலந்துரையாடினர் . இதன் பின்னணியில்தான் “தஃவாவும் நவயுகத்தின் சவாலும்” நூல் வெளிவருகின்றது. அந்நூல் இந்த யுகத்தின் சவாலுக்கு அறிவு ரீதியாக முகம் கொடுப்பதற்கான அழைப்பாகும். இந்த அழைப்பிற்கான பதில் தான் நளீமியாவின் உருவாக்கமாகும். எனவேதான், ஆரம்பத்தில் வெளிவந்த இதன் ஒரு கட்டுரையுடன் இணைத்து, இன்னும் பல கட்டுரைகளுடன் நளீமியாவின் முதல் பட்டமளிப்பு விழாவில் அதன் ஆசிரியர் அபுல்ஹஸன் அலி நத்வியின் பிரசன்னத்தில் அந்நூல் வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த வகையில் நளீமியாவின் சிந்தனை இயக்கத்தை செழுமைப்படுத்தி வழிநடாத்துவதற்காக அங்கு வந்த ஒரு சிந்தனைச் சிற்பியாகவே கலாநிதி சுக்ரி திகழ்கிறார்.

இப்பணியை இவர் செவ்வனே மேற்கொள்வதற்கு அவரது மாணவர்களே சாட்சியாக உள்ளனர்.

சிந்தனை உருவாக்கப் பணி ஒரு புள்ளியில் முற்றுப் பெறும் பணியல்ல. இது ஒரு நேர்கோடுமல்ல. அது வளைவு சுழிவுகளுடன் தொடர்ச்சியாக பயணிக்கும் பணி. இப்பணி தொடர்ச்சியாக அமைவதே இதன் வெற்றியாகும்.




**எம்.என்.இக்ராம்**

---

மயக்கமருந்தினால் சிறார்கள் உயிரிழக்கவில்லை;

# மக்கள் மத்தியில் சில ஊடகங்கள் தவறான தகவல் பரப்புகின்றன

**அமைச்சர் கெஹெலியா ரம்புக்வெல்ல விளக்கம்**

**அக்குறணை குறூப் நிருபர்**

சத்திரசிகிச்சையின் போது வழங்கப்படும் மயக்க மருந்தினால் சிறார்கள் உயிரிழக்கவில்லை. இது முற்றிலும் தவறானது என சுகாதார அமைச்சர் கெஹெலியா ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

கண்டி செயலகத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதார சேவைக்கு உள்வாங்கப்பட்ட 253 புதிய சிற்றூழியர்களுக்கு நியமனக்கடிதங்கள் கையளிக்கப்பட்டுள்ளன. இவர்கள் மத்திய, சப்ரகமுவ, வடமேல் மாகாண வைத்தியசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



மயக்க மருந்து தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை முற்றிலும் தவறானது. ஏனெனில் அம்மருந்து சற்று வலியை ஏற்படுத்தும் தன்மை கொண்டமையால் அதனை சிறுவர்களுக்கு ஏற்றுவதில்லை. எனவே அந்த மருந்தினால் தான் இச்சம்பவம் ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்க முடியாது.

ஊடகங்கள் சில வேளைகளில் தவறான புரிதல்களை ஏற்படுத்துவதுண்டு.

அதனை நம்பி மக்கள் தவறான பாதையில் சென்று விடக்கூடாது என்றும் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், பேராதனை, கண்டி மற்றும் பேராதனை ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்கா சிறுவர் வைத்தியசாலை பணிப்பாளர்கள் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

---

# மலைச்சாரல்

## சுவாமி ஜெகதாத்மானந்தா இலங்கைக்கு விஜயம்



**நுவரெலியா நிருபர்**

நுவரெலியா இந்து கலாசார பேரவையின் அழைப்பின் பேரில் சுவாமி ஜெகதாத்மானந்தா இலங்கைக்கு நேற்று வருகை தந்துள்ளார்.

நுவரெலியா இந்து கலாசார பேரவையின் அழைப்பின் பேரில் சுவாமி ஜெகதாத்மானந்தா இலங்கைக்கு நேற்று (22.06.2023) வருகை தந்துள்ளார். கொழும்பு பண்டாரநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த சுவாமிகளை நுவரெலியா இந்து கலாசார பேரவையின் உப தலைவரும் டிக்கோயா ரோட்டறிக் கழகத்தின் தலைவரும் ஊடகவியலாளருமான சுப்பிரமணியம் தியாகு, கொழும்பு வர்த்தகரும் லயன்ஸ் கழக உறுப்பினருமான பெருமாள் பிரகாஸ் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்றனர்.

சுவாமிகளுடன் அவருடைய சீடர் சிலி நாட்டைச் சேர்ந்த ரோட்றிகோ, கோயம்புத்தூர் ரோட்டறி கழக உறுப்பினர்களான தண்டபானி, ஜெயகாந்தன் பிரபு சங்கர் ஆகியோரும் வருகை தந்துள்ளனர்.

இன்று காலை நுவரெலியா காயத்ரி பீடத்திற்கு சென்று பூஜைகளில் கலந்து கொள்வதுடன் அதனை தொடர்ந்து நுவரெலியா ஸ்ரீ சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தில் நடைபெறுகின்ற விசேட பூஜைகளிலும் கலந்து கொள்வதுடன் நுவரெலியா பிளக்பூல் சென்.அந்தனீஸ் பாடசாலைக்கும் நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரிக்கும் சென்று மாணவர்களுக்கு யோகா தியானம் முக்கியத்துவம் தொடர்பாக தெளிவுபடுத்துவதுடன் அவர்களுக்கு ஆசீர்வாதமும் வழங்குவார்.

மாலை மத நல்லினக்கத்தை ஏற்படுத்தும் வகையில் நுவரெலியா சிங்கல் ரீ மலையில் அமைந்துள்ள சுவர்ணகிரி விகாரையின் விகாராதிபதி நந்தரதன தேரரையும் முன்னாள் நுவரெலியா மாநகர சபை முதல்வர் மகிந்த தொடம்பே கமகே ஆகியோரையும் விகாரையில் சந்தித்து இந்து, பௌத்த மத நல்லிணக்கம் தொடர்பில் கலந்துரையாடுவார்.

24.06.2023 அன்று கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள கங்காதீஸ்வரர் யாக பீடத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெறுகின்ற விசேட பூஜைகளிலும் கலந்து கொள்கின்றார். 25.06.2023 அன்று காலை 11.00 மணியளவில் சுவாமிகள் அவருடைய குழுவினருடன் இந்தியா நோக்கி பயணமாகவுள்ளார்.

---

# நானுஓயா தோட்டங்களில் குடிநீர் பற்றாக்குறை

நானுஓயா டெஸ்போட் தோட்டம் மற்றும் கிரிமிட்டிய பகுதி தோட்டங்களில் வசிக்கும் மக்கள் மிக நீண்ட காலமாக சுத்தமான குடிநீர் இன்றி பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேநேரத்தில் சுத்தமான குடிநீரை பருகி வந்த டெஸ்போட் மற்றும் கிரிமிட்டிய தோட்ட மக்கள் தற்போது கழிவு நீர் கலந்த குடிநீரை பருக வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய வீடமைப்புத்திட்டத்திலிருந்து வெளியேறும் கழிவுநீர் சுத்தமான குடிநீரில் கலக்கப்படுவதாக மக்கள் கூறுகின்றனர். இதனால் மக்கள் கழிவு நீரை பருக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் சுகாதார பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க நேரிட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வினவிய போது, தோட்ட மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்க தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

நானுஓயா கெல்சி, மகாஎலிய, டெஸ்போட், டெஸ்போட் கீழ்பிரிவு, டெஸ்போட் மேல் பிரிவு, கிரிமிட்டி, அவோக்கா, வழமலை, கர்லபேக், தம்பகஷ்த்தலாவ போன்ற பத்து தோட்டங்களுக்கு குடிநீர் வழங்க நீர் வளங்கள் அதிகார சபை ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் உலக வங்கி இதற்கென 8 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதனடிப்படையில் நானுஓயா பிரதேசத்தில் 476A கிரிமெட்டிய கிராம அலுவலகத்துக்குட்பட்ட நானுஓயா கெல்சி தோட்டத்தை மையமாக கொண்டு குடிநீர்திட்டத்திற்கான ஆரம்ப வேலைகள் செயற்படுத்தப்பட்டன.

இதற்காக கெல்சி ஆற்றிலிருந்து குழாய்கள் பதித்து குடிநீர் விநியோகிக்க திட்டமிட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

# நாட்டு மக்களின் நலனுக்காக ஐ.தே.கட்சியும் மொட்டுக்கட்சியும் இணைந்து பயணிக்க தயார்

**எம்.ஏ.அமீனுல்லா**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் இல்லை. நாட்டு மக்களின் நலனுக்காக ஐக்கிய தேசியக் கட்சியும் மொட்டுக்கட்சியும் இணைந்து பயணிக்க தயாராகி உள்ளதாக இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று (22) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், மஹிந்த ராஜபக்ஷவை போன்று இந்த நாட்டுக்கு சேவையாற்றிய தலைவர் வேறு யாருமில்லை. அவர் ஓய்வு பெற வேண்டிய தருணம் இது. மஹிந்த ராஜபக்ஷ இன்னும் இந்த நாட்டில் பிரபல்யமான அரசியல்வாதி. மக்கள் விரும்பும் போது தேர்தல் நடத்தப்படுகிறது, போராட்டக்காரர்கள் விரும்பும் போது அல்ல. தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பதை எதிர்க்கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

---

# நவீன கார் குடைசாய்ந்து விபத்து

**கம்பளை நிருபர்**

கம்பளை தொழுவ வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கம்பளை தொழுவ வீதியின் ஊடாக கலஹா செல்லும் வீதியிலுள்ள நில்லம்பை மின்உற்பத்தி நிலையத்துக்கருகில் நவீன கார் ஒன்று குடைசாய்ந்ததில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. நில்லம்ப நீர்த்தேக்க கால்வாயில் விழுந்துள்ளது.

இவ்விபத்தில் ஒருவர் காயமடைந்து கண்டி தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


---

# நாவுலவில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

**தம்புள்ள தினகரன் நிருபர்**


நாட்டில் பல பிரதேசங்களிலும் டெங்கு நோய் பரவல் அதிகரித்து வருகின்றது. இதனால் நாவுல பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் தீவிரமாக சோதனையிடப்பட்டு வருகின்றது. மாத்தளை நாவுல பிரதேச சபையின் மூலம் இப்பிரதேசத்திலுள்ள வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் தீவிர பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன. டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தில் நாவுல பொலிஸ் நிலைய சுற்றாடல் பிரிவு அதிகாரிகள், பிரதேச பொது சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# சிறு விளம்பரம்





மோட்டார் வாகனங்கள்




106

கார்கள்

விற்பனைக்கு

WP KY-2628 JEEP WRANGLER MOTOR CAR 2013, BLACK & WHITE கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் இல. 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 081033. 038038



122

மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்

விற்பனைக்கு

WP QI-9021 Bajaj, 2006, threewheel அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 07 1121081 0. 038161

Repeat Your ad For Better Offers

## பெறுகை அறிவித்தல்

### கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்

### கமத்தொழில் அபிவிருத்தி மாவட்ட அலுவலகம் - ஹம்பாந்தோட்டை

ஹம்பாந்தோட்டை கமத்தொழில் அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திற்கு உரித்தான கமத்தொழிற் சேவை மத்திய நிலையத்தின் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட 02 சக்கர ட்ரக்டர் மற்றும் விவசாய துணை உறுப்புகளை விலைமனுக்கோரல் மூலம் விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்கான தகவல்கள் எமது இணையதளமான www.agrariandept.gov.lk இல் உட்படுத்தப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 2023.07.18 ஆம் திகதிக்கு முன்னர் இதற்கான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், மேலதிக விபரங்களை 047-2220192 என்ற இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**பி.எஸ்.ராமநாயக்க**
**கமத்தொழில் அபிவிருத்தி பிரதி ஆணையாளர்**
**கமத்தொழில் அபிவிருத்தி மாவட்ட அலுவலகம்**
**ஹம்பாந்தோட்டை**

## பெறுகை அறிவித்தல்

### மின்வலு மற்றும் சக்தி அமைச்சு
### இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

### Disposal of Batteries, Floating Hoses and Scrap Iron at Nylon-6 Premises at Sapugaskanda

### B/23/2023

சப்புகஸ்கந்த RDD Yard at Ex-Nylon 6 இடப்பரப்பில் வைக்கப்பட்டுள்ள பின்வரும் அம்சங்களின் அகற்றுதலுக்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

**Lot C** : 123 Nos. Non-Hybrid Batteries & 18 Nos. UPS Batteries

**Lot D** : 07 Nos. Hybrid Car Batteries

**Lot E** : Floating Houses (includes hoses, chains, wire rope, iron scraps etc.,

received from offshore SPBM facility.

ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகியிருத்தலும் வேண்டும்.

2023.07.13 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 ரூபாவை (1,696.71 ரூபா + 2.5% SSCL + 15% பெசேவ) ஆகியவற்றை இபெகூ இற்கு செலுத்திய பின்னர், கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள 1 ஆம் மாடியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2023.07.14 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

அகற்றப்பட வேண்டிய அம்சங்கள் தற்போது சப்புகஸ்கந்த Nylon 6 Premises இல் வைக்கப்பட்டுள்ளதுடன் அம்சங்களின் பரீட்சித்தலானது 2023.07.07 ஆம் திகதிக்கு முன்னராக 011-5455336 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக களஞ்சியசாலைகளுக்கான சிரேஷ்ட அலுவலகருடனான முன்னேற்பாட்டு சந்திப்பினூடாக ஒழுங்குபண்ணலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர்**
**(பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609,**
**டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

## கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தில் தற்போதுள்ள நான்கு மாடி கல்விக் கட்டிடத்திற்கு AERIAL BUNDLE CABLE (ABC) வழங்குதல் மற்றும் நிறுவுதல்

1. பின்வருமாறு விபரிக்கப்படும் கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தில் தற்போதுள்ள நான்கு மாடி கல்விக் கட்டிடத்திற்கு AERIAL BUNDLE CABLE (ABC) வழங்குதல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், உப வேந்தரின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.
   * மதிப்பீட்டுக் கிரயம் ஏறத்தாழ 8.6 மில்லியன் இலங்கை ரூபா (VAT இல்லாமல்)
   BOQ வில் அடங்கியுள்ள அனைத்து வேலைகளும் இந்த வேலையில் உள்ளன.
2. நிர்மாணக் காலம் 60 நாட்களாகும்.
3. இந்த ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவும் மற்றும் EM 4 அல்லது அதற்கு மேலான CIDA பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். (மின்சார நிறுவல்களில் உப விசேடத்துவம் (தாழ் மின்னழுத்தம்) (EI LV) அல்லது மின்சார நிறுவல் (மத்திம அழுத்தம்) (EL-MV) அல்லது மேலதிக தாழ் அழுத்த நிறுவல்கள்)
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக தகைமைத் தேவைப்பாடுகளில் பின்வருவன உள்ளடக்கப்பட்டுள்ளன.
   i. கடந்த 05 வருடங்களில் 8.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பிரத்தியேகமான இதற்கு நிகரான குறைந்தபட்சம் 02 திட்டங்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   ii. ஏனைய ஒப்பந்த கடப்பாடுகளுக்கு நிகராக குறைந்தபட்ச திரவச் சொத்து மற்றும் / அல்லது கடன் வசதியானது 2.0 மில்லியன் இல. ரூபா இந்தத் திட்டத்திற்காக பிரத்தியேகமாக கிடைக்க வேண்டும்.
   iii. 2022-12-31 அல்லது 2021-12-31 அன்று முடிவடைந்த வருடத்திற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகள்
   * மேற்கூறப்பட்ட 4.I, 4.II மற்றும் 4.III என்பவற்றுக்கான ஆவண ரீதியான சான்றுகள் இணைத்திருத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட இந்த ஆவணச் சான்றுகள் இணைக்கப்படாதிருந்தால் அது விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாகலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை யக்கல, கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், பொது நிர்வாகப் பிரிவு, பிரதிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 033-2222784, 033-2215821, 0332222748, தொலைநகல்: 033-2222784 தொழில்நுட்ப தெளிவுபடுத்தல்களுக்கு: 0332231681, 077-1667836.

   5(அ) ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா கட்டணத்தை ரொக்கப் பணமாக பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்குச் செலுத்தியும் மற்றும் 2023-06-27ஆம் திகதி முதல் 2023-07-14ஆம் திகதி வரையில் மு.ப. 09.00 மணித்தியாலம் முதல் பி.ப. 14.30 மணித்தியாலம் வரையில் கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், பொது நிர்வாகப் பிரிவு, பிரதிப் பதிவாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை பிரதிப் பதிவாளர், பொது நிர்வாகப் பிரிவு, கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், யக்கல எனும் முகவரிக்கு 2023 ஜுலை 14ஆம் திகதி 14.30 மணித்தியாலம் அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும். விலைமனுக்களின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறு உறைகளில் உள்ளிட்டு இரு உறைகளிலும் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தில் தற்போதுள்ள நான்கு மாடி கல்விக் கட்டிடத்திற்கு AERIAL BUNDLE CABLE (ABC) வழங்குதல் மற்றும் நிறுவுதல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப்பட்ட முகவரியில் விலைக்கோரலில் கலந்து கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 77 நாட்களுக்கு (2023 செப்டெம்பர் 29ஆம் திகதி வரை) விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
7. சகல விலைமனுதாரர்களும் வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்க்குமாறு திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர் மற்றும் தேவைப்பட்டால் விலைமனுக்களைச் சமர்ப்பிக்குமுன் அளவீடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
8. சகல விலைமனுக்களுடனும் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் நாள் முதல் 2023 ஒக்டோபர் 27ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் இலங்கையில் செயற்படும் புகழ்பெற்ற வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதம் அல்லது ரொக்கப் பணமாக செலுத்தப்பட்ட எண்பத்தாறாயிரம் இலங்கை ரூபா (86,000.00 இல. ரூபா) பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. இது ஒரு அளவீட்டு மற்றும் கொடுப்பனவு ஒப்பந்தமாகும்.
10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் மற்றும் தள விஜயம் 2023-07-05ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு யக்கல, கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்திலுள்ள புதிய நிர்வாகக் கட்டிடத்தின் (2ஆம் மாடி) பதிவாளர் அலுவலகத்தின் குழு அறையில் இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத கல்வி நிறுவனம்,**
**யக்கல.**

**2023 ஜுன் 23ஆம் திகதி.**

## இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றினால் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

**கடன் தொடர்பு இல. 80002801**

**இலக்கம் 12/1/A, தர்மகீர்த்தி மாவத்தை, சிங்ஹபிட்டிய, கம்பளை எனும் முகவரியைச் சேர்ந்த திரு.தும்பர முஹந்திரம் கருணாநாயக்க மஹிந்த மடவலகே மற்றும் இலக்கம் 570/3/A, எல்தெனிய, கடவத்தை எனும் முகவரியைச் சேர்ந்த திரு.குலசேகர முதியன்சேலாகே ரஞ்சித் பண்டார வெலிவிட்ட ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.**

இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் 2023.03.17ஆம் திகதி வெள்ளிக்கிழமை 2324ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.03.29ஆம் திகதி புதன்கிழமை தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் மற்றும் 11.04.2023 ஆம் திகதி தினமின பத்திரிகையில் திருத்தப்பட்டு வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T&H ஒக்ஷனஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித் கருணாரத்ன அவர்கள் 2023.07.12 ஆம் திகதி புதன்கிழமை மு.ப.11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

மத்திய மாகாணம் நுவரெலிய மாவட்டம் மற்றும் பிரதேச செயலகப்பிரிவில் ஓயபலாத்த கோரளையில் நுவரெலிய மாநகரசபை எல்லைகளுள் இல.534/H - (பீட்ரூ), கிராம உத்தியோகத்தர் பிரிவு பொரலந்த கிராமம் பீட்ரூ தோட்டத்தில் அமைந்ததும் உத்தரவு பெற்ற நில அளவையாளரும் அளவீட்டாளருமாகிய கே.ஓ.பெரேரா தயாரித்த 24.03.2004 திகதியிட்ட வரைபடம் இல.2654ல் விபரித்த துண்டு 01 என அடையாளமிட்ட “மஹகஸ்தொட்ட பிரிவு பீட்ரூ தோட்டத்தின் பாகம்” என அழைக்கும் பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு வடக்கில் துண்டு 2ம் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பீட்ரூ தோட்டமும் கிழக்கில் காணி சீர்திருத்த ஆணைக்குழு பீட்ரூ தோட்டமும் தெற்கில் பாதையும் (பெருந்தெருக்கள்) துண்டு 2ம், மேற்கில் மேற்குறிப்பிட்ட வரைபடத்தின் அளவை மற்றும் விபரத்தின் பிரகாரம் துண்டு 2ம் எல்லைகளாகக் கொண்டு இருபது பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.20) அல்லது ஹெக்டேயர்கள் பூச்சியம் தசம் பூச்சியம் நான்கு பூச்சியம் ஆறு (ஹெக்டேயர்கள் 0.0406) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள நிரந்தரக் கட்டிடம், வழியின் பொது உரிமை மற்றும் சகலதும் ஆகும். இது நுவரெலியா காணிப்பதிவகத்தில் தொகுதி பக்கம் A 152/11ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம் நுவரெலிய மாவட்டம் மற்றும் பிரதேச செயலகப்பிரிவில் ஓயபலாத்த கோரளையில் நுவரெலிய மாநகரசபை எல்லைகளுள் இல.534/H (பீட்ரூ) கிராம உத்தியோகத்தர் பிரிவு பொரலந்த கிராமம் பீட்ரூ தோட்டத்தில் அமைந்ததும் உத்தரவு பெற்ற நில அளவையாளரும் அளவீட்டாளருமாகிய கே.ஓ.பெரேரா தயாரித்த 24.03.2004 திகதியிட்ட வரைபடம் இல. 2654ல் விபரித்த துண்டு 02 என அடையாளமிட்ட “மஹகஸ்தொட்ட பிரிவு பீட்ரூ தோட்டத்தின் பாகம்” என அழைக்கும் பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு வடக்கில் காணி சீர்திருத்த ஆணைக்குழு பீட்ரூ தோட்டமும், கிழக்கில் துண்டு 1ம், தெற்கில் பாதையும் (பெருந்தெருக்கள்), மேற்கில் காணி சீர்திருத்த ஆணைக்குழு பீட்ரூ தோட்டமும் மேற்குறிப்பிட்ட வரைபடத்தின் அளவை மற்றும் விபரத்துக்கமைய பத்து பேர்ச்சுக்கள் (ஏ0.றூ0.பே.10) அல்லது ஹெக்டெயர்கள் பூச்சியம் தசம் பூச்சியம் இரண்டு ஐந்து மூன்று (ஹெக்டேயர்கள் 0.0253) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள வழியின் பொது உரிமையும் மற்றும் சகலதும் ஆகும். இது நுவரெலியா காணிப்பதிவகத்தில் தொகுதி / பக்கம் A 152/12ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஏலவிலை கூறுவோர் 052-2258280 என்ற தொலைபேசி எண் ஊடாக தலவாக்கலை கிளையின் முகாமையாளரைத் தொடர்புகொண்டு உரிமைப் பத்திரங்கள் மற்றும் மேற்கூறிய சொத்து தொடர்பான பிற ஆவணங்களை பரிசோதிக்கலாம்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,
இலங்கை வங்கி,
திரு. எம். ராமன்,
தலவாக்கலை,
முகாமையாளர்.

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (Ika) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

### இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
### வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு
### வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு பின்வரும் பெட்டறிகளைப் பெற்றுக்கொள்வதற்காக தகுதி வாய்ந்த மற்றும் இயலுமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரலின் கீழ் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | 12V Deep Cycle Batteries | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவத்தின் பெறுமதி ரூபா | கேள்விப் பிணை முறியின் பெறுமதி ரூபா | கேள்விப் பிணை முறியின் செல்லுபடிக்காலம் (கேள்வி திறக்கப்படும் நாள் முதல்) |
|---|---|---|---|---|---|
| WL/02/09/12V BATT / 2023 | 90 Ahr | 290 | 9,000/- | 340,000/- | 90 நாட்கள் |
| | 100 Ahr | 180 | | | |
| | 120 Ahr | 110 | | | |
| | 150 Ahr | 02 | | | |

01. இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவிப் நிதிப் பணிப்பாளர் (0112-871537) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களை 2023-06-23ஆம் திகதி முதல் 2023-07-14ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 02.00 மணி வரையில் பத்தரமுல்லை, வனசீவராசிகள் திணைக்களத்தின் கணக்கியல் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
02. கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களை 2023-06-23ஆம் திகதி முதல் 2023-07-14ஆம் திகதி பி.ப. 02.00 மணி வரையில் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான கோரிக்கை சகிதம் மீளளிக்கப்படாத கட்டணத்தை திணைக்களத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
03. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறாக கடித உறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகை இலக்கத்தைக் குறிப்பிட்டு 2023-07-14ஆம் திகதி பி.ப. 02.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் என்பதுடன் கேள்விகள் அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
04. கேள்விப் படிவங்களைத் தயாரிப்பதற்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்காகவும் திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவர் பொறுப்புக்கூறமாட்டார்.
06. எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும், நிராகரிக்கும், ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளும் அல்லது எக்காரணமும் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

The Housewives’ companion Classifieds on Daily News

## இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

2023.03.31 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு டி.யு. மனோதர அத்தாட்சிப்படுத்திய 2017.01.27ஆம் திகதி 2071ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட மறுசீரமைக்கப்பட்ட கடன் A மீது 2022.12.08 வரையான வட்டியும் முதலுமாக 58,507,132.23 ரூபாயும் (ஐம்பத்தெட்டு மில்லியன் ஐந்நூற்றேழாயிரத்து நூற்று முப்பத்திரண்டு ரூபாய் இருபத்து மூன்று சதம்) அத்துடன் 2022.12.09ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு பன்னிரண்டு தசம் ஒன்று நான்கு வீதப்படி (12.14%) 52,710,001.94 ரூபாய் (ஐம்பத்திரண்டு மில்லியன் எழுநூற்றுப் பத்தாயிரத்து ஒரு ரூபாய் தொண்ணூற்று நான்கு சதம்) மீதான மேலதிக வட்டியும் மறுசீரமைக்கப்பட்ட கடன் B மீது 2022.12.08 வரையான வட்டியும் முதலுமாக 7,262,919.13 ரூபாயும் (ஏழு மில்லியன் இருநூற்று அறுபத்திரண்டாயிரத்து தொள்ளாயிரத்துப் பத்தொன்பது ரூபாய் பதின்மூன்று சதம்) அத்துடன் 2022.12.09ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு நான்கு வீதப்படி (4%) 6,760,189.65 ரூபாய் (ஆறு மில்லியன் எழுநூற்று அறுபதாயிரத்து நூற்று எண்பத்தொன்பது ரூபாய் அறுபத்தைந்து சதம்) மீதான மேலதிக வட்டியும் இல. 136, 73ஆம் கட்டை, மொரகொட, தலாவ என்ற முகவரியில் அமைந்துள்ள ரஜரட்ட பொலிசாக் (தனியார்) நிறுவனத்தாரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ளது.

2. மேற்குறித்தவாறு பிரசித்த நொத்தாரிசு டி.யு. மனோதர அத்தாட்சிப்படுத்திய 2017.01.27ஆம் திகதி 2071ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட மறுசீரமைக்கப்பட்ட கடன் A மீதான மேற்குறித்த 58,507,132.23 ரூபாயையும் (ஐம்பத்தெட்டு மில்லியன் ஐந்நூற்றேழாயிரத்து நூற்று முப்பத்திரண்டு ரூபாய் இருபத்து மூன்று சதம்) மறுசீரமைக்கப்பட்ட கடன் B மீதான மேற்குறித்த 7,262,919.13 ரூபாயையும் (ஏழு மில்லியன் இருநூற்று அறுபத்திரண்டாயிரத்து தொள்ளாயிரத்துப் பத்தொன்பது ரூபாய் பதின்மூன்று சதம்) அத்துடன் 2022.12.09ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே முதலாவது அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தை கீழே இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமையவும் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த M/S T & H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் எம்.எச்.ரி. கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி ரஜின சந்திக் கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற் குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணை**

வடமத்திய மாகாணம், அனுராதபுர மாவட்டம், தலாவ பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நுவரகம் பற்று/கோரளையில் இல. 405,மொரகொட என்ற கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள மொரகொட கிராமத்தில் அமைந்துள்ள காணி வடக்கில் ஹேமச்சந்திர 0விதானகே என்பவரின் காணியையும் கிழக்கில் எம்.ஜி. புஷ்ப வீரரத்ன என்பவரின் காணியையும் தெற்கில் டபிள்யு. எம். ஹீன்மெனிக்கே என்பவரின் காணியையும் மேற்கில் அனுராதபுரம் - தலாவ வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. ஒரு ஏக்கர் இரண்டு ரூட்கள் (ஏ1-ரூ2-பே0) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி அனுராதபுர மாவட்டக் காணிப் பதிவகத்தில் LDO/L/18/57 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த காணியானது உரிமம் பெற்ற நில அளவையாளர் என்.பி. ஏக்கநாயக்க தயாரித்த 2010.06.01ஆம் திகதி 053ஆம் இலக்க அண்மைய வரைபடத்தில் கீழ்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது

உரிமம் பெற்ற நில அளவையாளர் என்.பி. ஏக்கநாயக்க தயாரித்த 2010.06.01ஆம் திகதிய 053ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இல. 01 என அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணி மேற்குறித்தவாறு மொரகொட கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் ஹேமச்சந்திர விதானகே என்பவரின் காணியையும் (தற்போது மின்சார இணைப்பும் காணியும் ஈ.எம்.என்.கே. ஏக்கநாயக்க என்பவரால் பயன்படுத்தப்படுகிறது) கிழக்கில் எம்.ஜி. புஷ்ப வீரரத்ன என்பவரின் காணியையும் (தற்போது காணி ஈ.எம்.என்.கே. ஏக்கநாயக்க என்பவரால் பயன்படுத்தப்படுகிறது) தெற்கில் டபிள்யு. எம். ஹீன்மெனிக்கே என்பவரின் காணியையும் (தற்போது காணி ஈ.எம்.என்.கே. ஏக்கநாயக்க, விக்டர் ஹெட்டிகொட, டபிள்யு. எம். ஹீன்மெனிக்கே ஆகியோரால் பயன்படுத்தப்படுகிறது) மேற்கில் டபிள்யு. எம். ஹீன்மெனிக்கே என்பவரின் காணியையும் (தற்போது காணி விக்டர் ஹெட்டிகொட, டபிள்யு. எம். ஹீன்மெனிக்கே ஆகியோரால் பயன்படுத்தப்படுகிறது) வீதி ஒதுக்கத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஒரு ஏக்கர் இரண்டு ரூட்கள் (ஏ1-ரூ2-பே0) அல்லது பூச்சியம் தசம் ஆறு பூச்சியம் ஏழு பூச்சியம் ஹெக்ரயர் பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ளது.

குறித்த காணியானது உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு.ஏ. பிரேமரத்ன தயாரித்த 2015.09.05ஆம் திகதி 251/15 என்ற இலக்கத்தைக் கொண்ட மிக அண்மைய வரைபடத்தில் கீழ்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது

‘மொரகொட கெலே’ என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு.ஏ. பிரேமரத்ன தயாரித்த 2015.09.05ஆம் திகதி 251/15 என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் காணித்துண்டு இல. A என அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணி மேற்குறித்தவாறு மொரகொட கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் CM110162இன் கட்டம் 01இல் உள்ள காணித்துண்டுகள் 132, 137 என்பவற்றையும் கிழக்கில் CM110162இன் கட்டம் 01இல் உள்ள காணித்துண்டு 137 மற்றும் காணித்துண்டு 136இன் மீதிப் பாகம் என்பவற்றையும் தெற்கில் CM110162இன் கட்டம் 01இல் உள்ள காணித்துண்டு 193 மற்றும் காணித்துண்டு 136இன் மீதிப் பாகம் என்பவற்றையும் மேற்கில் CM110162இன் கட்டம் 01இல் உள்ள காணித்துண்டுகள் 193,135,133 என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஒரு ஏக்கர் இரண்டு ரூட்கள் (ஏ1-ரூ2-பே0) அல்லது பூச்சியம் தசம் ஆறு பூச்சியம் ஏழு பூச்சியம் (0.6070) ஹெக்ரயர் பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்தையும் கொண்டுள்ளது.

**இரண்டாவது அட்டவணை**

**ஒதுக்கங்கள்**

1. இக்காணியில் அல்லது காணியின்மேல் காணப்படும் அனைத்துக் கனிமங்களுக்குமான (இவ்வுறுதியில் பெறுமதிமிக்க கல் எனக் குறிப்பிடப்படும்) உரிமையும் அத்தகைய கனிமங்களை அகழ்வதற்கான, தேடுவதற்கான, அங்கு வேலை செய்வதற்கான, எடுத்துச் செல்வதற்கான உரிமையும் அரசுக்கே உரியது.
2. காணி உரிமையாளருக்குக் காணி மீதுள்ள உரித்தானது இவ்வுறுதியின் திகதியில் இக்காணி மீது தற்போது காணப்படும் எந்தவொரு வழி வாய்க்கால் உரிமைக்கும் உட்பட்டதாகும்.

**நிபந்தனைகள்**

1. உரிமையாளர், 1/4 ஏக்கர்கள் மேட்டுநிலம், 1 1/2 ஏக்கர்கள் நீர்ப்பாசனக் காணி என இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காணியின் உப பிரிவின் அலகைவிடக் குறைவான பரப்பளவுடைய பிரிக்கப்பட்டவொரு பாகத்தை கையுதிர்த்தலாகாது.
2. உரிமையாளர், இங்கு 1/4 ஹெக்ரயர்/ஏக்கர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் ஆகக் குறைந்த அலகிலும் குறைவான பிரிக்கப்படாதவொரு பாகத்தை கையுதிர்த்தலாகாது.
3. நிபந்தனை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் உப பிரிவைவிடக் குறைவான பரப்பளவுடைய பிரிக்கப்பட்டவொரு பாகத்திற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக இருத்தலாகாது.
4. நிபந்தனை 02இல் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் ஆகக் குறைந்த அலகிலும் குறைவான பிரிக்கப்படாதவொரு பாகத்திற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக இருத்தலாகாது.
5. இக்காணியோ அதன் எந்தவொரு பகுதியோ கட்டுமானக் காலத்தில் ஏற்கனவே கட்டப்பட்ட அல்லது இதன்பிறகு கட்டப்படவுள்ள நீர்ப்பாசன வசதியின் மூலம் நீர்ப்பாசனம் செய்யப்படக்கூடியதாக இருந்தால் அல்லது இதன்பிறகு நீர்ப்பாசனம் செய்யப்படக்கூடியதாக மாறினால் நீர்ப்பாசனம் செய்யப்படக்கூடிய பகுதி தொடர்பில் நீர்ப்பாசனக் கட்டளைச்சட்டத்தில் (அத்தியாயம் 453) கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் வரும் எந்தவொரு விதிக்கும் உரிமையாளர் இணங்க வேண்டும்.
6. உரிமையாளர், அரசாங்க அதிபரிடமிருந்து எழுத்துமூல அனுமதியையும் உரிய அதிகாரசபையிடமிருந்து உரிமம் ஒன்றையும் பெற்றுக்கொள்ளாது காணியில் அல்லது காணியின்மேல் காணப்படும் கனிமங்களை அகழவோ தேடவோ எடுக்கவோ உரிமைகொண்டாடவோ விற்கவோ வேறு விதத்தில் கையுதிர்க்கவோ கூடாது.
7. பிரதேச செயலாளரின் எழுத்துமூல முன்னனுமதி இன்றி காணியோ அதன் ஏதேனும் பாகமோ கையுதிர்க்கப்படலாகாது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,
இலங்கை வங்கி,
திருமதி. பி.எம்.டி.டி. பத்திராஜ,
ரஜின சந்திக் கிளை கிளை முகாமையாளர்,
திகதி: 31.03.2023

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (Ika) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## திருத்தம்

2023 ஏப்ரல் மாதம் 03ம் திகதி தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செலான் வங்கியின் பணிப்பாளர் சபை தீர்மானங்களை அறிவிக்கும் பத்திரிகை விளம்பரத்தில் கண்டி கிளையின் கணக்கிலக்கம் 0170-32545411-001/0170-32545411-002/0170-32545411-003/0170-32545411-004 மற்றும் 0170-33438388-001 ஆகியவற்றின் கணக்குரிமையைக் கொண்டுள்ள **ஹேவகே சுபர் மார்கட் (பிரைவட்) லிமிட்டட்** மற்றும் கணக்கிலக்கம் 0170-01794354-001/ 0170-01794354-002/ 0170-01794354-003 / 0170- 32546137-001/ 0170-32546137-002/ 0170-32546123-001 ஆகியவற்றின் கணக்குரிமையைக் கொண்டுள்ள **ஹேவகே ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட்** இன் ஆதனங்களின் மற்றும் அதன் வளாகங்களின் ஏல விற்பனை உத்தரவு பெற்ற ஏலதாரர் திருமதி சந்திமா கமகே என்பவரால் மேற்கொள்ளப்பட்டது என தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு, குறித்த ஆதனங்களின் ஏல விற்பனை உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு. துசித் கருணாரத்ன என்பவரால் மேற்கொள்ளப்பட்டது என திருத்தப்படல் வேண்டும் என இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

**(திருமதி) வீ.ஏ. பரணகம - சட்டத்தரணி**
**உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 யூன் 27ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 130,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123I291 | LKA18223L292 | LKA36424F288 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 60,000 | 35,000 | 35,000 | 130,000 |

ஏல விற்பனைத் திகதி : 2023 யூன் 27
தீர்ப்பனவுத் திகதி : 2023 யூன் 30
வழங்கப்படும் திகதி : 2023 யூன் 30
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2023 யூன் 27, செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

*PURCHASE OF 02 Nos.*

**CIRCUMFERENCE MOORING HAWSER WITH THIMBLE**

**B/22/2023**

Purchase of 02 Nos. 18" Circumference Mooring Hawser with Thimble என்பதற்காக புகழ்வாய்ந்த Mooring Hawser உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற வெளிநாட்டிலுள்ள ஏற்றுமதி முகவர்களிடமிருந்து/ அவர்களின் அதிகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக் கொள்வார்.

2023.08.03 ஆம் திகதிவரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிவரைக்குமிடையில் வேலை நாட்களில் இபெகூ இற்கு மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு தொகுதிக்கும் 3,500 ரூபாவை (ரூபா 2,969.25 + 2.5% SSCL + 15% பெசேவ) அல்லது சமமான ஐ.அ.டொலரில், இயுரோவில் அல்லது பெரிய பிரித்தானிய பவுண்ட்ஸ்ஸில் செலுத்திய பின்னர், கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம் அல்லது **http://ceypetco.gov.lk/public-tenders/**.. என்ற இபெகூ இன் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

ஆவணங்களை பதிவிறக்கம் செய்யும் சர்வதேச விலைமனுதாரர்கள் பின்வருமாறு ஆவணக் கட்டணத்தை செலுத்துவதுடன் பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டானது விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

A/C NAME : Ceylon Petroleum Corporation
A/C NUMBER : 004-1-001-1-0208633
BANK : People's Bank, Corporate Banking Division. ANCL building, No. 34, D.R. Wijewardena Mawatha, Colombo-10, Sri Lanka.
BANK CODE : 7135
BRANCH CODE : 004
SWIFT CODE : PSBKLKL

அனைத்து விலைமனுக்களும் 100,000 ரூபா அல்லது அதற்கு சமமான ஐஅடொ, இயுரோ அல்லது பெரிய பிரித்தானிய பவுண்ட்ஸ் பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2023.08.04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களின் மூடும் நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், வளமுள்ள விலைமனுதாரர்கள் கம்பனிகளின் பதிவாளர் திணைக்களத்துடன் **https://eroc.drc.gov.lk** என்ற இணையதளத்தினூடாக பதிவு செய்த பின்னர் அவர்களின் விலைமனுவுடன் பிசிஏ-3 சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின் அவற்றை 0094 11 5455288/5455336 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாக பொறிமுறை பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்களபெறுகைக் குழு,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் முகாமையாளர் மே/பா.,**
**இலங்கைபெற்றோலிய கூட்டுத்தாபனம், 1 ஆம் மாடி,**
**இல.: 609,டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09. இலங்கை.**
**தொலைநகல் : 0094-11-5455424**

## ஆள் அடையாளத்தை பிரகடனப்படுத்தல்

தெஹிவளை, களுபோவில, விண்ட்சர் பார்க், ஸ்ரீ மஹா விஹார வீதி, 66 B/4 என்ற முகவரியை சேர்ந்த **FATHIMA NUSRA SEGU ABDUL CADER** ஆகிய நான் எனது பிறப்புச் சான்றிதழ், 865553064 V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் அடிக்கடி பயன்படுத்தப்படும் அனைத்து உத்தியோகபூர்வ அடையாளங்களில் பாவிக்கப்படும் எனது பிறப்புப் பெயராகிய **FATHIMA NUSRA SEGU ABDUL CADER** என அடையாளமிடப்பட்டுள்ள அதே வேளையில் **FATHIMA NUSRA, FATHIMA NUSRA SEGU ABDUL CADER AND NUSRA ABDUL CADER** எனவும் குறிப்பிட்ட சில உத்தியோகபூர்வ ஆவணங்களின் மூலமாக அழைக்கப்பட்டும் குறிப்பீடு செய்யப்பட்டுமுள்ள பெயர்களை நான் ஏற்றுக் கொண்டு அவைகள் எனக்கு மட்டும் உரித்தாவதுடன் அதே நபராகிய எனக்கே குறிப்பீடு செய்யப்பட்டுள்ளதென இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

**FATHIMA NUSRA SEGU ABDUL CADER**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றினால் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397ஆம் அத்தியாயம்) 21ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2023.05.09 ஆம் திகதியன்று இடம்பெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை பிரத்தியேகமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:

1. பிரசித்த நொத்தாரிசு திருமதி போவிதந்திரி குஞ்சனா ரண்சிமாலி காரியவசம் அத்தாட்சிப்படுத்திய 2021.08.10ஆந் திகதியிட்ட 171ஆம் இலக்க ஈட்டுமுறி பேரில் பெற்றுக்கொண்ட கடன் வசதி மீது 2023.04.10ஆந் திகதி வரையான வட்டியும் முதலுமாக 8,786,280.27 ரூபாயும் (எட்டு மில்லியன் எழுநூற்று எண்பத்தாறாயிரத்து இருநூற்று எண்பது ரூபாய் இருபத்தேழு சதம்) 2023.04.11ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை 8,000,000.00 ரூபாய் (எட்டு மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு ஒன்பது (9%) என்ற வீதத்திலான மேலதிக வட்டியும் இஹலவத்தை, முலான, ஹங்கம எனும் முகவரியிலுள்ள திரு. ஜெயசிங்ஹ ஆரச்சிகே ரத்னசிறி என்பவரிடமிருந்து வங்கிக்கு வருமதியாக உள்ளது.

2. மேற்குறிப்பிட்ட 2021.08.10ஆந் திகதியிட்ட 171ஆம் இலக்க ஈட்டுமுறி பேரில் பெற்றுக்கொண்ட பேரில் வருமதியாவுள்ள 8,786,280.27 ரூபாயையும் (எட்டு மில்லியன் எழுநூற்று எண்பத்தாறாயிரத்து இருநூற்று எண்பது ரூபாய் இருபத்தேழு சதம்) அத்துடன் 2023.04.11ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரையான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய கீழுள்ள அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3 விஹார மாவத்தை கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு.எம்.எச்.ரீ. துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவிற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி அங்குனுகொலபெலஸ்ஸ கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

6702ஆம் இலக்க வரைபடத்தின்படி பட்டமுலு லந்த என அறியப்படும் பட்டமலு லந்த (TF313300) என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எல்.கே.குணசேகர தயாரித்த 2018.02.13 ஆந் திகதியிட்ட 6702ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டுயு என அடையாளமிடப்பட்ட காணியானது தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், கிறுவா பற்று கிழக்கு, அம்பலந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அம்பலந்தோட்டை பிரதேச சபை எல்லைகளுள் இஹலகம கிராம அலுவலர் பிரிவில் உடுகனுகெட்டியவில் அமைந்துள்ளது. இக்காணியானது வடக்கில் 2005/1370ஆம் இலக்க வரைபடத்தில் 1A என்ற காணித்துண்டையும், கிழக்கில் அதே காணியின் எஞ்சிய பகுதியையும், தெற்கில் 2005/1370ஆம் இலக்க வரைபடத்தில் 2 என்ற காணித்துண்டையும், மேற்கில் ஹங்கமவிலிருந்து மித்தெனியவிற்கான பிரதான வீதியையும் எல்லைகளாகக் கொண்டு இக்காணித்துண்டானது மேற்குறிப்பிட்ட 6702 ஆம் இலக்க வரைபடத்தின்படி அங்குள்ள மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கி இருபது பேர்ச்சுகள் (ஏ0.றூா.0பே.20) பரப்பளவையும் கொண்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு 1A ஆனது கீழ் விவரிக்கப்பட்ட காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஐ.கொடம்பகே தயாரித்த 2005/09/22ஆந் திகதிய 2005/1370ஆம் இலக்க வரைபடத்திலுள்ள தற்போதைய எல்லைகளுடனான 1B என்ற காணித்துண்டினது மீளளவையாகும்.

பட்டமலு லந்த (TF313300) என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஐ.கொடம்பகே தயாரித்த 2005/09/22ஆந் திகதிய 2005/1370ஆம் இலக்க வரைபடத்தில் பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான 1B என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு மேற்குறிப்பிட்டபடி உடுகனுகெட்டியவில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டு 1B வடக்கில் 2005/1370ஆம் இலக்க வரைபடத்தில் 1A என்ற காணித்துண்டையும், கிழக்கில் அதே காணியின் எஞ்சிய பகுதியையும், தெற்கில் 2005/1370ஆம் இலக்க வரைபடத்தில் 2 என்ற காணித்துண்டையும், மேற்கில் ஹங்கமவிலிருந்து மித்தெனியவிற்கான பிரதான வீதியையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட 2005/1370ஆம் இலக்க வரைபடத்தின்படி அங்குள்ள மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கி இருபது பேர்ச்சுகள் (ஏ0.றூா.0பே.20) பரப்பளவுடன் அம்பாந்தோட்டை காணிப்பதிவகத்தில் 69/44 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.
திரு.ஜீ.ஜீ.டீ. ரன்திமா,
முகாமையாளர்,
இலங்கை வங்கி,
அங்குனுகொலபெலஸ்ஸ.
08.06.2023

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

## விலைமனு கோரல்

## மாவட்ட செயலகம்- புத்தளம்

புத்தளம் மாவட்ட செயலகத்தினால் பின்வரும் செயற்றிட்டம் தொடர்பாக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விலை மனு இல. | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பீடு செய்யப்பட்ட பணிகளின் பெறுமதி (ரூபா) | சீடா பதிவு இல. | மீள் செலுத்தப் படாத விலைமனு வைப்புத் தொகை (ரூபா) | விலை மனு பிணைப் பணம் (ரூபா) மற்றும் செல்லு படியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | PU/PR/ CO/23/21 | ஆனமடுவ பிரதேச செயலக புதிய கட்டடத்தின் எஞ்சிய பணிகளை நிறைவு செய்தல். | 92.1 மில்லியன்கள் | C-3 அல்லது C-4 மட்டும் (கட்டடம்) | ரூபா. 12,500.00 | ரூபா. 925,000.00 2023.11.15 வரை |
| 02 | PU/PR/ CO/23/22 | முந்தல் பிரதேச செயலக புதிய கட்டடத்தின் எஞ்சிய பணிகளை நிறைவு செய்தல் | 11.22 மில்லியன்கள் | C-5 C-6 C-7 மட்டும் (கட்டடம்) | ரூபா. 5,000.00 | ரூபா. 115,000.00 2023.09.15 வரை |

02. மேற்கூறப்பட்ட விலைமனு ஆவணங்கள் 2023.06.26 ஆந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 2023.07.14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை மேற்குறிப்பிட்ட கட்டணத்தை புத்தளம் மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில் அல்லது புத்தளம் இலங்கை வங்கிக் கிளையில் செலுத்திய பின்னர் மாவட்ட செயலகக் கொள்வனவு அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலை மனுவினை விலை மனு வழிகாட்டற் கோவையில் இல. 19ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு "மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி" என தொகுதி இரண்டாக பூர்த்தி செய்து முத்திரையிடப்பட்ட கடித உறைகளில் வெவ்வேறாக இட்டு அவற்றின் இடப் பக்க மேல் மூலையில் உரிய விலை மனு இலக்கம் மற்றும் வேலை விடயத்தினை குறிப்பிட்டு 2023.07.17ஆம் திகதியான திங்கட்கிழமை பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு மாவட்ட செயலாளர் / தவிசாளர், திணைக்கள கொள்வனவு சபை, மாவட்ட செயலகம் புத்தளம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அல்லது மாவட்ட செயலக கொள்வனவு அலகில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியினுள் இடுமாறோ வேண்டப்படுகின்றனர். பி.ப. 2.00 மணி நிறைவடைந்ததும் விலை மனுப்பத்திரம் மாவட்ட செயலகக் கொள்வனவு அலகினால் திறக்கப்படும்.

04. தகைமையான நிறுவனத்தினை தெரிவு செய்வதில் நிறுவனத்தின் பதிவு மற்றும் அனுபவங்கள் உட்பட்ட அனைத்து விடயங்களும் கவனத்திற் கொள்ளப்படும் என்பதால் உங்கள் அனுபவங்களை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பிப்பது கட்டாயமாகும்

05. விலைமனு மதிப்பிடலின் போது மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு 5% முன்னுரிமை வழங்கப்படும்.

06. விலைமனுவிற்கு முன்னரான கூட்டம் 2023.07.11ஆந் திகதியன்று மேற்கூறப்பட்ட தொடரிலக்கம் 01 தொடர்பாக மு.ப. 10.00 மணிக்கும், தொடரிலக்கம் 02 தொடர்பாக மு.ப. 02.00 மணிக்கும் மாவட்ட செயலகத்தில் நடாத்தப்படும்.

07. விலைமனு திறக்கப்படும் போது விலை மனுதாரர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்து கொள்வதற்கு அனுமதியுண்டு.

08. மேலதிக விபரங்களுக்கு மாவட்ட செயலகத்தின் 032-2265233 அல்லது 032-2265335 என்ற தொலைபேசி வழியினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

2023.06.26

**எச்.எம்.எஸ்.பி.ஹேரத்**
**மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்**
**தவிசாளர் திணைக்கள கொள்வனவு சபை**
**மாவட்ட செயலகம், புத்தளம்**

## விலைமனுக்கோரல் அறிவித்தல்

### மத்திய மாகாண சுகாதார அமைச்சு

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - மாத்தளை

**ஆரம்ப சுகாதார முறைமையை வலுப்படுத்தும் செயற்றிட்டம் மற்றும் நேரடி அமைச்சு மானியம் – 2023**

1. மாத்தளை எம். சி. வீதியிலுள்ள மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணம் மற்றும் திருத்த வேலைகளுக்காக தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2019-05-08ஆம் திகதிய 04/2016(ii)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தேசிய போட்டி ரீதியில் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைக்கோரல்கள் 2023-07-14ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறே விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த பின் விலை கூறல்களுடனான விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

2. உரிய விலைமனுப் படிவக் கட்டணத்தை மாத்தளை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்காளருக்குச் செலுத்தியதன் பின் குறித்த விண்ணப்பப் படிவங்களை 2023-06-23ஆம் திகதி முதல் 2023-07-13ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

3. விலைமனுப் பிணையைச் சமர்ப்பிக்கும் போது நிர்மாணக் காப்பு நிதியம் (CGF), மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது காப்புறுதி நிறுவனத்தில் மாத்தளை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் உரிய மாதிரிக்கு அமைவாகச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறல்லாவிடில் உரிய கட்டணத்தை மாத்தளை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பணிப்பாளருக்குச் செலுத்திய பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியை விலைமனு ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மாத்தளை எம். சி. வீதி, மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது தவிசாளர், பெறுகைக் குழு, மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், எம்.சி. வீதி, மாத்தளை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். 2023-07-14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

5. கிடைக்கப்பெறும் விலைமனுக்களில் எந்தவொரு விலைமனுவையும் தெரிவு செய்யும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

6. இது தொடர்பான மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தின் மருத்துவ அதிகாரி (திட்டமிடல்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 066-2226504)

7. மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை பூரணப்படுத்தி வெவ்வேறு உறைகளில் இட்டு பின் அவைகளை ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் உரித்துடைய வேலையின் பெயர் மற்றும் தொடரிலக்கத்தை குறிப்பிட்டு முத்திரை பொறித்து சமர்ப்பித்தல் வேண்டும்.

8. விலைமனு ஆவணங்களில் கேட்கப்பட்டுள்ள தொழில்நுட்ப, நிதி மற்றும் ஏனைய தகைமைகள் சகிதமான ஆவணங்களில் சான்றுபடுத்திய பிரதியொன்றை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

9. சகல விலைக்கோரல்களின் பெறுமதி 05 மில்லியன் ரூபாவை விஞ்சும் வேளையில் ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரரினால் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் அத்தியாயத்தின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

10. இந்த விலைக்கோரல் அழைப்பு தேசிய போட்டி ரீதியான விலைக்கோரல் (NCB) முறையில் செயற்படுத்தப்படும். இதன் கீழ் வழங்கப்படும் வேலைகளின் வரிகள் அற்ற மதிப்பீட்டுப் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக உள்ளமையால் 2021-02-18ஆம் திகதிய 04/2016(iii)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் CIDA தரத்தைக் குறிப்பிடுதல் மற்றும் பிராந்திய விலைமனுதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

11. இது தொடர்பான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2023-07-07ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு மாத்தளை சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

| தொ. இல. | நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள் | தேவையான பதிவு மற்றும் தரம் (CIDA Grade) | பொறியியல் அளவுப் பத்திர தொகை (வெட் இன்றி) (ரூபா) | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி | | விலைமனுப் பிணை முறி செல்லுபடி யாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ரொக்கப் பணமாக (ரூபா) | ரொக்கப் பணமாக அல்லா விடில் | |
| PSSP -2023 திட்டம் | | | | | | | |
| 01 | லேலிஅம்பே பிரதேச வைத்தியசாலையில் வலது குறைந்தோருக்கான மலசலகூடத்தை நிர்மாணித்தல் | C 8 அல்லது C 9 | 1,194,011.94 | 5000.00 | 11,950.00 | 23,900.00 | 2023/11/13 |
| 02 | தம்புள்ள மாவட்ட ஆதார வைத்தியசாலையின் பொது சிகிச்சையகத்தில் நோயாளர் காத்திருக்கும் இடத்தை நவீனமயப்படுத்துதல் | C 7, C 8 அல்லது C 9 | 4,819,829.54 | 5000.00 | 48,200.00 | 96,400.00 | 2023/11/13 |
| 03 | தம்புள்ள மாவட்ட ஆதார வைத்தியசாலையின் குருதி ஊடுகுப்பு பிரிவின் மேல் மாடியினுள் ஆய்வுகூடமொன்றை நிறுவுதல் (கட்டம் 01) | C 5, C 6 அல்லது C 7 | 15,515,368.30 | 5000.00 | 155,200.00 | 310,400.00 | 2023/11/13 |
| 04 | தம்புள்ள மாவட்ட ஆதார வைத்தியசாலையில் நோயாளர்களைப் பரீட்சிக்கும் கட்டிடத்தை நிர்மாணித்தல் | C 5, C 6 அல்லது C 7 | 17,057,108.58 | 5000.00 | 170,600.00 | 341,200.00 | 2023/11/13 |
| Line Ministry - 2023 மானியம் | | | | | | | |
| 05 | தம்புள்ள மாவட்ட ஆதார வைத்தியசாலையில் மருந்து களஞ்சியசாலையின் கூரைத் திருத்தவேலைகள் | C 7, C 8 அல்லது C 9 | 2,480,139.40 | 5000.00 | 24,850.00 | 49,700.00 | 2023/11/13 |

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**மாத்தளை.**
2023-06-21

The Housewives' companion Classifieds on Daily News

# வெளிநாட்டில் தங்கிவிடும் வீரர்களை கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கை

## இலங்கை கிரிக்கெட் குறித்து அர்ஜுன கவலை

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி வெளிநாடு சென்று அங்கேயே தங்கிவிடும் வீரர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு திட்டமிட்டு வருவதாக தேசிய விளையாட்டுச் சபை தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.



தமது நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் இவ்வாறானவர்களின் செயல் இலங்கையின் எதிர்கால விளையாட்டு வீரர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தேசிய விளையாட்டு சபையின் கடந்த கால செயற்பாடுகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் தொடர்பில் விளக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று விளையாட்டுத் துறை அமைச்சில் நேற்று (22) நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"வெளிநாட்டில் தங்கிவிடும் வீரர்களின் பிரச்சினை தற்போது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. இதனால் பல வீரர்களையும் நாம் இழந்துள்ளோம். உயர் திறன் மட்டத்தில் முதல் இடத்தில் இருக்கும் வீரர் ஒருவரும் அண்மையில் இவ்வாறு வெளிநாட்டில் காணாமல்போயுள்ளார்.

இவ்வாறான செயல் அவர்களின் பெற்றோர்களையும் அவமதிப்பதாக உள்ளது. இதற்கு எதிராக இது வரை எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டதில்லை.

எனினும் இதனை கட்டுப்படுத்த சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கவும் நாம் திட்டமிட்டுள்ளோம்" என்று அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

அண்மையில் சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற தடகள போட்டியில் பங்கேற்பதற்குச் சென்ற முப்பாய்ச்சல் வீரர் கிரேஷன் தனஞ்சய அங்கு காணாமல்போனமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஆசிய விளையாட்டுப் போட்டி வரும் செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் சீனாவின் ஹாங்சு நகரில் நடைபெறவுள்ளது. இதற்கான தயார்படுத்தல் பணிகளை தேசிய ஒலிம்பிக் குழு மற்றும் தேசிய தேர்வுக்குழுவுடன் இணைந்து மேற்கொண்டு வருவதாகவும் அர்ஜுன ரணதுங்க இதன் போது தெரிவித்தார்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் சுமார் 100 வீர, வீராங்கனைகள் மற்றும் 55 அதிகாரிகளை அனுப்ப திட்டமிட்டபோதும் அதிகாரிகளின் எண்ணிக்கையை இன்னும் குறைப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் ரணதுங்க தெரிவித்தார்.

2022 ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட தேசிய விளையாட்டு சபை இதுவரை 255 சர்வதேச போட்டிகளுக்காக 1410 வீர, வீராங்கனைகள் மற்றும் 516 பயிற்சியாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு பரிந்துரை வழங்கி இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இதில் இலங்கை கிரிக்கெட் அணி இம்முறை உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறுவது பற்றிய பயமும் தமக்கு இருப்பதாக அர்ஜுன ரணதுங்க குறிப்பிட்டார். தமது வாழ்நாளிலேயே இலங்கை அணி உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் ஆட வேண்டிய நிலை ஏற்பட்டது குறித்து 1996 உலகக் கிண்ணத்தை வென்ற அணித்தலைவர் ரணதுங்க கவலை வெளியிட்டார்.

இலங்கை கிரிக்கெட் சபை கடந்த நிதியாண்டில் 6.3 பில்லியன் ரூபா சாதனை வருவாயை ஈட்டியதாக இலங்கை கிரிக்கெட் அறிவித்திருந்தது. இதுபற்றி கருத்து வெளியிட்ட ரணதுங்க,

"இந்த வருமானம் போட்டிகளில் வென்றதால் கிடைத்ததல்ல. சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் மற்றும் அனுசரணையாளர்களிடம் இருந்து தொலைக்காட்சி உரிமைகளுக்கு கிடைத்த பணம். எனவே இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாகத்தின் வெற்றியாக இதனைக் குறிப்பிட முடியாது.

இலங்கை கிரிக்கெட்டை மேம்படுத்துவதற்கு இதில் எவ்வளவு செலவிடப்பட்டது என்று நாம் பார்க்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

# ஓமானுடன் இலங்கை இன்று பலப்பரீட்சை



உலகக் கிண்ண தகுதிகாண் தொடரில் இலங்கை அணி இன்று (23) தனது இரண்டாவது போட்டியில் ஓமான் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

புலவாயோவில் இலங்கை நேரப்படி இன்று நண்பகல் 12.30க்கு ஆரம்பமாகும் இந்தப் போட்டியில் இலங்கை அணியில் முக்கிய மாற்றமாக முன்னணி வேகப்பந்து வீச்சாளர் துஷ்மன்த சமீர களமிறங்கவுள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிராக 175 ஓட்டங்களால் வெற்றியீட்டிய முதலாவது போட்டியில் சமீர காயம் காரணமாக களமிறங்கவில்லை. இந்நிலையில் காயத்தில் இருந்து மீண்டிருக்கும் அவர் கசுன் ராஜித்தவுக்கு பதில் அணிக்கு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அணியின் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு வலுவான நிலையில் இருந்தபோதும் கத்துக்குட்டி ஓமான் அணி இந்த தகுதிகாண் போட்டியில் வலுவான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது.

இலங்கை அணியின் முன்னாள் தலைவரான துலிப் மெண்டிஸின் பயிற்சியின் கீழ் ஆடும் ஓமான் அணி முதல் போட்டியில் அயர்லாந்தை வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்ததோடு இரண்டாவது போட்டியில் ஐக்கிய அரபு இராச்சியத்தை தோற்கடித்தது.

இதனால் அந்த அணி பி குழுவில் 4 புள்ளிகளுடன் முதல் இடத்தை பிடித்துள்ளது.

இந்நிலையில் இலங்கை அணி இன்றைய போட்டியில் முழு திறமையுடன் ஆடுவது முக்கியமாகும்.

# பொத்துவில் பிரதேச செயலகம்: சம்பியனானது கணக்குப் பிரிவு

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



பொத்துவில் பிரதேச செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளகக் கிளைப் பிரிவுகளுக்கிடையில் நடாத்தப்பட்ட சினேகபூர்வமான மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் கணக்குப் பிரிவு அணி சம்பியனானது.

பொத்துவில் ஜலால்டீன் சதுக்க பொது மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (20) இடம்பெற்ற இப்போட்டியில் ஆறு அணிகள் பங்குபற்றின. இதன் இறுதிப் போட்டியில் நிர்வாக பிரிவு அணியை எதிர்கொண்ட கணக்குப் பிரிவு அணி கடும் போட்டிக்குப் பின் வெற்றியீட்டியது. இப்போட்டியில் தொடர் நாயகனாகவும் இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாகவும் கணக்குப் பிரிவைச் சேர்ந்த சகலதுறை வீரர் எஸ். சம்சன் தெரிவுசெய்யப்பட்டார்.



# தொடரை வென்றது இலங்கை ஏ அணி

இலங்கை மற்றும் தென்னாபிரிக்க ஏ அணிகளுக்கு இடையிலான இரண்டாவது உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வி இன்றி நிறைவடைந்தது. எனினும் முதல் போட்டியில் வெற்றியீட்டிய இலங்கை ஏ அணி 1–0 என தொடரை கைப்பற்றியது.

கொழும்பு, பீ. சரா ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியின் கடைசி நாளான நேற்று தென்னாபிரிக்க ஏ அணிக்கு 324 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. எனினும் கடைசி நாள் ஆட்டநேர முடிவின்போது தென்னாபிரிக்க ஏ அணி 60 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 156 ஓட்டங்களை பெற்றிருந்தது.

முன்னதாக நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை ஏ அணி சார்பில் மினோத் பானுக்க (130) மற்றும் பசிந்து சூரியபண்டார (ஆட்டமிழக்காது 113) சதம் பெற்றனர். இருவரும் மூன்றாவது விக்கெட்டுக்காக 254 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் இலங்கை ஏ அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 327 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. இதில் இலங்கை ஏ அணி தனது முதல் இன்னிங்ஸில் 290 ஓட்டங்களை பெற்றதோடு தென்னாபிரிக்க ஏ தனது முதல் இன்னிங்ஸுக்காக 294 ஓட்டங்களை பெற்றது.

## சர்வதேச செய்திகள்

# இஸ்ரேலிய ஆளில்லா விமான தாக்குதலில் 3 பலஸ்தீனர் பலி



மேற்குக் கரையின் வடக்கே இஸ்ரேல் ஆளில்லா விமானம் கார் ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்ட நிலையில் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளது.

ஜெனின் அகதி முகாமில் கடந்த புதன்கிழமை (21) நடத்தப்பட்டிருக்கும் இந்தத் தாக்குதலில் கார் வண்டி ஒன்று தீப்பற்றி இருக்கும் கட்சிகள் சமூக ஊடகத்தில் வெளியாகியுள்ளன.

ஜலமா நகருக்கு அருகில் துப்பாக்கிச் சூடு நடத்திய பின்னர், சந்தேகத்திற்கிடமான வாகனத்தில் பயங்கரவாதக் குழுவை அடையாளம் கண்டதாக இஸ்ரேல் இராணுவம் இந்த தாக்குதல் பற்றி குறிப்பிட்டுள்ளது. ஜலமாவில் கடந்த திங்கட்கிழமை இஸ்ரேல் நடத்திய சுற்றிவளைப்பில் ஏழு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தப் படுகொலை குற்றத்திற்கு தண்டனை வழங்காமல் விடமாட்டோம் என்று பலஸ்தீன போராட்ட அமைப்பான ஹமாஸின் பேச்சாளர் ஹாசம் கஸ்ஸம் எச்சரித்துள்ளார்.

# சீன உணவகத்தில் எரிவாயு வெடித்து 31 பேர் உயிரிழப்பு




வட மேற்கு சீனாவில் உள்ள உணவகம் ஒன்றில் சமையல் எரிவாயு வெடித்து குறைந்தது 31 பேர் பலியாகி இருப்பதோடு மேலும் ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

யின்சுவான் நகர குடியிருப்பு பகுதியில் உள்ள பரபரப்பான வீதி ஒன்றில் கடந்த புதன்கிழமை இரவு இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

"பார்பிக்கியு உணவகத்தில் சமைத்துக் கொண்டிருந்தபோது பெட்ரோலிய வாயு கசிந்து இந்த வெடிப்பு நிகழ்ந்துள்ளது" என்று சின்ஹுவா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த வெடிப்பை அடுத்து அந்த உணவகத்தின் உரிமையாளர், பங்குதாரர்கள் மற்றும் ஊழியர்கள் என ஒன்பது பேரை பொலிஸார் கைது செய்திருப்பதோடு அவர்களின் சொத்துகளும் முடக்கப்பட்டிருப்பதாக சி.சி.டிவி தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

# நீர்மூழ்கியில் ஒட்சிசன் தீரும் நிலையில் தேடுதல் தீவிரம்



டைட்டானிக் கப்பலை பார்வையிடச் சென்று அட்லாண்டிக் கடலில் காணாமல்போயுள்ள நீர்மூழ்கிக் கப்பலில் ஒட்சிசன் தீர்ந்துவரும் நிலையில் அதனை தேடும் பணிகள் நேற்று (22) தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (18) காலை 12,500 அடி ஆழத்தில் வைத்தே இந்த நீர்மூழ்கிக் கப்பல் ஐந்து பேருடன் காணாமல்போனது. அதில் 96 மணி நேரத்திற்கே அவசர காற்றோட்டம் இருக்கும் நிலையில் கவலை அதிகரித்துள்ளது.

இந்நிலையில், அட்லாண்டிக் கடலின் அடியில் கேட்ட சத்தம் காணாமல் போன நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து வரவில்லை என்ற புதிய சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அந்தக் கப்பலில் இருந்து சத்தம் வருவதாக முன்னர் செய்திகள் வந்தன.

ஆனால் அமெரிக்கக் கடற்படை அணுநீர்மூழ்கிப் பிரிவின் முன்னாள் தளபதி டேவிட் மார்க்கெட், சத்தம் அந்தக் கப்பலில் இருந்துதான் வருகிறது என்று உறுதியாகச் சொல்ல முடியாது என்றார்.

அமெரிக்க கடலோர காவல்படை, கனடா இராணுவ விமானங்கள், பிரான்ஸ் கப்பல்கள் மற்றும் தொலைநோக்கி ரோபோக்கள் ஆகியவை நீர்மூழ்கிக் கப்பலைக் கண்டுபிடிக்க போராடி வருகின்றன.

கடைசியாக சமிக்ஞை துண்டிக்கப்பட்ட இடத்தில் இருந்து மீட்புப் பணி நடைபெற்று வரும் நிலையில், நீர்மூழ்கிக் கப்பல் எந்த திசையில் சென்றது என்பதை கண்டறிவது சவாலாக இருப்பதாக மீட்புக் குழு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் கணக்டிக்கெட் மாநிலத்தில் இருந்து 12,200 அடி தூரம் கடல் பரப்பில் தேடுதல் பணி நடைபெற்று முடிந்த நிலையில் நீர்மூழ்கிக் கப்பலை கண்டறிய முடியவில்லை என அமெரிக்க கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

"தேடுதல் பணி எவ்வளவு விரைவாக நடைபெற வேண்டுமோ அவ்வளவு விரைவாக நடைபெற்று வருகிறது. நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம்" என்று கனடா மற்றும் அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது. தேடுதல் பணியில் கூடுதல் படகுகள், நீர் மூழ்கி இயந்திரங்கள் ஈடுபட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மீட்புப் பணியின் தலைவர் ஜேமி பிரட்ரிக் கூறும்போது, "நீர்மூழ்கிக் கப்பலில் எவ்வளவு ஒட்சிசன் எஞ்சியிருக்கிறது என்பதைக் கணிப்பது கடினமான ஒன்று, ஒவ்வொருவருக்கும் ஓட்சிசனின் நுகர்வு விகிதம் எவ்வளவு என்று நமக்குத் தெரியாது" என்றார்.

# ஆய்வுகூட இறைச்சிக்கு அமெரிக்காவில் அனுமதி



ஆய்வுகூடத்தில் உருவாக்கப்பட்ட இறைச்சிக்கு அமெரிக்காவில் முதல் முறை ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவைச் சேர்ந்த இரு நிறுவனங்களுக்கு ஆய்வு கூடத்தில் வளர்க்கப்பட்ட இறைச்சியை நாட்டிலுள்ள உணவகங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகளுக்கு வழங்க அமெரிக்க விவசாய திணைக்களம் ஒப்புதலை வழங்கியுள்ளது.

விலங்குகளின் உயிரணுக்களில் இருந்து உருவாக்கப்பட்ட பயிரிடப்பட்ட இறைச்சி என்று அழைக்கப்படும் இந்த ஆய்வுகூட இறைச்சி உண்பதற்கு பாதுகாப்பானது என்று அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் ஏற்கனவே ஒப்புதல் அளித்திருந்தது.

இதன்மூலம் சிங்கப்பூரை அடுத்து ஆய்வுகூட இறைச்சியை விற்க அனுமதி அளிக்கப்படும் இரண்டாவது நாடாக அமெரிக்கா இடம்பெற்றுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூன் மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# வெலிபல் ஃபினான்ஸ்

## 2023 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள்

| இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் பற்றிய அறிக்கை<br>மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | நிறுவனம் 2023 ரூ. | நிறுவனம் 2022 ரூ. | வளர்ச்சி % | குழு 2023 ரூ. | குழு 2022 ரூ. | வளர்ச்சி % |
|---|---|---|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | **16,704,448,424** | **12,066,211,076** | **38.4** | **16,688,865,786** | **11,978,477,367** | **39.3** |
| வட்டி வருமானம் | 15,675,717,444 | 9,930,097,982 | 57.9 | 15,675,717,444 | 9,930,097,982 | 57.9 |
| வட்டிச் செலவினம் | (11,013,953,929) | (4,234,571,767) | 160.1 | (11,013,953,929) | (4,234,571,767) | 160.1 |
| **நிகர வட்டி வருமானம்** | **4,661,763,515** | **5,695,526,215** | **(18.2)** | **4,661,763,515** | **5,695,526,215** | **(18.2)** |
| கட்டண மற்றும் தரகுப்பண வருமானம் | 511,805,140 | 672,707,103 | (23.9) | 505,805,140 | 672,707,103 | (24.8) |
| **நிகர கட்டண மற்றும் தரகுப்பண வருமானம்** | **511,805,140** | **672,707,103** | **(23.9)** | **505,805,140** | **672,707,103** | **(24.8)** |
| வர்த்தகம் மூலம் நிகர ஆதாயம் / (இழப்பு) | (125,888) | 12,589 | (1,100.0) | (125,888) | 12,589 | (1,100.0) |
| நிதிச் சாதனங்கள் மூலம் நிகர ஆதாயம் / (இழப்பு) FVTPL இல் | 125,013,492 | 33,825,363 | 269.6 | 125,013,492 | 33,825,363 | 269.6 |
| ஏனைய செற்பாட்டு வருமானம | 392,038,236 | 1,429,568,039 | (72.6) | 382,455,598 | 1,341,834,330 | (71.5) |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | **5,690,494,495** | **7,831,639,309** | **(27.3)** | **5,674,911,857** | **7,743,905,600** | **(26.7)** |
| நிதிச் சொத்துக்கள் மீதான சேதஇழப்பு (அளவீடு) / எதிர்ப்பதிவு மற்றும் பிற கடன் இழப்பு | (97,575,003) | (592,488,831) | (83.5) | (97,575,003) | (592,488,831) | (83.5) |
| **நிகர செயற்பாட்டு வருமானம்** | **5,592,919,492** | **7,239,150,478** | **(22.7)** | **5,577,336,854** | **7,151,416,769** | **(22.0)** |
| **செலவுகள்** | | | | | | |
| ஆளணிச் செலவுகள் | (1,552,821,697) | (1,404,669,796) | 10.5 | (1,552,828,907) | (1,404,866,104) | 10.5 |
| வளாக உபகரணங்கள் மற்றும் ஸ்தாபன செலவுகள் | (291,600,035) | (221,286,928) | 31.8 | (291,600,035) | (221,286,928) | 31.8 |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | (985,897,827) | (835,514,204) | 18.0 | (988,916,877) | (837,435,478) | 18.1 |
| **நிதிச் சேவைகளுக்கான வரிகளுக்கு முன் செயற்பாட்டு இலாபம்** | **2,762,599,933** | **4,777,679,550** | **(42.2)** | **2,743,991,035** | **4,687,828,259** | **(41.5)** |
| நிதிச் சேவைகளுக்கான வரி | (697,119,801) | (783,809,641) | (11.1) | (697,119,801) | (783,809,641) | (11.1) |
| **வருமான வரிக்கு முன் இலாபம்** | **2,065,480,132** | **3,993,869,909** | **(48.3)** | **2,046,871,234** | **3,904,018,618** | **(47.6)** |
| வருமான வரிச் செலவு | (725,907,981) | (1,081,971,589) | (32.9) | (719,457,930) | (1,062,383,369) | (32.3) |
| **இலாபங்களின் ஒதுக்கம்** | **1,339,572,151** | **2,911,898,320** | **(54.0)** | **1,327,413,304** | **2,841,635,249** | **(53.3)** |
| **இதற்குக் காரணம் இலாபம்:** | | | | | | |
| கம்பனியின் உரிமையாண்மைப் பங்குதாரர் | 1,339,572,151 | 2,911,898,320 | (54.0) | 1,327,413,304 | 2,841,635,249 | (53.3) |
| கட்டுப்பாடற்றோர் நாட்டம் | - | - | - | - | - | - |
| **ஆண்டிற்கான இலாபம்** | **1,339,572,151** | **2,911,898,320** | **(54.0)** | **1,327,413,304** | **2,841,635,249** | **(53.3)** |
| **பங்கொள்றிற்கான வருவாய்:** | | | | | | |
| - பங்கொன்றின் அடிப்படை வருவாய் | 5.69 | 12.37 | (54.0) | 5.64 | 12.07 | (53.3) |
| - பங்கொன்றின் ஐதாக்கிய வருவாய் | 5.69 | 12.37 | (54.0) | 5.64 | 12.07 | (53.3) |

| இலாபஈ நட்ட மற்றும் முற்றடக்க வருமானக் கூற்று<br>மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | நிறுவனம் 2023 ரூ. | நிறுவனம் 2022 ரூ. | வளர்ச்சி % | குழு 2023 ரூ. | குழு 2022 ரூ. | வளர்ச்சி % |
|---|---|---|---|---|---|---|
| **ஆண்டிற்கான இலாபம்** | **1,339,572,151** | **2,911,898,320** | **(54.0)** | **1,327,413,304** | **2,841,635,249** | **(53.3)** |
| **ஏனைய முற்றடக்க வருமானம் - வரி கழித்தபின் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஒருபோதும் மீள்வகைப்படுத்தப்படாத உருப்படிகள்** | | | | | | |
| குறித்துரைக்கப்பட்ட பயன் பொறுப்புகளின் மீள் கணிப்பீட்டு ஆதாயம் / (இழப்பு) | 10,848,897 | 125,947,705 | (91.4) | 10,848,897 | 125,947,705 | (91.4) |
| பிற்போடப்பட்ட வரி (அறவீடு) / காப்பீட்டுக் கணிப்பு ஆயட்கால கணிப்பீட்டு முறை ஆதாயம் / (இழப்பின்) எதிர்ப்பதிவு | 4,625,210 | (30,227,449) | (115.3) | 4,625,210 | (30,227,449) | (115.3) |
| **வரையறுக்கப்பட்ட பயன் பரிப்பு மீதான ஆயட்கால 'கணிப்பீட்டுமுறை ஆதாயம் / (இழப்பு)** | **15,474,107** | **95,720,256** | **(83.8)** | **15,474,107** | **95,720,256** | **(83.8)** |
| காணி மற்றும் கட்டிடங்களின் மீள் மதிப்பீடு | - | 48,245,347 | (100.0) | - | 127,745,347 | (100.0) |
| பிற்போடப்பட்ட வரி / காணி, கட்டிட மீள்மதிப்பீட்டு எதிர்ப்பதிவு | (13,490,252) | (9,130,356) | (47.8) | (18,260,252) | (28,210,356) | 35.3 |
| **காணி மற்றும் டிடங்களின் மீள் மதிப்பீட்டின் நிகர மாற்றம்** | **(13,490,252)** | **39,114,991** | **(134.5)** | **(18,260,252)** | **99,534,991** | **(118.3)** |
| **இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படும் உருப்படிகள்** | | | | | | |
| ஒத்திவைக்கப்பட்ட வரி (அறவீடு)/ நியாயமான மதிப்பு ஆதாயங்கள் திரும்புதல் /(இழப்பு) | 226,310,672 | (226,310,672) | (200.0) | 226,310,672 | (226,310,672) | (200.0) |
| **பிற முற்றடக்க வருமானம் ஊடான சீர்மதிப்பு நிதிச்சொத்துக்களில் முதலீடு மீதான நிகர ஆதாயம் / (இழப்பு)** | **226,310,672** | **(226,310,672)** | **200.0** | **226,310,672** | **(226,310,672)** | **200.0** |
| **ஆண்டிற்கான ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம், வரி நீங்கலாக** | **228,294,527** | **(91,475,425)** | **(349.6)** | **223,524,527** | **(31,055,425)** | **(819.8)** |
| **ஆண்டிற்கான மொத்த முற்றடக்க வருமானம்** | **1,567,866,678** | **2,820,422,895** | **(44.4)** | **1,550,937,831** | **2,810,579,824** | **(44.8)** |
| **இலாப ஒதுக்கம்:** | | | | | | |
| - கம்பனி உரிமையாண்மைப் பங்குதாரருக்கு | 1,567,866,678 | 2,820,422,895 | (44.4) | 1,550,937,831 | 2,810,579,824 | (44.8) |
| - கட்டுப்பாடற்றோர் நாட்டம் | - | - | - | - | - | - |
| **ஆண்டிற்கான மொத்த முற்றடக்க வருமானம்** | **1,567,866,678** | **2,820,422,895** | **(44.4)** | **1,550,937,831** | **2,810,579,824** | **(44.8)** |

| தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள<br>(ஒழுங்குபடுத்தல் அறிக்கையிடலுக்கு அமைவாக) | 31/03/2023 இல் உள்ளவாறு Actual | 31/03/2023 இல் உள்ளவாறு Required | 31/03/2022 இல் உள்ளவாறு Actual | 31/03/2022 இல் உள்ளவாறு Required |
|---|---|---|---|---|
| **ஒழுங்குமுறைப்படுத் தல் மூலதனப் போதுமை (%)** | | | | |
| அடுக்கு 1 மூலதன போதுமை விகிதம | 17.02% | 8.50% | 14.58% | 7.00% |
| மொத்த மூலதன போதுமை விகிதம | 22.26% | 12.50% | 18.52% | 11.00% |
| வைப்பு பொறுப்புக்களுக்கான மூலதன நிதிய விகிதம | 26.84% | 10.00% | 29.98% | 10.00% |
| **கடன் சொத்துப்பட்டியலின் தரம் (%)** | | | | |
| மொத்த நிலை 3 கடன் விகிதம் | 6.16%* | | 3.93% | |
| நிகர நிலை 3 கடன் விகிதம் | 2.96%* | | 1.68% | |
| மைய மூலதன விகிதத்திற்கான மொத்த நிலை 3 கடன்களின் | 17.85% | | 11.23% | |
| நிலை 3 குறைபாடு கவரேஜ் விகிதம் | 51.85% | | 57.27% | |
| ஒதுக்கு பாதுகாப்பு விகிதம் | 4.82% | | 4.28% | |
| **இலாபத்தன்மை (%)** | | | | |
| தேறிய வட்டி இலாபம | 6.18% | | 9.08% | |
| சொத்துக்கள் மீதான வருவாய | 3.45% | | 7.19% | |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய | 12.32% | | 30.91% | |
| வருமானத்திற்கான செலவு விகிதம | 49.74% | | 31.43% | |
| **திரவத்தன்மை (%)** | | | | |
| தேவையான திரவச் சொத்துகளுக்கான கிடைக்கத்தக்க திரவச் சொத்து (குறைந்தபட்சம் 100%) | 269.24% | | 187.16% | |
| வெளிவாரி நிதியத்திற்கான திரவச் சொத்துக்கள | 19.94% | | 12.59% | |
| **விஞ்ஞாபனத் தகவல்கள** | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 58 | | 54 | |
| வெளிவாரி கொடுகடன் தரமிடல் | BBB+ (Negative) | | BBB+ (Stable) | |

31. 03. 2023 மற்றும் 31. 03. 2022 இல் முடிவடைந்த காலப்பகுதியில் வழங்கப்பட்ட டெபாசிட்கள் ,கடன் வாங்குதல் மற்றும் கடன் வழங்குதளுக்கு நிறுவனத்திற்கு எந்தவித ஒழுங்குமுறை அபராதங்கள் அல்லது ஒழுங்குமுறை கட்டுப்பாடுகளும் இல்லை.

*இலங்கை மத்திய வங்கியின் 2020 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உத்தரவின்படி 01.04.2022 முதல் நடைமுறைக்கு வரும் கடன் வசதிகளின் வகைப்பாடு மற்றும் அளவீடு

| நிதி நிலைமை அறிக்கை<br>மார்ச் 31இல் இருந்தவாறு | நிறுவனம் 2023 ரூ. | நிறுவனம் 2022 ரூ. | வளர்ச்சி % | குழு 2023 ரூ. | குழு 2022 ரூ. | வளர்ச்சி % |
|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | 2,332,724,111 | 877,638,204 | 165.8 | 2,339,453,098 | 900,929,559 | 159.7 |
| வங்கிகளில் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களில் வைப்பிலுள்ளவை | 9,860,926,513 | 4,167,388,105 | 136.6 | 9,860,926,513 | 4,167,388,105 | 136.6 |
| நேர்மாற்ற மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் | - | 1,770,612,142 | (100.0) | - | 1,780,760,519 | (100.0) |
| நஇலாப நட்டத்தினூடான சீர்மதிப்பு வருமானம்/இழப்பு (FVTPL) | 1,498,552,923 | 314,015,408 | 377.2 | 1,501,875,305 | 796,421,859 | 88.6 |
| காலத்தேய்மானக் கிரயத்தில் - நிதிச்சொத்துக்கள் - ஏனைய வாடிக்கயாளர்களக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் | 50,581,535,164 | 50,691,038,582 | (0.2) | 50,581,535,164 | 50,691,038,582 | (0.2) |
| காலத்தேய்மானக் கிரயத்தில் நிதிச்சொத்துக்கள் - குத்தகை வாடகை மற்றுர் வாடகைக் கொள்வனவு வருமதிகள் | 10,789,860,137 | 14,973,325,141 | (27.9) | 10,789,860,137 | 14,973,325,141 | (27.9) |
| பிற முற்றடக்க வருமானத்தினூடான சீர்மதிப்பில் அளவிடப்பட்ட நிதிமுதலீடுகள் | 203,800 | 1,737,815,264 | (100.0) | 203,800 | 1,737,815,264 | (100.0) |
| கடனளிக்கப்பட்ட செலவில் நிதிச் சொத்துக்கள் - கடன்கள் மற்றும் ஏனைய நிதிச் சாதனங்கள் | 4,169,488,788 | 100,423,871 | 4,051.9 | 4,169,488,788 | 100,423,871 | 4,051.9 |
| கடனளிக்கப்பட்ட செலவில் நிதிச் சொத்தக்கள் - ஏனைய நிதிச் சொத்துக்கள் | 28,698,236 | 13,647,730 | 110.3 | 28,698,236 | 13,647,730 | 110.3 |
| ஒரு துணை நிறுவனத்தில் முதலீடு | 20 | 20 | - | - | - | - |
| முதலீட்டு ஆதனங்ககள் | 1,179,500,000 | 1,179,500,000 | - | - | - | - |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 772,845,990 | 756,193,121 | 2.2 | 3,974,429,790 | 3,208,302,588 | 23.9 |
| பயன்பாட்டு குத்தகை சொத்துக்கள் | 748,848,409 | 781,224,648 | (4.1) | 748,848,409 | 781,224,648 | (4.1) |
| அருவச் சொத்துக்கள் | 18,458,354 | 28,671,530 | (35.6) | 18,458,354 | 28,671,530 | (35.6) |
| புற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 107,519,914 | 141,914,484 | (24.2) | 110,488,657 | 143,203,176 | (22.8) |
| ஏனைய சொத்துக்கள் | 234,912,249 | 156,802,865 | 49.8 | 227,906,193 | 156,829,959 | 45.3 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **82,324,074,608** | **77,690,211,115** | **6.0** | **84,352,172,444** | **79,479,982,531** | **6.1** |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கி மேலதிகப்பற்று | 1,561,119,013 | 1,062,546,767 | 46.9 | 1,561,119,013 | 1,062,546,767 | 46.9 |
| முன்கூட்டியே பெறப்பட்ட வாடகை | 176,943,085 | 227,759,381 | (22.3) | 176,943,085 | 227,759,381 | (22.3) |
| கடனளிக்கப்பட்ட செலவில் நிதி பொறுப்புகள் - வாடிக்கையாளருக்கான வைப்புக்கள் | 49,659,457,138 | 41,021,169,765 | 21.1 | 49,659,457,138 | 41,021,169,765 | 21.1 |
| கடனளிக்கப்பட்ட செலவில் நிதிக் கடன்கள் - வட்டி தாங்கும் கடன்கள் | 13,888,909,088 | 20,034,340,212 | (30.7) | 15,954,588,101 | 21,835,482,493 | (26.9) |
| கீழ்நிலைப்படுத்தியகாலக் கடன் | 3,163,398,140 | 2,012,844,267 | 57.2 | 3,163,398,140 | 2,012,844,267 | 57.2 |
| குத்தகைக் கடன்கொடுனர் | 912,495,354 | 858,556,285 | 6.3 | 912,495,354 | 858,556,285 | 6.3 |
| நடப்பு வரிப் பொறுப்புகள் | 547,185,073 | 604,894,450 | (9.5) | 547,185,073 | 604,894,450 | (9.5) |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் | 284,918,764 | 142,580,571 | 99.8 | 284,918,764 | 142,580,571 | 99.8 |
| ஏனைய பொறுப்புக்கள் | 955,904,529 | 989,544,615 | (3.4) | 947,566,765 | 990,488,316 | (4.3) |
| ஓய்வுப் பயன் கடப்பாடுகள் | 86,818,197 | 80,824,933 | 7.4 | 86,818,197 | 80,824,933 | 7.4 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **71,237,148,381** | **67,035,061,246** | **6.3** | **73,294,489,630** | **68,837,147,228** | **6.5** |
| **பங்குரிமை** | | | | | | |
| குறிப்பிடு மூலதனம் | 1,325,918,000 | 1,325,918,000 | - | 1,325,918,000 | 1,325,918,000 | - |
| சட்டநியதி ஒதுக்க நிதியம் | 1,766,773,033 | 1,699,794,425 | 3.9 | 1,766,773,033 | 1,699,794,425 | 3.9 |
| ஏனைய ஒதுக்கம் | 164,886,280 | (47,934,140) | (444.0) | 220,536,280 | 12,485,860 | 1,666.3 |
| கைக்கொள் இலாபம் | 7,829,348,914 | 7,677,371,584 | 2.0 | 7,744,455,501 | 7,604,637,018 | 1.8 |
| **கம்பனி உரிமையாண்மைப் பங்குதாரருக்கு சேரவேண்டிய மொத்த உரிமையாண்மை** | **11,086,926,227** | **10,655,149,869** | **4.1** | **11,057,682,814** | **10,642,835,303** | **3.9** |
| **கட்டுப்படுத்தாதோர் நாட்டம்** | - | - | - | - | - | - |
| **மொத்த உரிமையாண்மை** | **11,086,926,227** | **10,655,149,869** | **4.1** | **11,057,682,814** | **10,642,835,303** | **3.9** |
| **மொத்தப் பொறுப்புகளும் உரிமையாண்மையும்** | **82,324,074,608** | **77,690,211,115** | **6.0** | **84,352,172,444** | **79,479,982,531** | **6.1** |
| **பங்கொன்றிற்கான நிகர சொத்துப் பெறுமதி (ரூ.)** | **47.09** | **45.25** | **4.1** | **46.96** | **45.20** | **3.9** |

**உறுதியுரை:**
இந்த நிதியறிக்கைகள் 2007 அம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்படுத்தல்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஒப்பம்)
**கே.டி. மேனகா சமீர**
பிரதிப் பொது முகாமையாளர் நிதி மற்றும் நிர்வாகம

இந்த நிதியறிக்கைகளின் தயாரிப்பு மற்றும் சமர்ப்பணத்திற்குப் பணிப்பாளர்கள் சபை பொறுப்பாகும்.

(ஒப்பம்)
**எஸ்.பீ. ரணகமுவ**
முகாமைப் பணிப்பாளர்

(ஒப்பம்)
**எஸ்.எஸ். வீரபாகு**
நிறைவேற்று பணிப்பாளர்

2023 ஜூன் 06
கொழும்பு

**கணக்காய்வு நாயகத்தால் தணிக்கை செய்யப்பட்டு வெளியிடப்பட்ட தணிக்கை அறிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்பு இதுவாகும். ஆங்கில பதிப்பு மற்றும் வேறு எந்த மொழிபெயர்ப்பிலும் ஏதேனும் முரண்பாடு இருந்தால்,ஆங்கில பதிப்பு எப்போதும் பயனுள்ளதாக இருக்கும்.**

**சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை**
**வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இன் பங்குதாரர்களுக்கு**
**நிதிக்கூற்றுகளின் தணிக்கை அறிக்கை**

**கருத்து**
வெலிபல் பினான்ஸ் பிஎல்சி ("நிறுவனம்") மற்றும் அதன் துணை நிறுவனங்களின் ("குழுமம்") ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளை நாங்கள் தணிக்கை செய்துள்ளோம். இதில் 31 மார்ச் 2023 இல் உள்ள நிதி நிலை அறிக்கை, இலாபம் அல்லது நஷ்டம், விரிவான வருமானங்கள், சமபங்கு மாற்றங்களின் அறிக்கை, முடிவடைந்த நிதி ஆண்டிற்கான பணப்புழக்கங்களின் அறிக்கை, நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள், குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் [illegible]

நிதி நிலை, அதன் நிதி செயல்திறன் மற்றும் அதன் பணப்புழக்கங்கள் ஆகியவை இலங்கை கணக்கியல் நியமங்களின்படி முடிவடைந்த ஆண்டிற்கான உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்குகின்றன என நாங்கள் கருதுகின்றோம்.

**கருத்துக்களுக்கான அடிப்படை**
இலங்கை கணக்காய்வு தரநிலைகளுக்கு (SLAuSs) இணங்க நாங்கள் எங்கள் கணக்காய்வை மேற்கொண்டோம். எங்களது பொறுப்புகள் எங்கள் அறிக்கையின் நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கைக்கான தணிக்கையாளரின் பொறுப்புகளில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. [illegible] நாங்கள் சுயாதீன குழுவாக இருக்கின்றோம். மேலும் நெறிமுறைக் கோட்பாட்டிற்கு இணங்க எங்களது ஏனைய நெறிமுறை பொறுப்புகளையும் நாங்கள் நிறைவேற்றியுள்ளோம். நாங்கள் பெற்றுக் கொண்ட தணிக்கை சான்றுகள் எங்கள் கருத்துக்கு அடிப்படையை வழங்க போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இருந்ததென நாங்கள் நம்புகிறோம்.

**முக்கிய தணிக்கை விடயங்கள்**
முக்கிய தணிக்கை விஷயங்கள் பற்றிய எங்கள் தொழில்முறை தீர்ப்பின்படி சம காலத்துக்கான ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகள் மற்றும் நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள் எங்கள் தணிக்கையில் மிகவும் முக்கியத்துவம் [illegible]

[illegible]

KPMG
பட்டய கணக்காளர்கள்
கொழும்பு, இலங்கை

வெலிபல் ஃபினான்ஸ்
இல.310, காலி வீதி, கொழும்பு 3. தொ: 2 370 990

# வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| ABP-9692 | பஜாஜ் | 2017 | பாணடுரா |
| ABL-4327 | பஜாஜ் | 2016 | மாதரா |
| ABK-6568 | பஜாஜ் | 2016 | மாதரா |
| ABO-7227 | பஜாஜ் | 2016 | அம்பாரா |
| AAR-8679 | பஜாஜ் | 2014 | அம்பாரா |
| AAP-4561 | பஜாஜ் | 2014 | ராகம |
| AAT-5180 | பஜாஜ் | 2014 | மாதரா |
| AAH-3245 | பஜாஜ் | 2013 | ரத்தினபுர |
| AAM-5391 | பஜாஜ் | 2013 | எம்பிலிபிட்டிய |
| AAK-1414 | பஜாஜ் | 2013 | எம்பிலிபிட்டிய |
| AAH-9972 | பஜாஜ் | 2013 | பாணடுரா |
| YY-8249 | பஜாஜ் | 2012 | கண்டி |
| YK-9240 | பஜாஜ் | 2011 | ராகம |
| YJ-7193 | பஜாஜ் | 2011 | பாணடுரா |
| QZ-3574 | பஜாஜ் | 2010 | ரத்தினபுர |
| QW-6013 | பஜாஜ் | 2009 | குருநாகல் |
| QV-2765 | பஜாஜ் | 2009 | கண்டி |
| QK-9976 | பஜாஜ் | 2007 | பாணடுரா |
| QG-4208 | பஜாஜ் | 2006 | ரத்தினபுர |
| QF-8682 | பஜாஜ் | 2006 | ராகம |

| மோட்டார் வாகன்ம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| CBK-0622 | MG | 2019 | ராகம |
| CBA-5493 | சுசுகி | 2017 | ராகம |
| CAK-0882 | சுசுகி | 2015 | கண்டி |
| KF-5761 | டொயேட்டா | 2007 | ராகம |
| KA-0015 | நிசான் | 2001 | ராகம |
| JK-5862 | டொயேட்டா | 2002 | குருநாகல் |
| HX-6333 | டொயேட்டா | 2000 | பாணடுரா |
| 18-8910 | ஹோண்டா | 1991 | கண்டி |
| 18-0214 | நசான் | 1988 | மாதரா |

| மோட்டார் வாரி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| DAE-1520 | மஹிந்திரா | 2016 | ரத்தினபுரி |
| DAF-4201 | மிட்சுபிஷி | 2013 | ராகம |

| மோட்டார் வாரி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| LD-2305 | டாடா | 2006 | பாணடுரா |
| 226-1575 | நிசான் | 1995 | ரத்தினபுரி |
| 68-5822 | ISUZU | 1995 | குருநாகல் |
| 226-4248 | டொயேட்டா | 1992 | குருநாகல் |

| இரட்டை நோக்கம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| PT-7417 | மஹிந்திரா | 2012 | குருநாகல் |
| PT-6149 | டாடா | 2012 | குருநாகல் |
| LJ-0555 | டொயேட்டா | 2009 | கண்டி |
| 250-3549 | டொயேட்டா | 1992 | அனுராதபுரம் |

| இரட்டை நோக்கம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| JM-0429 | லங்கா அசோக் லேலண்ட் | 2004 | கண்டி |
| 60-4444 | டொயேட்டா | 1983 | அம்பாரா |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

ராகம 0773 951 796
திருகோணமலை 0769 138 400
ரத்தினபுரி 0774 857 351
கண்டி 0773 972 860
நுவரெலியா 0777 717 562
அனுராதபுரம் 0767 139 916
அம்பாரா 0773 547 556
குருநாகல் 0764 425 205
எம்பிலிபிட்டிய 0773 610 188
பாணடுரா 0775 215 263
மாத்தறை 0743 601 121

The Housewives' companion
Classifieds on
Daily News

---

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

கிராமிய பாலங்கள் திட்டம் - கட்டம் V

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## கிராமிய பாலங்கள் திட்டத்திற்கு மத்திய கையிறுப்பு களஞ்சியத்தை வாடகைக்கு பெறல்

**விலைமனு RBP/Central Stock yard/ 2023**

கிராமிய பாலங்கள் திட்டம் - கட்டம் V இன் Bridge Elements Re - bar Bridge Deck, Geo Textile, Gabion, Expansion Joints போன்றவற்றை களஞ்சியப்படுத்துவதற்காக, ஒரு வருட (01) காலத்திற்கு வாடகை அடிப்படையில் ஓர் மத்திய கையிருப்பு களஞ்சியத்தை பெற்றுக்கொள்வதற்காக ஒற்றை கட்டம் ஒற்றை கடித உறை முறைமையில் பொறியிடப்பட்ட விலைமனுக்களை கொழும்பு-02 யூனியன் பிளேஸ், இல. 330 பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

- ➡ விலைமனு காணி கொழும்புத் துறைமுகத்திலிருந்து தென்படும் தூரத்தில் அமைந்திருத்தல் மற்றும் காணிக்கு தெளிவான எல்லைகள் இருத்தல் அத்துடன் 3 ஏக்கருக்கு குறையாத பிரதேசத்துடனான காணி
- ➡ 3 பேஸ் மின்சார வழங்கல், குழாய் குடி நீர் வசதிகள் மற்றும் சுகாதார வசதிகளை காணி கொண்டிருத்தல் வேண்டும்.
- ➡ காணிக்கான பிரவேச பாதை 06 மீற்றருக்கு குறையாத அகலத்தைக் கொண்டிருப்பதுடன் சிறந்த நிலையில் இருத்தல் வேண்டும்.
- ➡ காணி தரைமட்டமாக இருப்பதுடன் வெள்ள பாதிப்பு இன்றி இருத்தல்.

2023.06.23 முதல் 2023.07.14 வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கொழும்பு 02, யூனியன் பிளேஸ், இல. 330, பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு கிராமிய பாலங்கள் திட்டம், திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்திலிருந்து, மீளளிக்கப்படாத காசு வைப்பு ரூ. 2,500/- மேற்கொள்வதன் மூலம் ஆர்வமுள்ள தரப்பினர்களுக்கு விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பொறியிடப்பட்ட விலைமனு மூலப் பிரதிகள் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கிராமிய பாலங்கள் திட்டத்திற்கு மத்திய கையிருப்பு களஞ்சியத்தை வாடகைக்குப் பெறல் - விலைமனு இல. RBP/Central Stock Yard / 2023" என்று குறிப்பிட்டு, கொழும்பு 02 யூனியன் பிளேஸ், இல. 330, பொ.உ.மா.உ. அமைச்சு நிதிப் பிரிவு, அமைச்சு பெறுகைக் குழு, தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது 2023.07.17 பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன் மேற்படி அமைவிடத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்யலாம்.

எல்லா விபரங்களும் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளன மேலதிக விபரங்களை பொது நிருவாக உள் நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரிவு பிரதம நிதி அலுவலரை அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| **தொடர் தொ.பே. இலக்கம்** | :- | **011-2345973** |
| **பெக்ஸ் இலக்கம்** | :- | **011-2347532** |
| **மின்னஞ்சல்** | :- | pclgfpfinance@gmail.com |

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்,**
**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
**இல. 310, யூனியன் பிளேஸ்,**
**கொழும்பு-02.**
23.06.2023

---

## மக்கள் வங்கி கங்கொடவில கிளை

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பிரிவின் கீழான தீர்மானம்.

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 29D பிரிவின் கீழ், 2023 ஏப்ரல் 27ஆம் திகதி நடைபெற்ற மக்கள் வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மக்கள் வங்கி சார்பில், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசும் மற்றும் சட்டத்தரணியுமான திருமதி.எல்.எம்.நாரங்கொட என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019.04.05 ஆம் திகதியுடைய 6241ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் திரு. அகுருகொட பதிரனகே சமன் ரத்னசிரி என்பவர் தவணை தவறியுள்ளார். அத்தோடு சொல்லப்பட்ட முறி மீது பதினாறு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து இருநூற்று பதினொரு ரூபாய் பதினொரு சதம் (ரூ.1,656,211.11) தொகையும் மற்றும் ஐம்பத்து நான்கு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து ஐம்பத்திரண்டு ரூபாய் பதினைந்து சதம் (ரூ.5,463,052.15) தொகையும் மக்கள் வங்கிக்கு தற்போது வருமதியாகவும் மற்றும் சேரவேண்டியதுமாக இருக்கின்றது.

பதினாறு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து இருநூற்று பதினொரு ரூபாய் பதினொரு சதம் (ரூ.1,656,211.11) தொகை, மற்றும் பன்னிரண்டு இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து அறுநூற்று பதினொரு ரூபாய் அறுபத்தொரு சதம் (1,246,611.61) தொகை மீது 2023.01.10ஆம் திகதியிலிருந்து வருடத்துக்கு இருபது (20%) சதவீதத்தில் மேலதிக வட்டியையும் மற்றும் ஐம்பத்து நான்கு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து ஐம்பத்திரண்டு ரூபாய் பதினைந்து சதம் (ரூ.5,463,052.15) தொகை,மற்றும் 2023.01.10ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை ஐம்பது இலட்சம் (5,000,000.00) தொகை மீது வருடத்துக்கு இருபது தசம் ஐந்து (20.5%) சதவீதத்தில் மேலதிக வட்டியையும் மற்றும் சொல்லப்பட்ட மக்கள் வங்கி சட்டத்தின் பிரிவு 29L இன் கீழ் மீட்டுக் கொள்ளப்படக்கூடிய தொகையையும், கொடுப்பனவுகள் (ஏதேனும்) பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்சொல்லப்பட்ட 6241ஆம் இலக்க ஈட்டு முறியினால் மேற்படி வங்கிக்கு ஈடு வைக்கப்பட்ட ஆதனம் மற்றும் வளவை கொழும்பைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர் திரு. பிரேமசிரி வடுகே என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தினால் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.

**ஈடு வைக்கப்பட்ட ஆதனங்கள் மற்றும் வளவுகளின் விபரம்**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிடி கோரளை பல்லே பற்று மஹரகம மாநகர சபை எல்லைகளுக்குள் மஹரகம பிரதேச செயலகப் பிரிவில், கங்கொடவில தெற்கு இல.526B கிராம சேவையாளர் பிரிவில் ஜம்புகஸ்முல்ல கிராமத்தில் வரி மதிப்பீட்டிலக்கம் 120 (பாகம்) மற்றும் 116 பெபிலியான வீதியில் அமைந்துள்ள "கம்ஹல்பிடிலந்த" என அழைக்கப்படுகின்ற காணிக்கு உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.ஜீ.ஜீ.பியசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2009.02.19ஆம் திகதியுடைய 1827ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் சகலதும் பிரிக்கப்பட்டு துண்டம் A என அடையாளமிடப்பட்டுள்ளது என்பதோடு சொல்லப்பட்ட 1827ஆம் இலக்க வரைபடத்திற்கு ஏற்ப சொல்லப்பட்ட துண்டம் A பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது:

வடக்கே: பெபிலியான வீதி, வரி மதிப்பீட்டிலக்கம் 114 ஐக்கொண்ட வளவு
கிழக்கே: பெபிலியான வீதி
தெற்கே: வரி மதிப்பீட்டிலக்கம் 120 இன் எஞ்சிய பாகம்
மேற்கே: என்.ஏ.சீ.சில்வா என்பவரால் உரிமை கோரப்படுகின்ற பகினிகஹ கும்புர

அத்தோடு பத்து தசம் ஒன்று ஒன்பது பர்ச்கள் (ஏ:0-றூ:0-ப:10.19) விஸ்தீரணத்தைக் கொண்டு அதனகத்தேயுள்ள சகலதையும் உள்ளடக்கியது.

சொல்லப்பட்ட துண்டம் A என்பது கீழே விபரிக்கப்படுகின்ற பின்வரும் காணிகளின் ஒரு ஒன்றிணைப்பாகும்:

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிடி கோரளை பல்லே பற்று மஹரகம மாநகர சபை எல்லைகளுக்குள் அபிவிருத்தி சபை பிரிவு இல.5இற்குள், இல.1 ஜம்புகஸ்முல்ல தேர்தல் பிரிவுக்குள், கங்கொடவில பெபிலியான வீதியில் வரி மதிப்பீட்டிலக்கம் 116ஐக் கொண்டதும் மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ.டீ.எம்.ஜே.ரூபசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1985.05.22 மற்றும் 1984.12.14 ஆம் திகதியுடைய 406 CH/O/1?3874-இலக்க நில அளவை வரைபடத்தில் சகலதும் பிரிக்கப்பட்டு துண்டம் 01 என அடையாளமிடப்பட்டுள்ளது என்பதோடு சொல்லப்பட்ட 406 CH/O/1?3874-1984.12.14 இலக்க வரைபடத்திற்கு ஏற்ப சொல்லப்பட்ட துண்டம் 01 பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது:

வடக்கே: பெபிலியான வீதி, வரி மதிப்பீட்டிலக்கம் 114 ஐக்கொண்ட வளவு
கிழக்கே: பெபிலியான வீதி
தெற்கே: மேலே குறிப்பிடப்பட்ட வரைபடத்தில் துண்டம் 02
மேற்கே: நாணயக்கார அதுலுகமகே சார்லிஸ் சில்வா என்பவரால் உரிமை கோரப்படுகின்ற பகினிகஹ கும்புர

அத்தோடு ஐந்து தசம் நான்கு ஒன்று பர்ச்கள் (ஏ:0-றூ:0-ப:5.41) விஸ்தீரணத்தைக் கொண்டு அதனகத்தேயுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதையும் உள்ளடக்கியது.

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிடி கோரளை பல்லே பற்று மஹரகம மாநகர சபை எல்லைகளுக்குள் அபிவிருத்தி சபை பிரிவு இல.05இற்குள், இல.1 ஜம்புகஸ்முல்ல தேர்தல் பிரிவுக்குள், கங்கொடவில பெபிலியான வீதியில் வரி மதிப்பீட்டிலக்கம் 120ஐக் கொண்டதும் மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ.டீ.எம்.ஜே.ரூபசிங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1985.05.22 மற்றும் 1984.12.14ஆம் திகதியுடைய 406 CH/O/1/3874 இலக்க நில அளவை வரைபடத்தில் சகலதும் பிரிக்கப்பட்டு துண்டம் 02 என அடையாளமிடப்பட்டுள்ளது என்பதோடு சொல்லப்பட்ட 406 CH/O/3874 இலக்க வரைபடத்திற்கு ஏற்ப சொல்லப்பட்ட துண்டம் 02 பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது:

வடக்கே: துண்டம் 01
கிழக்கே: பெபிலியான வீதி
தெற்கே: பெபிலியான வீதி வரி மதிப்பீட்டிலக்கம் G 120 (பாகம்)
மேற்கே: நாணயக்கார அதுலுகமகே சார்லிஸ் சில்வா என்பவரால் உரிமை கோரப்படுகின்ற பகினிகஹ கும்புர

அத்தோடு நான்கு தசம் ஏழு எட்டு பர்ச்கள் (ஏ:0-றூ:0-ப:4.78) விஸ்தீரணத்தைக் கொண்டு அதனகத்தேயுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதையும் உள்ளடக்கியது.

குறிப்பிட்ட ஈடு கொட்டாவ காணிப்பதிவகத்தில் B519/88 பிரிவு/இருமடியிலக்கத்தில் செய்யப்பட்டது.

**மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி கையொப்பமிடப்பட்டது.**
**பிராந்திய முகாமையாளர்**
**(கொழும்பு வெளிப்பிராந்தியம்)**

**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமை அலுவலகம் (கொழும்பு வெளிப்பிராந்தியம்)**
**இல. 177A ஹைலெவல் வீதி,**
**நுகேகொட**

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE PEOPLE'S BANK

---

## இரத்தினபுரி மாநகர சபை - கேள்வி கோரல்

## புலுங்குபிட்டிய பொதுச் சந்தையின் மேல் மாடியிலுள்ள கடை அறைகளை கேள்வியிடல்

இரத்தினபுரி மாநகர சபைக்குச் சொந்தமான புலுங்குபிட்டிய சந்திக்கு அருகில் உள்ள பொதுச் சந்தை கடை கட்டிடத் தொகுதியின் மேல் மாடியிலுள்ள 20, 21ஆம் இலக்க 02 கடை அறைகளை அபிவிருத்தி செய்து முன் விற்பனை அடிப்படையில் நீண்டகால குத்தகைக்கு விடுவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

- கேள்வி விண்ணப்பப் படிவங்களை வழங்க ஆரம்பிக்கும் திகதி
  2023-06-23
- கேள்வி விண்ணப்பப் படிவங்கள் வழங்குதல் முடிவுறும் திகதியும் நேரமும்
  2023-07-06 பி.ப. 3.00 மணி
- கேள்வி விண்ணப்பப் படிவங்கள் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும்
  2023-07-07 மு.ப. 10.00 மணி
- கேள்விகள் திறக்கப்படும் திகதியும் நேரமும்
  2023-07-07 மு.ப. 10.30 மணி
- ஆகக் குறைந்த கையளிப்புத் தொகை - ரூபா 2,650,000.00
- கேள்வி விண்ணப்பப்படிவக் கட்டணம் - ரூபா 2000.00
- கேள்விப் பிணை வைப்புத் தொகை - 25000.00

- சகல கடை அறைகளினதும் பரப்பளவு 140 சதுர அடிகளாகும்.
- சமர்ப்பிக்கப்படும் ஆகக் குறைந்த கையளிப்புத் தொகைக்கு பெறுமதி சேர் வரி (VAT) மற்றும் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய அரச வரிகளும் அறவிடப்படும்.
- ஆகக் குறைந்த கையளிப்புத் தொகை செலுத்தி முடிக்கப்பட்டதன் பின் இரத்தினபுரி மாநகர சபையினால் கடை அறை தயார்நிலைபடுத்தப்பட்டு குத்தகைதாரருக்கு வழங்கப்படும்.
- கேள்விப் படிவங்களை இயைபுடைய கட்டணங்களைச் செலுத்தி இரத்தினபுரி மாநகர சபையில் 2023-06-23ஆம் திகதி முதல் 2023-07-06ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
- சகல கேள்வி விண்ணப்பப் படிவங்களிலும் தாம் விண்ணப்பிக்கும் கடை அறையின் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- ஆகக் குறைந்த கையளிப்புத் தொகையின் 50% தொகையை ஆரம்பக் கொடுப்பனவாகச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் மிகுதியை 06 மாத காலத்தினுள் செலுத்துதல் வேண்டும்.
- கடை அறையை தயார் செய்து ஒப்படைக்கும்போது அரசாங்க மதிப்பீட்டின் பிரகாரம் மாதாந்த வாடகை செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அதன்பொருட்டு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.
- முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை 2023-07-07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் இரத்தினபுரி மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம் அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, இரத்தினபுரி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மேற்குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்பலாம்.
- மேற்கூறப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் கேள்விப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.
- கேள்விப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தை செவ்வனே புரிந்துகொண்டு அந்த அறிவுறுத்தல்களுக்கு இணக்கமாக கேள்விப் படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- கேள்விகள் தொடர்பான இறுதித் தீர்மானத்தை மாநகர கேள்விச் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
- மேலதிக விபரங்களுக்கான விசாரணைகள்:
  மாநகர ஆணையாளர்: 045-2222275, 045-2222759 மாநகர கணக்காளர்: 045-2231900

**வீ. அருண என் பிரேமரத்ன,**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**இரத்தினபுரி.**

---

## இரத்தினபுரி மாநகர சபை - விலைமனுக்கோரல்

## தெமுணிவாவத மானிக்கக்கல் வர்த்தகக் கட்டிடத் தொகுதியின் கடை அறைகளை குத்தகைக்கு வழங்கல்

இரத்தினபுரி மாநகர சபைக்கு உரித்தான தெமுவாவத மாணிக்கக்கல் விற்பனை கட்டிடத்தொகுதியின் இலக்கம் 03 கடை அறையை முன் விற்பனை முறைமை அடிப்படையில் நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்காக விலைமனுக் கோரப்படுகின்றன.

- விலைமனுப் படிவங்களின் வழங்கல் ஆரம்பமாகும் தினம்
  2023-06-23
- விலைமனுப் படிவங்கள் வழங்கப்படும் இறுதித்தினம் மற்றும் நேரம்
  2023-07-06 பி.ப. 3.00
- விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினம் மற்றும் நேரம்
  2023-07-07 மு.ப. 10.00
- விலைமனு திறக்கப்படும் தினம் மற்றும் நேரம்
  2023-07-07 மு.ப. 10.30 மணி
- ஆகக்குறைந்த வழங்கல் தொகை - ரூபா 2,256,000.00
- விலைமனுப்படிவக் கட்டணம் - ரூபா 2000.00
- விலைமனு பிணைத்தொகை - 25000.00

- அனைத்து கடை அறைகளினதும் விஸ்தீரணம் 188 சதுர அடிகளாகும்.
- சமர்ப்பிக்கப்படும் ஆகக் குறைந்த வழங்கல் தொகையுடன் பெ.சே.வ (VAT) மற்றும் ஏனைய அரச வரிகளும் செலுத்தப்படல் வேண்டும்.
- உரிய கட்டணங்களைச் செலுத்தி, இரத்தினபுரி மாநகர சபையில் 2023-06-23 முதல் 2023-07-06 வரை வார வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை இதற்கான விலைமனுப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.
- தாம் விண்ணப்பிக்கும் கடை அறையின் இலக்கத்தைக் விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.
- தேர்ந்தெடுக்கப்படும் விலைமனுதாரருக்கு அது பற்றி அறிவிக்கப்பட்டு 14 நாட்களிற்குள், ஆகக்குறைந்த வழங்கல் தொகையை இம்மாநகரசபையில் வைப்புச்செய்து உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.
- கடை அறையை ஒப்படைக்கையில் அரச மதிப்பீட்டின் பிரகாரம், மாதாந்த வாடகையை செலுத்துதல் வேண்டுமென்பதுடன் அதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுதல் வேண்டும்.
- முத்திரையிடப்பட்ட அனைத்து விலைமனுக்களும் 2023-07-07 அன்று மு.ப. 10.00 ற்கு முன்னர் இரத்தினபுரி மாநகர சபையின் ஆணையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனு பெட்டியில் நேரடியாக சேர்த்தல் அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, இரத்தினபுரி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் மேற்படி தினத்தன்று குறித்த நேரத்திற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும்.
- 2023.07.07 அன்று மு.ப.10.30 இற்கு விலைமனுக்கள் இரத்தினபுரி மாநகர சபையின் Blue safaya கூட்ட மண்டபத்தில் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் விலைமனுதாரர்கள் சமுகமளித்திருக்கலாம்.
- மேற்படி தினத்தன்று உரிய நேரத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
- விலைமனுப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களிற்கமைவாக, விலைமனுக்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
- விலைமனு தொடர்பான இறுதித் தீர்மானம் இரத்தினபுரி மாநகர சபையின் பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.
- மேலதிக விபரங்களிற்கு அழைக்கவும்.
  மாநகர ஆணையாளர்: 045-2222275/045-2222759 மாநகர கணக்காளர்: 045-2231900

**வீ. அருண என் பிரேமரத்ன,**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை, இரத்தினபுரி**
**இரத்தினபுரி.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Applicable Rates for Obituary Notices of Daily News

For 15 Words - Rs. 300

* Each additional word Rs. 20/-

N. B. - Death Certificate is essential

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk
frontoffice@lakehouse.lk

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

The Housewives' companion Classifieds on Daily News

## அறிவித்தல்

**அநுராதபுரம் புனித பிரதேசத்தில் அமைந்துள்ள பௌத்த சபை அபிவிருத்தி சங்கம் (பௌத்த சபை)**

2023 ஆண்டிற்கான பொதுக் கூட்டம் மற்றும் உத்தியோகத்தர் தெரிவு, 2023 ஜுலை 27 அன்று மு.ப. 9.30 இற்கு பௌத்த சபை வளாகத்தில் நடைபெறும். அன்றைய தினம் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**செயலாளர்**
**தொ.பே. இல: 025-2222531**

## SMB FINANCE PLC

### மீட்கப்படாத தங்க நகைகளுக்கான ஏலவிற்பனை

2022.11.30 வரையான திகதிக்குள் எமது நீர்கொழும்பு, கொழும்பு மற்றும் தெனியாய கிளைகளில் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க நகைகளை விற்பனை செய்வதற்கான அறிவித்தல். அனைத்து தங்க நகைகளும் கீழுள்ள திகதியில் மு.ப. 10.00 முதல் பி.ப. 1.00 வரை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

**ஏலமிடும் திகதி 2023-06-26**

ஏலமிடும் இடம்: 282/1, CBS கட்டிடம், காலி வீதி, கொழும்பு 03.

நடைமுறைக்கு : 0766 903 434
தங்கக் கடனுக்காக : 0768 281 339

முன்னறிவித்தலின்றி குறித்த ஏலத்தினை நிறுத்தவோ, ஒத்திவைக்கவோ, ஒன்றிணைக்கவோ அல்லது இடத்தை மாற்றவோ எஸ். எம். பி. ஃபைனான்ஸ் நிறுவனத்திற்கு அதிகாரமுள்ளது.

**SMB FINANCE PLC**
முகாமையாளர்
இல. 282/1, சீ.பி.எஸ். கட்டிடம், கொழும்பு 3.

## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

**மக்கள் வங்கி - பிராந்திய தலைமைக் காரியாலயம் - மொனராகலை**

மக்கள் வங்கி மொனராகலை பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை மையங்களில் 31.03.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ள திகதி வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாததுமான நகைகள் பின்வரும் திகதிகள் மற்றும் இடங்களில் பொது ஏல விற்பனை செய்யப்படும் இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

ஒவ்வொரு நாளும் ஏல விற்பனையானது காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.

| ஏல விற்பனை நிகழும் திகதி | 25.07.2023 மற்றும் 26.07.2023 |
|---|---|
| இந்த திகதி வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத நகைகள் | 24.07.2023 |
| ஏல விற்பனை நிகழும் இடம் | மொனராகலை கிளை வளாகம் |
| அடகு வைக்கப்பட்ட கிளைகள் | பிபிலை, வெல்லவாய, மொனராகலை, புத்தளை, கதிர்காமம், தனமல்வில, மெதகம, படல்கும்புர, சியபலந்துவ |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | மொனராகலை, தம்பகல்ல, எதிலிவெவ, ஒக்கம்பிட்டிய, ஹம்பேகமுவ |

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**வெல்லவாய வீதி, மொனராகலை.**
**தொலைபேசி இல. 055-2276350/ 055-2276347**

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK Pride of the Nation

---

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
விசேட அதிரடிப்படை
(இலங்கை பொலிஸ்)

## விலைமனுக்கோரல் (IFB)

### இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப்படைக்கு விளையாட்டு காலணிகளை கொள்வனவு செய்தல்.

### PS/03/PB/PR/08/12/2023

01. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, 14வது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல, இலங்கை அமைச்சின் பெறுகை குழு, தலைவரினால் பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | விபரம் | அளவு | மனு ஆவணக் கட்டணம் ரூ. | மதிப்பீட்டு மனுப்பிணைப் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | PS/03/PB/PR/08/12/2023 | விளையாட்டு காலணிகள் | 6000 | 12,000.00 | 720,000.00 |

02. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

03. இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியான மனுதாரர்கள் மேலதிக தகவல்களை கணக்காளர் (பெறுகை), பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, 14வது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல, அவர்களிடம் பெற்றுக்கொள்ளவதுடன், **2023.06.23 ஆம் திகதி முதல் 2023.07.25 ஆம் திகதி வரை** பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்கள் தவிர்ந்த வார நாட்களில் **மு.ப. 09.00** மணி முதல் **பி.ப. 03.00** மணி நேரம் வரை அதே முகவரியில் அல்லது எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில (**www.pubsec.gov.lk**) மனு ஆவணங்களை இலவசமாக பரிசீலனை செய்ய முடியும்.

04. தகுதியான அனைத்து மனுதாரர்களும் பொருட்களை வழங்குவதற்கான சட்டப்பூர்வ உரிமையைப் பெற்றிருக்க வேண்டும். மனுதாரர் தனது நிறுவனத்தை வணிகமாக பதிவு செய்திருக்க வேண்டும், மேலும் உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் பெருமதி **ரூ.05 மில்லியனுக்கும்** அதிகமாயின் 1987 இலக்கம் 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் **(Public Contract Act)** பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட மனுவுடன் இந்த பதிவுச்சான்றிதழின் நகல் பிரதிகள் இணைக்கப்படாதவிடத்து மனுக்கள் தகுதி நீக்கம் செய்யப்படும். மனுதாரரின் பெயர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது. மேலதிக விபரங்கள் மனு ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

05. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் பின்வரும் முகவரியில் எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை **2023.06.23** ஆம் திகதியிலிருந்து **2023.07.25** ஆம் திகதி வரை பொது மற்றும் வங்கி விடுமுறை நாட்களைத் தவிர வார நாட்களில் **மு.ப.09.00** முதல் **பி.ப.03.00** மணிவரை சமர்ப்பித்து **ரூ.12.000.00 (பன்னிரெண்டாயிரம்)** மீளச்செலுத்தப்படாத ஆவணக்கட்டணத்தைச் செலுத்தி அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஒரு நிறுவனத்திற்கு ஒரு மனுகோரல் விண்ணப்ப படிவம் மட்டுமே வழங்கப்படும்.

06. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் **2023.07.26** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் 14வது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடுதல் அல்லது மனுக்கள் திறக்கப்படும் நேரத்திற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மனுக்கள் இடப்பட்டுள்ள உறையின் இடது பக்கமேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தினை தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கால தாமதமாக கிடைக்கப்படும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மேலும் தனிப்பட்ட முறையில் சமூகமளிக்கும் மனுதாரர் அல்லது அவரது உரிமம் பெற்ற பிரதிநிதிக்கு முன்னிலையில் **2023.07.26** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு அமைச்சகத்தின் கேட்போர் கூடத்தில் மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற பின்னர் மனுக்கள் திறக்கப்படும் வேளையில் பங்கேற்கும் மனுதாரரின் பிரதிநிதிகள் மனுதாரரிடமிருந்து எழுத்துப்பூர்வ அனுமதியை கட்டயாம் பெற்றுத்தல் வேண்டும். மனுதாரரின் எழுத்துப்பூர்வ அனுமதியை வழங்கத் தவறிய எந்த முகவரும் அச்சந்தர்ப்பத்தில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

07. சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் செல்லுபடியாகும் காலம் **2023.07.26** ஆம் திகதியிலிருந்து **2023.10.25** ஆம் திகதி வரையாகும். (மனுக்கள் திறக்கப்படும் தினத்திலிருந்து 91 நாட்கள் வரையாகும்.)

08. அனைத்து மனுக்களும், **ரூ.720.000.00 (எழுநூற்றி இருபதாயிரம்)** பெறுமதியான மனுப் பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் சமர்ப்பிக்கப்பட்ட மனுப் பிணையானது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

    i. ஒரு நிதி நிறுவனமாக மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.

    ii. மனுப் பாதுகாப்புப் படிவம் மனு ஆவண தொகுப்பின் IV ஆம் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள ஆவணத்தின்படி இருத்தல் வேண்டும்.

    iii. மனு பிணையானது செயளாலர்,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு **"Secretary / Ministry of Public Security"** எனும் பெயரில் இருத்தல் வேண்டும்.

    iv. மனுப்பிணை **2023.07.26** ஆம் திகதி முதல் **2023.11.22** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். (மனுக்கள் திறக்கப்படும் தினத்தில் தேர்வு **119 நாட்கள் வரை**)

09. **2023.07.12 ஆம் திகதி 14.00** மணிக்கு **பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,** 14வது மாடி, **"சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல, விசேட அதிரடிப்படையின் கேட்போர்கூடத்தில்** முன்மனுக் கூட்டம் நடைபெறும்.

10. வழங்கப்படும் நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளில் ஏதேனும் திருத்தங்களைச் செய்வதற்கான உரிமையை கொள்முதல் குழுவினருக்கு உண்டு. கொள்முதல் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதி தீர்மானமாக காணப்படும்.

11. **மனுதாரர்களின் விசேட கவனத்திற்கு:**

    மனு ஆவணங்களை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ள **caminlofinance@gmail.com** மின்னஞ்சல் முகவரியைத் அல்லது **0112887916** என்ற தொலைநகல் இலக்கத்திற்கு தேவையான மனு ஆவணங்கள் பற்றிய தகவலை அனுப்பவும் மற்றும் முன் அறிவிப்பை வழங்கவும் வாடிக்கையாளருக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

12. மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் அல்லது தொலைபேசி எண்களினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**விலாசம் :-**
தலைமை கணக்காளர்,
14வது மாடி, "சுஹுருபாய",
ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்ல.

**தொலைப்பேசி இலக்கம :-**
பிரதான - 011-2887697
பொது - 011-2886067
தொலைநகல் - 011- 2887784/2887916

**தலைவர்,**
**அமைச்சின் பெறுகை குழு,**
**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,**
**14வது மாடி, "சுஹுருபாய",**
**ஸ்ரீ சுபூதிபுர வீதி,**
**பத்தரமுல்ல.**

---

### கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்
### கண்டி வீதி, யக்கல, இலங்கை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### க.வி.சு.ம.ப, வத்துபிட்டிவல மருத்துவப் பூங்கா திசு வளர்ப்பு ஆய்வகத்திற்காக மாற்றப்பட்ட கொள்கலன் அறைகளை (Container Cabins Converted for Tissue culture Laboratory) வழங்குதல், விநியோகித்தல், இணைத்தல் மற்றும் நிறுவுதல்

### IFB NO : GWUIM/FAD/SUP/AC/08/NCB/23/01

01. கீழ்க்காணும் உருப்படிகளின் கொள்வனவிற்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம் திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

| லொட் | உருப்படி | விபரம் | எண்ணிக்கை | விலைமனுப் பிணைத்தொகை (ரூ) மற்றும் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|
| 1 | 1 | திசு வளர்ப்பு ஆய்வகத்திற்காக மாற்றப்பட்ட 40 அடி ISO சான்றிதழ்பெற்ற மறுசீரமைக்கப்பட்ட கப்பல் கொள்கலன் அறைகளை வழங்குதல், விநியோகித்தல், இணைத்தல் மற்றும் நிறுவுதல் | 02 | 100,000/- 2023.11.13 வரை |

02. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனு (NCB) முறைமையின் ஊடாக நடத்தப்படும்.

03. ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்கள் யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், நிர்வாகக் கட்டிடம், தரைமாடி, நிதி நிர்வாகபிரிவு, உதவி நிதியாளர் (வழங்கல்கள்) இடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பேசி - 0332226109/0332222740 அல்லது - 0332222748 - நீடிப்பு 142 அல்லது 143) மின்னஞ்சல் : supplies@gwu.ac.lk அத்துடன் அலுவலக நேரங்களில் மேலே தரப்பட்டுள்ள முகவரியில் இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரிசீலிக்கலாம் அத்துடன் தொழில்நுட்ப தெளிவுபடுத்தல்களை யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், பராமரிப்பு பிரிவு, வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெறலாம். - 0332231681.

04. தகைமைகளும் உள்ளடக்கப்படும் தேவைப்பாடுகளும்.

    (i) அரச கூட்டுத்தாபனங்கள், நியதிகள் நிறுவனங்கள் அல்லது நம்பகரமான கம்பனிகளுக்கு மாற்றப்பட்ட கொள்கலன் அறைகளை வழங்குவதில் குறைந்தபட்சம் 05 வருட அனுபவத்தை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும் அத்துடன் செல்லுபடியாகும் வியாபார பதிவைக் கொண்டிருப்பதுடன் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருத்தல் வேண்டும்.

    (ii) சம்பந்தப்பட்ட துறையில் அரச அதிகார சபையினால் வழங்கப்படும் வியாபார பதிவுச்சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.

    (iii) 2022 இல் முடிவடைந்த கடந்த 5 ஆண்டுகளில் விலைமனு ஆவணத்தில் உள்ள விலைமனுத் தொகைக்கு மேற்பட்ட அல்லது சமமான குறைந்தபட்சம் இரண்டு உள்ளக செயற்றிட்டங்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

05. 2023.06.26 முதல் 2023.07.17 வரை மு.ப.9.00 மற்றும் பி.ப.3.00 இற்கு இடையில் கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம், காசாளருக்கு ஓர் மீளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3500/- ஐ செலுத்துவதன் பேரில் மற்றும் கீழேயுள்ள முகவரிக்கு ஓர் கம்பனி/நிறுவன கடிதத் தலைப்பில் ஓர் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியில் கிடைக்கும் ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். கீழேயுள்ள பந்தி 7 இல் தரப்பட்டுள்ளவாறு வீலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித்திகதிக்கு ஒரு நாளைக்கு முன்பு விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

06. விலைமனுக்கள் அசல் மற்றும் நகல் பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் அத்துடன் ஒவ்வொன்றும் வெவ்வேறான பொறியிடப்பட்ட கடித உறைகளில் உள்ளிட்டு "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி" என குறிப்பிடப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் பிரதி உள்ளடங்கிய இரு கடித உறைகளையும் ஓர் தனி கடித உறையில் உள்ளிடல் வேண்டும் அத்துடன் தயவுசெய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "க.வி.சு.ம.ப, வத்துபிட்டிவல மருத்துவப்பூங்கா திசுவளர்ப்பு ஆய்வகத்திற்காக மாற்றப்பட்ட கொள்கலன் அறைகளை வழங்குதல், விநியோகித்தல், இணைத்தல் மற்றும் நிறுவுதல்" என்று குறிப்பிடல் வேண்டும்.

07. 2023.07.18 பி.ப.2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்பு கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், நிர்வாகக் கட்டிடம், இரண்டாம் மாடி, பதிவாளர் அலுவலகத்தில் காணப்படும் "கேள்விப் பெட்டியில்" விலைமனுதாரரால் விலைமனுக்கள் வைப்பிலிடல் வேண்டும் அல்லது மேற்படி இறுதி நேரத்திற்கு முன்பு யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், திணைக்கள பெறுகைக்குழு என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

08. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் மேலே சொல்லப்பட்ட இடத்தில் விலைமனுதாரர்கள் அல்லது தனிப்பட்ட முறையில் சமுகமளிக்கும் அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் 2023.07.18ம் திகதி விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு விலைமனுக்கள் உடனடியாகத் திறைக்கப்படும். BDS இல் குறிப்பிட்டவாறு ஓர் விலைமனுப்பிணை எல்லா விலைமனுவுடனும் இணைக்கப்படல் வேண்டும்.

09. விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கு முன்பு எல்லா விலைமனுதாரர்களும் தளத்தை பரிசீலிக்குமாறு கடுமையாக அறிவுறுத்தப்படுகின்றனர் அத்துடன் தேவைப்படின் அளவைகளையும் பெற்றுக்கொள்ளலாம். எந்த வேலையையும் ஆரம்பிப்பதற்கு முன்பு அனுமதிக்காக வேலைகள் பொறியியலாளருக்கு எல்லா பொருட்களினதும் ஓர் சாம்பிலை சமர்ப்பித்தல் வேண்டும்.

10. எல்லா விலைமனுவுடனும் காசாக இலங்கை ரூபா ஒரு இலட்சம் (இ.ரூபா. 100,000.00) கொண்ட ஓர் விலைமனுப் பிணையை அல்லது விலைமனு சமர்ப்பித்த தினத்திலிருந்து 2023 நவம்பர் 13 வரை செல்லுபடியாகும். இலங்கையில் செயற்படும் ஓர் நம்பகரமான வர்த்தக வங்கியிலிருந்து நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதத்தை இணைத்தல் வேண்டும்.

11. யக்கல, கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தில் நிர்வாகக் கட்டிடத்தின் பதிவாளரின் அலுவலகத்தின் (2ஆம் மாடி) குழுக்களின் அறையில் 2023.07.05 மு.ப.10.00 மணிக்கு கேள்விக்கு முன்னரான கூட்டம் நடத்தப்படும் விலைமனுவுக்கு முன்னரான கூட்டத்தின் பின்னர் தள விஜயத்திற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்**
**கண்டி வீதி, யக்கல.**
**23.06.2023**

* Trusted Marketplace of Classified Advertisers...

SUNDAY OBSERVER adz It's what you want Classified

Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377

Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk

## சுற்றாடல் அமைச்சு

## விவசாய, வனவியல் மற்றும் ஏனைய நிலப்பயன்பாட்டுத் துறைகளில் (AFOLU) மேம்பட்ட வெளிப்படைத்தன்மைக் கட்டமைப்பிற்கான செயற்திட்டத்திற்கு ஆலோசகர் களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை 1993 ஆம் ஆண்டு முதல் காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டில் (UNFCCC) அங்கம் வகிப்பதுடன் 2016 ஆம் ஆண்டின் பெரிஸ் உடன்படிக்கையையும் ஏற்றுக் கொண்டுள்ளது. பாரிஸ் உடன்படிக்கையின் 13வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அளவீடு, அறிக்கையிடல் மற்றும் சரிபார்த்தல் (MRV) தொடர்பான திட்டமிடப்பட்ட மேம்பட்ட வெளிப்படைத் தன்மைக் கட்டமைப்பை (ETF) விருத்தி செய்ய வேண்டி உள்ளது. மேம்படுத்தப்பட்ட வெளிப்படைத்தன்மை கட்டமைப்பிற்கான வழிமுறைகள், நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் (MPGகள்) UNFCCC ஆல் உருவாக்கப்பட்டுள்ளன. அதன்படி, சுற்றாடல் அமைச்சு UNFCCC இன் தேசிய மையப் புள்ளியாக இருப்பதால் இலங்கையில் AFOLU துறைக்கான MRV அமைப்பு மற்றும் ETF ஐ நிறுவ எதிர்பார்க்கிறது.

உலகளாவிய சுற்றாடல் வசதி (GEF) வெளிப்படைத்தன்மைக்கான திறன் மேம்பாட்டு முயற்சிகள் (CBIT) மூலம் ETF நிதிக்கு இணங்க அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் திறன்களை உருவாக்க நிதி உதவி வழங்குகிறது. இந்த வகையில், ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் இணைந்து AFOLU துறையில் காலநிலை நடவடிக்கைகளின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக மேற்கண்ட திட்டத்தை இலங்கை உருவாக்கியுள்ளது.

சுற்றாடல் அமைச்சு மேற்கூறப்பட்ட திட்டத்தை செயற்படுத்தும் அமைப்பாக இருப்பதால், பின்வரும் ஆலோசகர்களுக்காக தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகிறது.

| | |
|---|---|
| **தேசிய ஆலோசகர் - ETF** | **ஒரு பதவி** |
| **தீவீரத் தணிப்பு தேசிய ஆலோசகர்** | **ஒரு பதவி** |
| **இயைபாக்கம் தேசிய ஆலோசகர்** | **ஒரு பதவி** |
| **தீர்மான ஆதரவு நிபுணர்** | **ஒரு பதவி** |
| **தேசிய MRV ஆலோசகர்** | **ஒரு பதவி** |
| **நிதி மற்றும் பெறுகை ஆலோசகர்** | **ஒரு பதவி** |
| **செயற்றிட்ட நிர்வாகி** | **ஒரு பதவி** |

மேற்கூறப்பட்ட பதவிகளுக்காக தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடம் தொழில்நுட்ப முன்மொழிவுகள் மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு சுற்றாடல் அமைச்சு வேண்டுகின்றது. சுருக்கமான சுய விபரங்கள் சகிதம் விண்ணப்பங்கள் மற்றும் தொழில்நுட்ப முன்மொழிவுகளை 2023 ஜூலை 06ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பணிப்பாளர், காலநிலை மாற்றச் செயலகம், (6ஆம் தளம்), சொபாதம் பியச, 416/C/1, ரொபர்ட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''விண்ணப்பிக்கும் பதவியை'' தயவு செய்து குறிப்பிடவும்.

மேற்கூறப்பட்ட ஆலோசகர்களுக்கான குறிப்பு விதிமுறைகள் மாதிரி விண்ணப்பபடிவம் மற்றும் தொழில்நுட்ப முன்மொழிவுகளுக்கான வடிவங்களை www.climatechange.lk மற்றும் www.enviromin.gov.lk. எனும் இணையதளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**செயலாளர்**
**சுற்றாடல் அமைச்சு**
**பத்தரமுல்ல**

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
## நகர அபிவிருத்தி அதிகார சபை
# கேள்வி அறிவித்தல்

## 05 வருட கால எல்லைக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் கொழும்பு-07, குதிரைப் பந்தய திடலின் உலாவும் நடைபாதையில் எம்எஸ் 2ஏ என்ற கடை இலக்கத்தை ஒதுக்கீடு செய்வதற்கான கேள்வி

1. ஐந்து (05) வருட கால எல்லைக்கு பின்வரும் கடையை மாதாந்த வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் இறைவரி கேள்வி சபையின் (கீழ் மட்டம்) தலைவரினால் முன்வைப்புக்கள் அழைக்கப்படுகின்றன.

| கொழும்பு-07, குதிரைப்பந்தய திடலின் உலாவும் நடைபாதையில் கட்டுமானம் | கடை இலக்கம் | மாடி | தரைப் பரப்பு (ச.அடியில்) | மாதாந்த அடிப்படை வாடகை (ரூபாவில்) | விலைமனு பிணையம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| சிறிய நிறுத்துமிடக் கட்டிடம் | ஏம்எஸ் 2ஏ | தரை மாடி | 1720.00 | 252,000 | 150,000.00 |

2. இந்தக் கடையானது 05 வருட கால எல்லைக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கப்படும். விலைமனுதாரரினால் முன்வைக்கப்படும் அதியுயர்ந்த மாதாந்த வாடகையை கருத்திற் கொண்டு பங்கு வழங்குபவருக்கான தெரிவு மேற்கொள்ளப்படும்.
3. குறிப்பிட்ட விலைமனுதாரரொருவர் கடைக்காக ஒரு விலைமனுவிற்கு மேலதிகமாக சமர்ப்பிக்க இயலாது.
4. இக்கடைக்காக மேலேயுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அடிப்படை மாதாந்த வாடகைப் பெறுமதிக்கு மேலதிகமாக அவர்களின் முன்வைப்புக்களை ஆர்வமுள்ள சாரார் முன்வைத்தல் வேண்டும்.
5. கடைக்காக முன்வைக்கப்படும் மாதாந்த அதியுயர் வாடகையானது 05 வருட கால எல்லைக்கான மாதாந்த வாடகையாக கருதப்படும்.
6. சித்திகரமான விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத முன் பணமாக 3 மாதங்களுக்கு சமமான தொகை மற்றும் பிரயோகப்படுத்தக்கூடிய வரிகளையும் செலுத்துதல் வேண்டும்.
7. மேலும், 3 மாதங்களுக்கான முன்வைக்கப்படும் மாதாந்த அதியுயர் வாடகைக்கு சமமான தொகையொன்றையும் சித்திகரமான விலைமனுதாரர் மீளளிக்கப்படும் பாதுகாப்பு வைப்புத் தொகையாக செலுத்துதல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள சாரார், 2023 ஜூன் 26 ஆம் திகதியிலிருந்து 2023 ஜூலை 19 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் 2.5% சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு மற்றும் அதன் மேலான 15% பெசேவ அடங்கலான மீளளிக்கப்படாத கட்டணமான பத்தாயிரம் இலங்கை ரூபாவை (10,000 இ. ரூ.) செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, I ஆம் கட்ட ''செத்சிரிபாய'', 8 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பிரிவிலிருந்து கேள்வி ஆவணத்தை கொள்வனவு செய்யலாம். மேலும், மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பிரிவில் கேள்வி ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
9. 2023 ஜூலை 21 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு கேள்விகள் மூடப்பட்டு மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே பத்தரமுல்ல, ''செத்சிரிபாய'', I ஆம் கட்ட 8 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, நிதிப் பிரிவில் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரது (ஆண்/பெண்) சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதியானவர் திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.
10. மேலதிக விபரங்கள் பத்தரமுல்ல, ''செத்சிரிபாய'', I ஆம் கட்ட 8 ஆம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, ஆதன முகாமைத்துவ அபிவிருத்திக்கான பணிப்பாளரிடமிருந்து அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 011-2875921, 011-2875916-20, 071 2798593 (நீடிப்பு 2960-2968).

**தலைவர்,**
**இறைவரி கேள்விச் சபை (கீழ் மட்டம்),**
**நகர அபிவிருத்தி அதிகார சபை,**
**''செத்சிரிபாய'', - I ஆம் கட்டம், 6 ஆம் மாடி,**
**பத்தரமுல்ல.**

## கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல் கேள்விகளுக்கான அழைப்பு

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்கள்/விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் பொருட்கள்/சேவை வழங்கல்களுக்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் அழைக்கப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இல. | விபரம் | கேள்விதாரர்கள்/ விலை மனுதாரர்களின் தகைமை | மீளளிக்கப் படாத கேள்வி / விலைமனு ஆவணக் கட்டணம் | விலைமனு முறி / பிணை பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. | CPD10/ 1395/ 2023 | 06 மாத காலத்திற்கு நிறப்பூச்சுகள் (Paints) மற்றும் அதுசார்ந்த பொருட்களை வழங்குவதற்கான விலைகளை அழைத்தல் | வர்த்தகப் பதிவுடன் இந்த வகையான வழங்கல்கள்/ சேவைகளில் அனுபவத்தை பெற்ற வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் | ரூபா 5,750.00 | 100,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 2. | CPD20/ 1405/ 2023 | 06 மாத காலத்திற்கு அஸ்பெஸ்டாஸ் சீட்கள், கண்ணாடி சீட்கள், ஆணிகள், கதவு பூட்டுகள், பைண்டிற் கம்பிகள், பிணைச்சல்கள், பொலித்தீன், கூரைத் தகடுகளை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கு விலைக் கோரலுக்கான விலைகளை அழைத்தல் | | ரூபா 5,750.00 | 100,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 3. | CPD09/ 1391/ 2023 | 06 மாத காலத்திற்கு மரப் பலகைகள், ஒட்டுப்பலகை சீட்கள் மற்றும் கதவுகளை வழங்கும் விலைக்கோரலுக்கான விலைகளை அழைத்தல் | | ரூபா 5,750.00 | 100,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 4. | CPD03/ 1393/ 2023 | 06 மாத காலத்திற்கு உருக்குப் பொருட்களை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கு விலைக்கோர லுக்கான விலைகளை அழைத்தல் | | ரூபா 5,750.00 | 200,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 5. | CPD11/ 1401/ 2023 | 06 மாத காலத்திற்கு மின்சாரப் பொருட்களை வழங்கும் விலைக்கோரலுக்கான விலைகளை அழைத்தல் | | ரூபா 5,750.00 | 200,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 6. | CPD11/ 1394/ 2023 | 06 மாத காலத்திற்கு PVC உருப்படிகளை (குழாய்கள், பொருத்தல்கள், சொல்வென்ட் சீமெந்து மற்றும் பல) வழங்கும் விலைக்கோரலுக்கான விலைகளை அழைத்தல் | | ரூபா 5,750.00 | 250,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |
| 7. | CPD11/ 0430/ 2023 | மின்சார உருப்படிகளை வழங்குவதற்கான கேள்வி | | ரூபா 5,750.00 | 500,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து** (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.
   அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.
   ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- **வட்டார அலுவலகம் 04,**
  இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,
  கொழும்பு 06.
- **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**
  மாளிகாகந்த,
  கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணக் கட்டணத்தை 2023-07-12ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்கள அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்கள் 2023 ஜூலை 12ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை கேள்விமனுக்கள்/ விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 150 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2023.12.09ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், மாநகர செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023 ஜூலை 13ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2023 ஜூலை 12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனு ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் கேள்வி/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் கேள்வி/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனுக்கள் மூடப்படும். கேள்வி/ விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர். 0112- 686389, 0112-686369, 0112-662329 என்ற தொலைபேசி இலக்கங்களில் தலைமை கணக்காளர் (பெறுகை) அவர்களிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஊ. 5.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கேள்வி/ விலைமனுக்களைக் கொண்ட கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய பொது ஒப்பந்தப் பதிவுடன் பதிவு செய்த பின் PCA (3) ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/LP/23/ PT/01/056 | Asphalt Concrete Wearing Coarse without transport | 25,000.00 | 1,000.00 | 2023.07.13 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/17/054 | 3600 KGS/ Grease EP-2 | 120,000.00 | 3,500.00 | 2023.07.13 ஆம் திகதியன்று பி.ப.1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/17/056 | 42840 Liters Diesel Engine Oil SAE 15 W – 40 CI - 4 | 459,000.00 | 3,500.00 | 2023.07.13 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 ஜூன் 23ஆம் திகதியிலிருந்து 4ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்) ,**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு - 01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 011-2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**